Registered at the G. P. O. as a News paper

விலை சதம் 15

வாரப்பதிப்பு

ஈழநாடு

EELA NADU National Tamil Daily தேசிய தினசரி

போன் 389 தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம், சோபகிருது சித்திரை 1ஆம் நாள் துல்ஹஜ் பிறை 19 (14-4-63) ஞாயிற்றுக்கிழமை இதழ் 65

ஆதரவாளர்களுக்கும், அனுபர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆர். பி. அன் பிறதர்

நிர். 178, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வடபகுதியில்

ரூ. 2 லட்சம் செலவில் மீன்பிடித்திட்டம்

உள்ளூர் மக்களின் சொந்த முயற்சி

தீவுப்பகுதி எம். பி. தெரிவிக்கும் தகவல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதியில் இரண்டுலட்சம் ரூபா செலவில் மீன்பிடித் திட்டமொன்று மிக விரைவில் அமுலாக்கப்படவிருக்கிறது. இத்திட்டம் வடபகுதியிலுள்ள பல மக்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதோடு பொருளாதார விருத்திக்கும் பெரிதும் உதவுவதாக இருக்குமென நம்பப்படுகிறது. உள்ளூர் மக்களின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்படவிருக்கும் இத்திட்டம்பற்றிய தகவலை தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா நமது நிருபரிடம் தெரிவித்தார்.

'தமிழ் மக்களுக்கு அரசியல் எவ்வளவு முக்கியமோ அதே போன்று பொருளாதாரமும் முக்கியமாகும் 'என திரு. கந்தையா குறிப்பிட்டார்.

திரு. கந்தையா மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ் மக்களுக்கு பொருளாதார விருத்திக்குரிய வழிவகைகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். தீவுப் பகுதியில் மிக விரைவில் சுமார் 2 அல்லது 3 லட்சம் ரூபா செலவில் மீன்பிடிச்சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உள்ளூர் மக்களின் கூட்டு முயற்சியுடனும், கடனுதவியுடனும் மீன்பிடிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சொந்தமாக மீன்பிடிக் கப்பல் ஒன்று வாங்கப்படும். இக்கப்பல் மூலம் வடபகுதிக் கடலில் மீன்களைப் பிடித்து பதப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். மீன்களைப் பதப்படுத்தி டின்களில் அடைத்து மக்களின் பாவனைக்காக விற்பனைசெய்யப்படும். இதனால் ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட முடியும்.

பருத்திச் செய்கை

மேலும் இப்பகுதிகளில் பருத்திச்செய்கையை மேற்கொள்ளுவது பற்றிய ஆலோசனையும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் முன்னர் பருத்தி விளைவிக்கப்பட்டு வந்துள்ளது. அதனுடன் இப்பகுதியிலுள்ளவர்களின் பெரும்பாலான வீடுகளில்கைராட்டினம் இருப்

(16-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் தமிழியக்கம் ஆரம்பம்

இராசதுரை ஆரம்பித்தார்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பில் இன்று காலை 9 மணியளவில் எல்லாம் தமிழியக்கத்தை மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை ஆரம்பிதது வைத்தார். பட்டிருப்பு எம்.பி.யும் தமிழரசுக்கட்சித் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், செனட்டர் எம். மாணிக்கம் ஆகியோரும் இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. ராஜதுரை, திரு. எஸ்.எம். இராசமாணிக்கம் செனட்டர் எம். மாணிக்கம் ஆகியோர் இன்று காலை மட்டக்களப்பு தபால் நிலையத்துக்குச் சென்று மகாதேசாதிபதிக்கும் பிரதமருக்கும் தமிழிற் தந்திச் செய்திகளை அனுப்பியதைத்தொடர்ந்து தமிழரசுக் கட்சியினரின் எல்லாம் தமிழியக்கம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

எல்லாம் தமிழியக்கத்தின் முக்கியந்துவத்தை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் அங்கு விநியோகிக்கப்பட்டன. தமிழில் வாசகங்கள் அச்சடிக்கப்பட்ட தபால் உறைகளைத் தொண்டர்கள் விற்பனைசெய்தனர்

இன்ஸ்பெக்டர் வருகை

இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மட்டக்களப்பு தலைமை நிலைய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அலெக் அபயசேகரா சப இன்ஸ்பெக்டர் ஜஸ்ப் நூர் தீன் ஆகியோர் தபாற்கந்தோருக்கு வந்திருந்தார்கள்.

திரு. இராஜதுரை இன்ஸ்பெக்டர் அபயசேகராவுக்கு வணக்கம் தெரிவித்து உரையாடினர்.

இராஜதுரையின் தந்திச் செய்தி

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை பிரதமருக்கு தமிழில் அனுப்பிய தந்தியில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

'தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் பழம் பெரும் குடியினர், இந்நாட்டில் அவர்களுக்கு உரிய உரிமையை மறுப்பது அரசியல் சட்டத்துக்கு முரணானது. தமிழ் மக்களின் உரிமைகளை சட்டபூர்வமாக்கி சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையே நல்லுறவை உண்டு பண்ணி ஈழவழநாட்டை பஞ்சமும் பசியுமற்ற பொன் கொழிக்கும் பூமி ஆக்குவீர்களாக'.

(16-ம் பக்கம் பார்க்க)

சீனாவில் மாசேதுங்குக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

கம்யூனிஸ்ட் அலுவலகம் தீக்கிரை

பெர்லின், ஏப்ரல் 13

சீனாவெங்கிலும் மாசேதுங்குக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாகக் கிழக்கு பெர்லினுக்குச் செய்திகள் கிடைத்துள்ளன.

இந்த பெப்ரவரியில், ஊகான் நகர்ப் பகுதியைச் சேர்ந்த ஹன்யாங்கில் ஆயிரக்கணக்கான வெறிகொண்ட மக்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்ததாகத் தெரிகிறது. இக்கூட்டம் பொலிசையும் இராணுவத்தையும் எதிர்த்து, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களையும், அரசாங்க அலுவலகங்களையும், தஸ்தாவேஜுகளையும் தீயிட்டுக் கொளுத்திற்று.

சில கம்யூனிஸ்ட் அதிகாரிகளை கைகளையும் கால்களையும் கட்டிக் கூட்டத்தினர் தூக்கிச் சென்றதாகவும் தெரிகிறது.

மாசேதுங் வீழ்ச்சியையும், பழைய தேசிய அரசாங்க வரவையும் விரும்பி எழுதிய சுவரொட்டிகளைக் கம்யூனிஸ்ட் அலுவலகச் சுவர்களில் ஆர்ப்பாட்டக் காரர்கள் ஒட்டினார்கள்.

இதே கூட்டம் ஓர் இராணுவ முகாமைத்தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்ற முயன்றதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மஞ்சூரியா, உள் மஞ்சூரியா, சிங்கியாங் ஆகிய இடங்களிலுள்ள பௌத்தர்களும், முஸ்லிம் தேசிய வாதிகளும் சமீப மாதங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதாகவும் தெரிகிறது. மக்கள் ஆலோசனைச் சங்கம், இஸ்லாமியக் கூட்டுச் சங்கம் ஆகிய அமைப்புகளின் உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடத்தியதாகவும் தெரிகிறது.

இது சம்பந்தமாகத் தேசியத் தலைவர்களும், சமயத்தலைவர்களும் ஏராளமாகச் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

"காரணமின்றி பொலிஸார் எம்மைத் தாக்கினர்"

பொலிஸாருக்கு எதிரான வழக்கில் எம். பி.க்கள் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் மீது வடக்குக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா ஆகியோர் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த வழக்கில் எதிரிகளுக்கு சம்மன்ஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மே மாதம் 16-ந் திகதி அவர்களைக் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டது.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரீண்டன்ட் வான்சன்டைன் தம்மீது பலாத்காரம் செய்ததாகவும், இன்ஸ்பெக்டர் ஒப்பத்தா தம்மை அடித்துக் காயம் உண்டுபண்ணியதாகவும் வழக்குத் தொடர்ந்துள்ளார். அவர் மாஜிஸ்டிரேட் திரு. வி. எம். குமாரசாமி முன்னிலையில் நேற்று வாக்குமூலமளிக்கையில் தெரிவித்ததாவது:

5-1-63 மாலை மந்திரி திரு. இலங்கரத்னவின் வருகையை யிட்டு எமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காகக் காங்கேசன்துறை வீதியில் உள்ள வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் கட்டிடத்தின் தாழ்வாரத்தில் வரிசையாக நின்றோம். மந்திரி எம்மைத் தாண்டிப்போன போது கறுப்புக்கொடி காட்டிப் "போங்கள்" என்று கூறினோம். மந்திரி சி. டபின்யு. ஈ. கட்டிடத்தில் நுழைந்தபின் நான், சிறிது தூரத்தில் நின்ற எனது மனைவியையும், அவருடன் வந்த சில பெண்களையும் காருக்கு வரும்படி கூறினேன். அந்த நேரத்தில் சுப்பிரிண்டன்ட் திரு. வான்சன்டைன் என்னைத் தள்ளிப் புறங்கையினால் முதுகில் அடித்தார். அங்கு நின்ற சில பொலிஸ் கான்ஸ்டபிள்களிடம் எம்மை

(16ம் பக்கம் பார்க்க)

வாசக நேயர்களுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சுபம் கொழிக்கும் சோபகிருது

சுபகிருது ஆண்டு பங்குனித்திங்கள் 31-ம் நாள் பின்னிரவு நாடி 48, விநாடி 39-ல் (இரவு 1 மணி 34 நிமிஷம்) அபரபட்ச பஞ்சமித்திதியில் கேட்டை நட்சத்திரம் 3-ம் பாதத்தில் பிறந்த சோபகிருது புதிய ஆண்டில் "சோபனங்கள் உண்டாகும்; மாரி ஒழியாமல் பெய்யும்; தொல்லுலகெல்லாம் செழிக்கும்—"

புத்தாண்டு பிறப்பதும் அதன்பின் நடக்கும் புதுப்பலன்களை மக்கள் அறிய ஆசைப்படுவதும் புத்தாண்டுப்பலன்களை காலக்கணிதர் பத்திரிகைகளில் எழுதுவதும் இன்று பருவழக்காகிவிட்டது. ஔவைப்பாட்டி கூறியபடி, 'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது.'' அப்படித்தான் பிறந்துவிட்டாலும் பூரணமாக வாழ்ந்து அனுபவித்து மறைய வழியுண்டா? பிறந்தவுடனே வகுத்த சாதகத்தின்படி வாழ்விலே என்ன நடக்கும்? நன்மை நடக்குமா? தீமை நடக்குமா? இவையெல்லாவற்றையும் அறியவிரும்புவது இயற்கையாகும். அந்த இயற்கையான குணத்தை – விருப்பத்தை நிறைவேற்றுவான் வேண்டி ஈண்டு இச்சோபகிருது ஆண்டிலே நடக்க இருக்கும் பலன்களை விரிவாக ஆராயவிழைந்தோம்.

சோதிட சித்தாந்தப்படி மானிடவாழ்க்கை 120ஆண்டுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இந்த 120 ஆண்டுகளையும் நவநாயகருக்கு அவரவர் கால வரைப்படி முன்னுள்ளோர் பகுத்துவழங்கியுள்ளனர். சூரியனுக்கு 6 ஆண்டுகளும் சந்திரனுக்கு 10 ஆண்டுகளும் செவ்வாய்க்கு 7 ஆண்டுகளும் இராகுவுக்கு 18 ஆண்டுகளும் வியாழனுக்கு 16 ஆண்டுகளும் சனிக்கு 19 ஆண்டுகளும் புதனுக்கு 17 ஆண்டுகளும் கேதுவுக்கு 7 ஆண்டுகளும் வெள்ளிக்கு 20 ஆண்டுகளுமாக இந்த 120 ஆண்டுகளையும் வகுத்துளர்.

பஞ்சாங்க சிரவணம்

உலகம் முழுமையையும் "நட்சத்திரங்கள்" என அழைக்கப்படும் சக்தியானது கொண்டு நடத்துகின்றது. இந்தக்கிரகங்கள் தத்தமக்குள் கிரியை முறைப்படி ஒழுங்கான கடமைகளுடன் நியதிதளம்பாதுதமது செயல்களை ஆற்றிவருகின்றன. எங்களது பழைய வேதங்களும் சாஸ்திரங்களும் ஒரு சனநாயக ஆட்சியில் எவ்வாறு அமைச்சரவை அல்லது மந்திரக்குழுவானது தங்களுக்குள் நிர்வாக ஆட்சிப் பொறுப்பைப் பகிர்ந்து, பல்வேறு துறைகளுக்குமுள்ள கடமைகளை வகுத்து செயலாற்றிவருகின்றதோ அவ்விதமான முறையில் உலகின் நிர்வாக நியதிக்கான சகலவற்றையும் இக்கிரகங்கள் தமக்குள் பங்குகொண்டு ஆற்றிவருகின்றனவெனக் கூறுகின்றன. ஒரு தேசத்திலே ஒவ்வொரு அமைச்சாக பகுக்கப்பட்டும் பின்அந்த அமைச்சுகள் ஒவ்வொன்றுக்கும் பல்வேறு துறைகள் பொறுப்பாகவகுத்து அமைக்கப்பட்டும் இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு துறையும் சட்ட ஒழுங்குப்படி திட்டவட்டமானகருமங்களை ஆற்றியும் வருவது போன்று கிரகங்களுக்குள்ளும் திட்டவட்டமான அமைப்பு முறையொன்றுண்டு. உலகின் ஆக்கல், பாதுகாத்தல், அழித்தல் சம்பந்தமான துறைகளில் இக்கிரகங்கள் பல்வேறுகடமைகளையும் தமக்குள் பங்குகொண்டாற்றி வருகின்றன.

பண்டைய அரசியல்-ஒழுக்க சாஸ்திரங்களின்படி ஒவ்வொரு நாட்டுக்கும் அரசன், பிரதம அமைச்சர், பிரதம தளபதி, பொதுவாதாரஅமைச்சர், தான்யாதி ஆதாரவமைச்சர், சலவாதாரவமைச்சர், பொருளாதாரவமைச்சர், கமத்தொழில் – தாவரத்துறை – கனிப்பொருள் ஆதியனவுக்கு பொறுப்பான இவ் விருவுத்தியோகத்தர்கள் கொண்ட ஒரு ஆட்சியமைப்பு இருந்துளவென்பது தெளிவாக அறியக்கிடக்கின்றது. இதே அமைப்புப்பிரகாரம் நவக்கிரகங்களிடையேயும் இந்த அமைப்பொன்றுண்டு. இந்த அமைப்பானது இயற்கைநியதி வயப்பட்டதாகும்.

1. இராசா-அமைச்சர் அவையின் முதல்வர், 2. பிரதம அமைச்சர், 3. சேனாதிபதி – (தரை, கடற்படையுட்பட), 4. ஸஸ்யாதிபதி (உணவாதாரத் துறைத்தலைவர்), 5. தானியாதிபதி- (தான்யங்கள்), 6. அர்க்காதிபதி -(நிதி), 7. மேகாதிபதி- (மழை-சலவாதாரத் துறைத் தலைவர்), 8. இரஸாதிபதி - (பொதுவாக காடுமுதலியவற்றிற்கதிபதி), 9. நீரஸாதிபதி- (கனிப்பொருள் முதலியவற்றிற்காய தலைவர்.)

நவக்கிரகங்களது செல்வாக்கானது மக்களது வாழ்விலும் உணவுப்பயிர்களுற்பத்தி, அவற்றின் அறுவடை, (இயற்கைக் கூறுபாடுகள், மழை - வெயில் - வெள்ளம்-வரட்சி-காற்று ஆதியவை) பொது அமைப்புகள் ஆதியனவற்றிலெல்லாம் ஊடுருவியுள்ளது. இக்கிரகங்களது செல்வாக்கானது நட்பானதாகவோ அல்லது பகையானதாகவோ அல்லது சமமானதாகவோ இருக்கும். கிரகங்களானது நாளாந்தமாக அசைந்துகொண்டே இருப்பதால் அவைகள் ஒரே

(10-ம் பக்கம் பார்க்க)

3 வருஷ டிப்பசிட் வட்டி

8%

சிலோன் றிசேவ் லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!
விஜயா சோடா கம்பெனி,
உரும்பராய்.

காணி விற்பனைக்கு

வவுனியா மாவட்டத்தில் மாங்குளம் பிரிவில், ஊஞ்சால் கட்டி குளத்தின் கீழ் 10 ஏக்கர் திறம் வயல் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் தொடர்பு கொள்ளவும். 83/1,B. A. தம்பிலேன், வண்ணார்பண்ணை.
860

யாழ்ப்பாணம்
ஐக்கிய இலாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது
100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும்வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std 14.

ஸி. டபிள்யூ. ஈ.
உங்களுக்கு வரவழைத்துள்ள
ஏககால ஒளி இணைப்புகள்





கிடைக்குமிடம்:
ஸி. டபிள்யூ. ஈ. ரேடியோ இலாகா
85, மெயின் வீதி, : : கொழும்பு.
ஸி. டபிள்யூ. ஈ. விற்பனை நிலையம்
21, பிறின் வீதி, : : கோட்டை.

REMEMBER NOW AND ALWAYS THE CWE BRINGS YOU TOP QUALITY AND VALUE

ஓம்தத்சத்
சோதிடம்
தங்களின் கடமை வாழ்வின்மேன்மையே
வீடு, கிணறு இடமமைத்தல்
விவாகப்பொருத்தம்,
சாதகம்பார்த்துப் பலன் சொல்லல்
இவைகள் மிகவும் திறமையான முறையாகச் செய்துதருவோம்.
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.
வே. த. மயில்வாகனம்
சோதிடர்

இலங்கா நிதி லிமிற்றெட்
நிரந்தர சேமிப்பு மூலம்

ரூபாய் 500 10 ஆண்டில் ரூபாய் 1000 ஆகும்
ரூபாய் 1000 „ „ ரூபாய் 2000 ஆகும்

குறித்த நிரந்தர சேமிப்பு 1 மாத அறிவித்தலின்பின் கீழ் குறித்த தொகையை எடுக்கலாம்.

சேமிப்பு	ரூ. 500-00	ரூ. 1000-00
1 ஆண்டின் பின்	ரூ. 535-00	ரூ. 1070-00
2 „	„ 572-00	„ 1144-00
3 „	„ 611-00	„ 1222-00
4 „	„ 652-00	„ 1304-00
5 „	„ 695-00	„ 1390-00
6 „	„ 745-00	„ 1490-00
7 „	„ 800-00	„ 1600-00
8 „	„ 860-00	„ 1720-00
9 „	„ 925-00	„ 1850-00
10 „	„ 1000-00	„ 2000-00

தலைமை ஆபீஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
•கிளை ஆபீஸ் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பர்களுக்கும்
ஆதரவாளர்களுக்கும்
வாடிக்கைக்காரர்களுக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
சந்திரா ஐஸ்கிரீம்
சிவன்கோவில் வீதி, — யாழ்ப்பாணம்.

சித்திரைநிலவு

— கச்சாயில் இரத்தினம் —

"இப்போ என்ன, நீங்கள் கேட்டதிலே ஓர் ஆயிரம் ரூபாதானே குறைகிறது உங்களுக்கு மனுஷன் பெரிதா அல்லது ஆயிரம் ரூபா பெரிதா?" என்றார் பெண்ணைப் பெற்ற வல்லிபுரம்.

"ஊ—கூ—ம் இந்தப் புருடா எல்லாம் கதிர்காமரிடம் செல்லாது. மனுஷன் பேசினால் ஒரு பேச்சாயிருக்க வேணும். இரட்டை நாக்குப் படைத்த உடும்புக் குணம் ஆகாது" என்று மாப்பிள்ளை மிடுக்கோடு கர்ச்சித்தார் கதிர்காமர்.

கல்யாணம் நின்றது.

"மாப்பிள்ளைக் கோல்த்தில் நின்ற மணமகனுக்கு ஒரே திகைப்பாகி விட்டது.

அவன் என்ன செய்தான்?

மாப்பிள்ளை ஆண்பிள்ளையானால்.

கல்யாண முகூர்த்தம் தடைப்பட்ட அதே தினம் இரவு புதுமணத் தம்பதி இருவரைச்சுமந்து கொண்டு கொழும்பு நோக்கிப் பறக்கிறது யாழ்ப்பாணம் மெயில்.

சித்திரை மாதத்துப் பால் நிலவு அன்றிரவு வீண்போகவில்லை....

அன்று மனேகரனுக்கு வந்த அந்தத் தந்தியைப் பார்த்ததும் அவன் மனசு துண்டிக்கப்பட்ட பல்லியினுடைய வால் துடிப்பதைப் போலத் துடித்துத் தவித்தது.

திடீரென அவனுடைய தந்தை அவனை உடனே ஒரு வார லீவுடன் யாழ்ப்பாணம் வருமாறு தந்தி அடித்திருந்தார் என்றால் அவன் அல்ல யாருமே சற்றுக் கலங்காமல் இருக்கமுடியுமா? என்ன?

சிந்தித்தான்; சிந்தித்தான். ஆனால் காரணம் என்ன என்பது மனேகரனின் சிந்தைக்கே எட்டவில்லை. என்ன செய்வான். தந்தியைக் கையில் எடுத்துக்கொண்டு நேரே மனேச்சரிடம் போனான்.

மனேகரன் என்றைக்கும் வேலையில் மிகச் சுறுசுறுப்பானவன்; நேர்மையானவன். மனேச்சர் எல்லாரிலும் பார்க்க மனேகரனிடத்தில் தனியான ஒரு மதிப்பு வைத்திருந்தார். அவருக்கு மனேகரன் தயக்கத்துடன் வருவதைப் பார்த்ததும் சற்று வியப்பாக இருந்தது. இருந்தும் அவர் அவனைக் கூறும்வரைக்கும் எதையுமே அவனிடம் கேட்பதில்லை என்ற மனத்திடத்தோடு ஒன்றும் அறியாதவரைப்போல இருந்துகொண்டார்.

தயங்கித் தயங்கிக்கொண்டே வந்த மனேகரன் மனேச்சருக்குக் கிட்ட வந்ததும் "சார், தயவுசெய்து நான் உங்களுக்குத் தொந்தரவுதர வந்துவிட்டேன் என்று எண்ணவேண்டாம். எனக்கு ஊரிலிருந்து தந்தி வந்திருக்கிறது. என்னை ஒருகிழமை லீவில் ஊருக்கு உடனே வரட்டுமாம்" என்றான்.

மனேச்சர் மனேகரனை ஒரு முறை ஏறஇறங்கப் பார்த்து விட்டு யார் உன்னை வரச் சொல்லித் தந்தி அடித்தவர்" என்று கேட்டார்.

"அப்பா"— இது மனேகரனின் தயக்கக்குரல்.

"ஓ! உனது தகப்பனா தந்தி அடித்து இருக்கிறார். நல்லது. ஒருவேளை உனக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்துவைக்க எண்ணித் தந்தி அடித்து இருப்பார். எதற்கும் நீ ஒரு முறை போய்வருவது நல்லது. உனக்கு எத்தனை நாட்கள் லீவு தரவேண்டும்" என்று சற்று அன்பு ததும்பக் கேட்டார் மனேச்சர்.

"சார், எனக்கு ஒருகிழமை லீவு தந்தாலே போதும்."

"நல்லது; நான் உனக்கு ஒருகிழமை லீவு தருகிறேன். நீ போகலாம்" என்று கூறிய மனேச்சர் "உனக்குச் செலவிற்குக் கையில் பணம் இருக்கிறதா?" என்று மிகக் கரிசனையோடு கேட்டார்.

"இல்லை; அட்வான்ஸ் நூறு ரூபாய் தந்தீர்களானால் நல்லது" என்று மிகத் தாழ்ந்த குரலில் குழைவோடு கேட்டான் மனேகரன்.

"நல்லது தருகிறேன்" என்று கூறிய மனேச்சர்

(6ம் பக்கம் பார்க்க)

★ தித்திப்பு பட்சணம் போடுவதற்கு ஒப்பந்தமான 'சுவீற் மேக்கர்' கறுப்பையனுக்கு 'ஆனந்த பவானில்' கசப்பான அனுபவம் காத்திருந்தது. அதுவரை அவ்வேலையில் இருந்த சின்னத்தம்பி எப்படியாவது கறுப்பையனை அங்கிருந்து வெளியேற்றிவிட எண்ணினான். இதிலிருந்து ஆரம்பித்த நெருக்கடி நாளாந்தம் புகைந்து குமைந்து புகையாகி, காற்றாகி, புயலாய், சூறாவளியாய், பூகம்பமாய் — முடிவிலே ஒரு நாள் எரிமலையாக வெடித்தே விட்டது....

தித்திப்பு

ஈழத்து சிவானந்தன்

ஆனந்தபவான் முதலாளி முத்துவைப் பெற்றெடுத்த பெருந்தகைகளுக்கு-பொறுமை நலம் விரும்பும் புண்ணிய சீலர்கள் 'கனகாபிஷேகம்' செய்ய வேண்டும். வள்ளுவர் காட்டிய பொறை உடைமை இலக்கணங்களை முதலாளிமுத்துபடித்திருக்க வசதியிருந்திருக்காது. 'பொறுத்தார்க்கு பொன்றும், துணையும் புகழ்" என்ற மேலான இலட்சியமுழக்கத்தை எங்காவது அவன் முழங்கியதும் இல்லை. ஏழ்மைத் தடாகத்தில் அரும்பியதால் அரை வயிற்றுச் சோற்றுக்காக அலைந்து திரியவே அவனுக்கு நேரம் போதவில்லை. சிறுபிராயத்தில் பலசரக்கு மாளிகைகளும்—பாத்திரக்கடையும்—ரெக்ஸ்ரைலும் - கபேக்களும் ஒரு காலத்தில் முத்துவைக் குட்டி உருட்டி, உதைத்து, அணைத்தவைதாம். அவனது அகத்திலே சதிராடும் சும்பவத் துணுக்குகளை— அனுபவங்களை முழுக்க முழுக்கக் கொடுத்த சில முதலாளிகளை இன்னும் தன் இதய பீடத்தில் நீங்காது நிலைத்திருக்க விட்டதால் தான் இன்று உழைப்பால் உயர்ந்து உன்னதமான நிலையில் நின்றும் அவனால் பணத்தைக் காப்பாற்ற-பொறுமையைக் கடைப்பிடிக்க முடிகிறது. பொறுமை இழந்து-சீறிப் பாய்ந்த சில முதலாளி வர்க்கத்தின் இரும்புக் கரங்கள், அவன் கன்னத்தைப் பதம் பார்த்த நாட்கள் எத்தனை? கன்னத்தில்படும் அடிகள் கருத்வத உடைத்து நீராக்கிக் கன்வழியே கசிய விட்ட வேளைகள் தான் எவ்வளவு? எல்லா அனுபவத்துண்டுகளும் ஒன்றாகி, பின்னிப் பிணைந்து கிடப்பதனால்தான் இன்று அவன் பூமாதேவிக்குச் சமானமானவன் எனக் கருதப்படுகிறான்.

★

"எல்லா இடங்களிலும் எப்படியாவது எனக்கு எதிர்ப்பு வந்துவிடுகிறதையா ...! எந்த வேலைகளையும் செய்யக்கூடிய அனுபவம் உள்ள எனக்கு இறைவன் இப்படி ஓர்எழுத்து எழுதிவைத்து விட்டானே ... வயிற்றை வளர்க்கவாவது பாப்பம் என்றால் இந்தப் பொறுமை உலகம் பொசுக்கிச் சாம்பலாக்க எண்ணுதே. நீங்கள் உளுந்து அரைத்து, மாவரைத்து முன்னுக்கு வந்தனீங்கள்! உங்களுக்கு என்னைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஏதாவது...வேலை இருந்தால்...?" என்று ஒரு நாள் ஆனந்தபவான் வாயிலில் நின்று கறுப்பையன் கண்ணீர் சிந்திக் கட்டுரைத்த போது முதலாளி முத்துவின் கண்கள் தம்மையறியாமல் இரண்டு முத்துக்களைத் தரையில் சிதற விட்டன. தலை சம்மதம் என்பதற்கறிகுறியாக 'சாத்வீக' அசைபோட்டது. கட்டான இரும்புத் தேகத்தையுடைய கறுப்பையன் 'குசினி' வேலையாளாய் ஆனந்த பவானில் நுழைந்ததும் தன் வித்துவத் தன்மைகளை கட்டவிழ்த்து விட்டான். ஏற்கனவே நின்ற 'குசினி' வேலையாட்கள் அங்கலாய்த்து மோவாயைத் தடவும் படியாயிற்று நேற்று வந்தவன், முந்தா நாளையானை முறியடித்தால் மனித மனத்தில் இயல்பான புகைச்சல் கிளம்பாமலா போகும்.

இதனால் கறுப்பையனில் பலர் கறள் வைத்தனர்!

அடுப்பினுள்கனன்றுகொண்டு இருக்கும் நெருப்பிலும் பார்க்க அடுப்பை மூட்டுபவர்களது நெஞ்சங்கள் வெம்மையைக் கூடுதலாகக் கக்கின. எல்லோரிலும் பார்க்க புங்குடுதீவுச் சின்னத்தம்பியின் சினம் ஆனந்தபவானையே அனலாக்கியது. இனிப்பு வகையறாக்களைச் செய்யக்கூடிய வல்லமை கறுப்பையனிடம் காணப்பட்டது. கறுப்பையன் வந்த இரண்டாம் கிழமையே சின்னத்தம்பி இட்லி, தோசை உத்தியோகத்துக்கு 'மாற்றப்'பட்டான். 'சுவீற் மேக்கர்' என்ற புதிய பட்டமும் கறுப்பையனோடு ஒட்டிக்கொண்டது.

சினம் கொண்ட சின்னத்தம்பியின் கண்கள் எப்பொழுதும் கறுப்பையனையே சுற்றிச் சுழன்றன. கொள்ளிக் கட்டையை ஒத்த பார்வை குறுக்கிடும் போதெல்லாம் ஓடி ஒளிந்து மறைந்து விடத்தான் கறுப்பையன் முயல்வான். தற்செயலாகப் படும் அனல் பார்வை அவன் இதயத்தைச் சுட்டுத் தழும்புவைத்திருக்கிறது. பெரு

(6-ம் பக்கம் பார்க்க)

ஞாயிறு சிறுகதை மலர்

வில்லியம்ஸ் பிஸ்கட்

ஸ்தாபனத்தார்

தங்கள் மனமுவந்த

புத்தாண்டு வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

நாடக விமர்சனம்

நள - தமயந்தி

நாதன்

நள-தமயந்தி கதை நாமெல்லோரும் அறிந்ததே. அதை நாடகமாக்கி ரஸிக்கும் வகையில் பாடல்களையும், வசனங்களையும் அமைத்து, அடுத்த காட்சியில் என்னவரும் என்ற ஆவலைத்தூண்டும் வகையில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் நடித்துள்ளனர்.

சூதாட்டத்தினால் அதிக கேடுவிளையும். நளன், சூதாட்டத்தினால் நாடு நகரம், யானை சேனை, பணிப்பெண்கள் அத்தனையும் இழந்தான். அதே சமயத்தில், சும்மாவந்த புட்கரன் சூதாட்டத்தினால் ஒரு ராஜ்யத்தையே வென்றுள்ளான். அதனால் சூதாட்டம் சிறந்தது என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் புட்கரனின் ஆட்சி நிரந்தரமற்றதாக அமைந்துவிட்டது.

இந்த நாடகத்தில் நடிப்பிற்கு முதலிடம் கொடுக்க வேண்டியது நளனுக்கும் தமயந்திக்கும்தான். அவர்களின் நடிப்பு இயற்கையாகவே அமைந்திருந்தது. காதல் காட்சிகளில் தத்தரூபமாக நடித்தார்கள் நளனின் குரல் ஆரம்பத்தில் பெண் குரல்போல் இருந்தாலும், சுயம்வரத்தின்பின்பு மாற்றம் காணப்பட்டது. நளனாக நடித்த செல்வி. ந. ஜெயலெஷ்மியும், தமயந்தியாக நடித்த செல்வி. இ. சாந்தகுமாரியும் நன்றாக பயிற்சிபெற்று நடித்துள்ளார்கள். சிரித்த முகமும், சிங்காரநடையும் உண்மையான தமயந்திதான் மேடையில் தோன்றுகிறாரா என ஐயுறச்செய்தது. மயந்தியின் உடலமைப்புள்ள உருவத்தை தேடி எடுத்துள்ளார்கள்.

நடிப்பில் அடுத்த இடம் கொடுக்கவேண்டியது கலியாக நடித்த செல்வி. லீலாவதிக்குத்தான் கலி மேடையில் தோன்றியதும், அந்தக் கறுத்த உருவமும், கரடுமுரடான தோற்றமும், கடுமையான பார்வையும் அழுகிற பிள்ளையைக்கூட அடங்கச்செய்துவிடும். சுயம்வரத்திலிருந்து வெறுங்கையுடன் திரும்பிவரும் தேவர்களைப் பார்த்துக் கேலியாகப்பேசும்போது கலியின் நடிப்பு இயற்கையாகவே அமைந்திருந்தது.

நாடகம் பார்க்கவந்த அத்தனைபேர்க்கும் காஞ்சனுவாக நடித்த செல்வி சிவன் உமைச் செல்வியை இலகுவில் மறந்துவிட முடியாது. மிடுக்கான பேச்சும், துடிப்பான நடிப்பும் எல்லோருக்கும் இலகுவில் வந்துவிடாது. காஞ்சனுவின் நளினமான பேச்சைக் கேட்டால், அந்த கரடுமுரடான பார்வையுடைய கலிகூட கட்டாயம் சிரித்திருப்பார். நாடகத்துறையில் நல்ல அனுபவமுள்ளவர்போல் தோழி காஞ்சனு, சிரிப்பு வெடிகளை அடுத்தடுத்து வெளியிட்டார். சாடிக்கு ஏற்ற மூடிபோல தோழியாக காஞ்சனுவுடன் தோன்றிய செல்வி சாந்தா தேவி, தான் பேசும் வார்த்தைகளின் கடைசிப்பாகத்தை மென்று விழுங்கி நடித்தது ரஸிக்கத்தக்கதாக இருந்தது.

வேடனாகவந்த செல்வி. செல்வக்குமாரியைப்பற்றி ஒரு வார்த்தை 'அற்புதம்' வயது குறைவானாலும், நடிப்பு நிறைந்திருந்தது.

வீமராசனாக நடித்த செல்வி குகஜோதி அடுத்தடுத்து அடுக்கு வசனங்களை எடுத்துக்கூறி மிடுக்காக நடித்துள்ளார். தன்னால் இயன்றளவு நடிப்பில் அக்கறை காட்டியுள்ளார்.

சுயம்வரத்தின்போது நடைபெற்ற நடனவிருந்து நன்றாக விருந்தது.

காட்சி ஜோடனைகளிலும், சீன்களிலும் நன்றாக கவனம் செலுத்தியுள்ளார்கள். அலுப்புத்தட்டாதவகையில் காட்சிகள் அடுத்தடுத்து சங்கிலிக் கோர்வைபோல வந்தது குறிப்பிடக்கூடிய ஒரு அம்சம் ஆரம்பத்தில் பெயர்கள் 'சிலேட்'டில் போட்டு காண்பிக்சப்பட்டாலும், மிகத் தெளிவாக இல்லை.

காதல்கொண்டாலே பயமென்ன?

தென்னாட்டில் தயாராகும் இந்திப்படம்

சரோஜாதேவி, ஷம்மிகபூர், பிரிதிவிராஜ்கபூர் ஆகியோர் நடிக்கும் உணர்ச்சிகரமான காதல் சித்திரத்தை விக்கிரம் புரடக்ஷன்சார் இங்கு தயாரிக்கின்றனர். இப்படத்திற்கு "பியார் கியா;கோடர்னுகியா" (காதல்கொண்டாலே பயமென்ன?) என்னும் பெயர் தரப்பட்டுள்ளது.

ஷம்மிகபூரும், சரோஜாதேவியும் காதலர்களாக நடிக்கின்றனர். பிரிதிவிராஜ் ஷம்மியின் தந்தையாக நடிக்கிறார்.

இப்படம் ஜூலையில் வெளிவரும் என்று தயாரிப்பாளரும் டைரக்டருமான பி. எஸ். ரெங்கா, தெரிவித்துள்ளார்.

புஷ்பவல்லியும், ருக்மணியும் இந்த இந்திப்படத்தில் நடிக்கின்றனர்.

நல்ல யோகம்

நடிகர் கே. ஏ. தங்கவேலு ஆனந்தம் புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் அவர் சொந்தமாகத் தொடக்கியுள்ள படத் தயாரிப்பு நிலையத்தில் 'நல்ல யோகம்" என்னும் படத்தைத் தயாரிக்கிறார். நகைச்சுவைப் படமாக உருவாகவிருக்கும் இந்த படத்தின் வசனங்களை தேவராஜன் எழுதுகிறார். வி. சீனிவாசன் டைரக்ட் செய்கிறார்.

—

குலப்பெருமை

'நல்ல தீர்ப்பு' படத்தைத் தயாரித்த ஸ்ரீ புரொடக்ஷன்தார் இரண்டாவதாகத்தயாரிக்கும் படத்திற்கு'குலப் பெருமை' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ராஜேந்திரன், பாலையா, ரங்கராவ், அசோகன், விஜயகுமாரி, புஷ்பலதா, சுந்தரிபாய் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. எஸ். ஏ. சாமி டைரக்ட் செய்கிறார்.

வருவது வரட்டும்

'நானும் ஒரு மனிதன் என்ற படத்தைத் தயாரித்துவரும் நடிகர் ஆனந்தன் அடுத்ததாக 'வருவது வரட்டும் என்ற பெயரில் ஒரு படத்தைத் தயாரிக்க விருக்கிறார்.

பாண்டி செல்வராஜ் கதை வசனம் எழுதும் இப்படத்தை சேஷகிரி ராவ் டைரக்ட் செய்வார்.

—

ஸ்வீகாரம்

நடிகர் டி. எஸ். பாலையா 'ஸ்வீகாரம்' என்ற பெயரில் தயாரித்துவந்து இடையில் படப்பிடிப்பு நடைபெறாமல் தடைப்பட்டிருந்த படத்தின் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

சிவாஜி கணேசன், தங்கவேலு, பாலையா ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர்.

கலை அரங்கம்

நேபா பகுதியில் ராஜ்கபூர்

வீரர்கள் நடுவே கலைநிகழ்ச்சி

நேபா பகுதியில் உள்ள இந்திய இராணுவத்தினர் நடுவே 3 நாட்கள் புயல்வேகத்தில் சுற்றி பிரபலஇந்திநடிகர் ராஜ் கபூரும் அவருடைய குழுவினரும் பல கலை நிகழ்ச்சிகளை நடித்தனர்.

"நாட்டைக்காக்க நீங்கள் (வீரர்கள்) துப்பாக்கியால் சுடுகிறீர்கள்; நாங்கள் (கலைஞர்கள்) கலாசாரத்தையும் பண்பாட்டையும் வளர்க்க காமராவால் சுடுகிறோம்" என்றுநேபா பகுதி இராணுவ வீரர்களிடம் பேசுகையில் ராஜ்கபூர் குறிப்பிட்டார்.

மூன்றுநாட்களிலும் இராணுவ வீரர்களிடையே அவர்கள் பல கலை நிகழ்ச்சிகளைச் செய்தனர். வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஆரவாரத்துடனும் அந்நிகழ்ச்சிகளைரசித்தனர்.

ராஜ்கபூரின் குழுவில், நகைச்சுவை நடிகர் ஆகா, நடன நடிகை மதுமதி, பின்னணிப் பாடகர்கள் முகேஷ், நர்வேகர், நடிகர்கள் மனோகர் தீபக், விஸ்வமேரா, கேமராமேன் ராது கர்மார்க்கர் ஆகியோர் சென்றிருந்தனர்.

நவீன வசதிகளும், உல்லாசமும் மிக்க எமது

"பாம் கோர்ட்" ஹோட்டல்

1-5-63 முதல் 3ம் குறுக்குத் தெருவிலிருந்து, யாழ்ப்பாணம் மெயின் வீதியிலுள்ள 202ம் இலக்க புதியகட்டிடத்துக்கு (சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு எதிராக) இடமாற்றம் செய்யப்பட விருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய இடத்துக்கு நமது பழைய வாடிக்கைக்காரர்களையும், புதிய விருந்தினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவர்களுக்கு நவீன வசதிகளுடன் சகல சௌகரியங்களையும் அளிக்க உறுதி கூறுகின்றோம்.

றெடி டியூன் சேவை

வட பகுதியில் எங்குமே இல்லாத றெடி டியூன் சாதனம்
ஒவ்வொரு அறையிலும் பொருத்தப்பட்ட ஒரே ஹோட்டல் இது.

ஒவ்வொரு அறையுடனும் குளிப்பதற்கான வசதிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

நிர்வாகிகளின் தனிப்பட்ட மேற்பார்வையும் கவனிப்பும் உண்டு.

எல்லாம் நவீன தளபாடங்கள். புத்தம் புதிய உபரணங்கள்.

விருந்தினர்களாக வருவோர்கள் தமது வாகனங்களை நிறுத்துவதற்கு தக்க இடவசதிகளும் உண்டு.

புதுவருட எண்ணமும் திண்மையும்

க. வை. ஆ. சர்மா

சோபகிருது வருடம் கழிந்தது. இன்று சோபகிருது என்னும் வருடமலர் அலரத் தொடங்குகிறது. மலரா? ஆம் காலக் கணிப்பிலே, பிரபவ என்பது முதல் அக்ஷய என்பது ஈறாக அறுபது அரும்புகளைக் கொண்ட மலர்க்கொத்திலேயுள்ள ஒவ்வொரு மலர் அரும்பி அலர்ந்து மணங் கமழ்ந்து வாடி வதங்கிக் கொண்டே இருக்கிறது. அவை ஒவ்வொன்றும் பன்னிரண்டு இதழ் கொண்டவை. இதழ்களே மாசங்கள். ஒவ்வொரு இதழும் விரியும்போது அதனுள்ளே உள்ள தேனைப் பருகத் துடிக்கின்றன உயிரினங்களாகிய தேனீக்கள். அவை யாவும் தேன் குடிக்கின்றனவா? கிடைக்காது ஏமாற்றமடைகின்றனவா?

உயிர் இனத்தில் உயர்வுடையது மக்கள் இனம். வாழ்விலே இன்பத்தை விரும்பாத மக்களே இல்லை. ஆயினும், அந்த இன்பம் தனித்துக்கிடைப்பதில்லை. இன்பமும் துன்பமும் கலந்து கிடைப்பதே இவ்வுலக வாழ்வின் இயல்பு. துன்பம் என்பது இல்லையாயின் இன்பம் இன்பமாகத் தோன்றாது. எனவே, இன்ப துன்பங்கள் இரண்டும் மக்களால் நுகரப்படவேண்டியனவேயாம். இந்த உண்மையை மக்களாகிய நாம் உள்ளபடி உணருவோமாயின் எமது வாழ்வின் குறிக்கோளை அடைவதற்கு வழிகாணலாம்.

மனித வாழ்விலே இன்ப துன்பச் சுழற்சி அலைகள் நம்மைத் தாக்கும்போது சகிப்புத்தன்மையோடு அவற்றை நுகர நாம் முற்படவேண்டும். சகிப்புத்தன்மை எல்லோருக்கும் எளிதில் கைகூடுவதில்லை. அதற்கு முதற்படியாக உள்ளது மன அமைதி. மனத்திலே பொங்கியெழும் ஆசைகள் அமைதியைக் கெடுத்துவிடும். "எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி ஏங்குதே எனது நெஞ்சம்" என்பது மன அமைதியின்மையைக் குறிக்கும் அருள்வாக்கு. அதனால், ஆண்டுக்கு ஒருமுறை யாவது எமது எண்ணங்களைத் திண்மையுறச் செய்யவேண்டும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்றார் தீர்க்கதரிசியாகிய திருவள்ளுவர்.

இக்காலம் எமது வாழ்க்கையில் குறுக்கிடும் பிரச்னைகளோ பல. அவற்றிற்குத் தீர்வுகாண்பது எப்படி என எண்ண வேண்டியது எமது கடமையாகும். எமது எண்ணம் திண்மையுறுவதற்கு மேலோர் வழிகாட்டியுள்ளனர். இதனை விளக்குவதற்கு வழியாக உபநிடதக்கதையொன்று நினைவுக்கு வருகிறது.

தேவர், மனிதர், அரக்கர் என்னும் முத்திறமானவர்களும் படைப்புக் கடவுளாகிய பிரமதேவனை அடைந்து தாய் உய்தியடைவதற்கான வழியை உபதேசித்தருளும்படி வேண்டினர். அப்போது பிரமதேவர் அந்த முத்திறத்தவர்க்கும் பொதுவாக 'த' என்னும் தாரகமந்திரத்தைக் கடைப்பிடியுங்கள் என உபதேசம் செய்தார். இதனைக் கூறுவது பிருகதாரண்ணிய உபநிடதமாகும்.

இதன் நுண்பொருள் யாதெனச் சிறிது சிந்திப்போம். தேவர், மனிதர், அரக்கர் ஆகிய மூவினத்தவர் மீளும் வெவ்வேறு உலகங்களில் வசிப்பவர் என்பது நூற்கொள்கையே ஆயினும், இப்பூமியிலே மனிதத் தோற்றத்திலேயே மனிதருக்குள் தேவர், மனிதருக்குள் மனிதர், மனிதருக்குள் அரக்கர் என இருக்கிறார்கள். அம்மூவரும் 'த' என்னும் தாரக மந்திரத்தை முறையே கடைப்பிடிக்கவேண்டும். தேவருக்குரிய 'த' என்னும் தாரகமந்திரப் பொருளாவது தன்னடக்கம். மனிதருக்குரிய 'த' என்னும் மந்திரப் பொருளாவது தானதருமம். அரக்கருக்குரிய 'த' என்னும் மந்திரப்பொருளாவது தயையாகும்.

நாம் மனிதருக்குள் தேவரா, மனிதருக்குள் மனிதரா, மனிதருக்குள் அரக்கரா என்பதை அறியமாட்டோம். எனவே தன்னடக்கம், தானதருமம், தயை என்னும் மூன்று குணங்களையும் மேற்கொள்ளுவோமாயின் எமக்குள்ள சிக்கலான பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு வழிவகுத்தவர்களாவோம்.

புதுவருடத் தொடக்கத்திலே நல்ல எண்ணத்துடன் சிந்தித்துத் தொடங்கிச் செய்யும் கருமங்கள் திண்ணியனவாக அமைந்து நன்மையே தரும். தன்னடக்கம் என்றவுடனே "நாம் எதற்காக, எவருக்கு அடங்கவேண்டும்?" என்ற வினா பலரது மனத்தில் எழலாம். நீதி நெறிக்கு மாறின்றித் தன்னைத் தான் அடக்குதலே தன்னடக்கம் எனப்படும். இதனையே ஐம்புலன் அடக்கம் என்பர். அடக்கம் என்பது பிறருக்கு அடிமையாதல் என்ற பொருளில் ஒரு போதும் அமையாது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்" என்று அடக்கத்தின் பயனையும்; "நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப்பெரிது" என்று அடக்கத்தின் பெருமையையும் வள்ளுவர் தெளிவுபடக் கூறியுள்ளார். அடக்கம் என்னும் அருங்குணத்தை மேற்கொள்ளாமையினாலன்றோ தேவ அரசனாகிய இந்திரன் அகலிகை விஷயமாகக் கௌதமமுனிவரது கொடுஞ் சாபத்துக்கு இலக்காகி என்றுந் தீராவசைக்கு ஆளாயினன்.

தானதருமம் என்பது பொருளை வாரிவழங்குவது மாத்திரம் அமையாது. காலமும் இடமும் அறிந்து, குறிப்புணர்ந்து நீதிக்கு மாறின்றித் தம்மால் இயன்ற பொருளைப் பிறருக்குக் கொடுப்பதேயாகும். பிரதிபலன் கருதிக் கொடுப்பது ஒருபோதும் கொடையாகாது. வறியவருக்குப் பயன்படும்படி கொடுப்பதே ஈகை எனப்படும். தானங்களுக்குள் எல்லாம் சிறந்தது அன்னதானம். அதாவது பசிப்பிணி மாற்றுதல். ஏனென்றால் 'போதும்' என்ற ஆத்ம திருப்தியைக் கொடுப்பதனால், வேறு எந்தப் பொருளை எவ்வளவு கொடுத்தாலும், 'போதும்' என்ற பூரணநிலை-நிரம்பிய தன்மை இலகுவில் உண்டாவதில்லை.

பசிப்பிணி போக்குதலே மிக உயர்ந்த தொண்டு. அதுவே மகேசுவர பூசையாகும். அன்னம் பரப்பிரம்ம சொரூபமானது. அதனால் சகல ஜீவராசிகளும் திருப்தியடைகின்றன. ஆகவே நிரம்ப உண்டாக்குங்கள். இவை பின்வரும் வேதவாக்கியப் பொருள்கள்:-

"அன்னம் பிரம்மேதிவ்ய ஜானத்", "அன்னத்யேன கல்விமானி பூதானி ஜாயந்தே", "அன்னம் பகுசர்வீத" என்பன.

ஒருவன் தனக்கென ஒரு பொருளைச் சேமித்துவைக்க விரும்புவானாயின் அப்படிச் சேமித்து வைக்கும் இடம் ஏழைகளின் வயிறேயாகும் என்ற கருத்தை வள்ளுவப் பெருந்தகையர், "அற்றார் அழி பசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி" என்று மிக நுட்பமாகக் கூறியுள்ளார்.

மூன்றாவதாக எமது உள்ளத்தில் உதிக்கவேண்டியது தயை. அதாவது கருணை. எந்த உயிராயினும் வருந்துவதைக் கண்டால், அறிந்தால் அதன்பொருட்டு உண்டாகும் உள்ளக்கசிவு இரக்கம்-அருள் எனப்படும். பிற ஏதுக்களால் ஒருயிர் வருந்துவதைக் காண எமது உள்ளம் கசியுமாயின், நாமாகவே பிற உயிரை வதைக்க மனம் வருமா? ஒரு போதும் வராது. பிற உயிரை வதைத்தல் என்பது எதற்காக? தனது விருப்பத்தை-இச்சையை நிரப்புவதற்காக. அருள் யாதெனில் பிற உயிரைக் கொல்லாமை. அருளல்லது யாதெனில் பிற உயிரை வதைத்தல். அது மிகக் கொடும் பாவமாகும். இந்த உணர்ச்சி எப்போதும் எமது உள்ளத்தில் உறையவேண்டும். அறியாமை காரணமாக இந்த இரக்கப்பண்பை இதுவரை காலமும் கொள்ளாது கழிந்த காலம் போக, இனிமேலாவது நாம் உய்தி பெறவேண்டுமாயின் புதுவருடத் தொடக்கத்திலேயே "எம்பொருட்டு எந்த உயிரையும் வதைக்க மாட்டோம்" எனத் திடமாக நாம் நிச்சயித்து அதனைக் கடைப்பிடித்துவர முயலவேண்டும்.

இனி, பிற உயிரை வதைத்தல் என்பதில் உணவின் பொருட்டுப் பிற உயிரைக் கொல்லுதல் மாத்திரமல்ல. தமது காம இச்சையை நிரப்புவதற்குப் பிறர் மனம் வருந்தச் செய்தலும் அடங்கும். உலகில் ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனுமே உரிமையுடையவராவர். தனக்கு உரிமையில்லாத பிறரை எவர் கூடமுயன்று மனம் வருந்தச் செய்திருக்கிறார்களோ அவர்களும் வதை செய்பவராவர். கருணையற்றவன் கண்ணராவர். எனவே, ஆற அமரச் சிந்தித்து எண்ணித் திண்ணியராக வாழ்வதற்குப் புதுவருடச் சோபனம் பொலிவதாகுக.

போதை தாகத்துக்கு 15 நாள் மருந்து

மிதமிஞ்சிய குடிப்பழக்கம், சிகரெட் பழக்கம், காப்பி பழக்கம் ஆகியவற்றைப் போக்குவதற்கான புதுமருந்து ஒன்றை இத்தாலி நாட்டு மருந்து தயாரிப்பாளர் கண்டுபிடித்துள்ளதாக லண்டன் செய்தி ஒன்று கூறுகிறது. தாங்கள் கொண்டுள்ள இப்பழக்கங்களை கைவிட முடியாதபடி மீண்டும் மீண்டும் இவற்றை உபயோகிக்க ஏங்குவதை இந்தமருந்து குணமாக்கி விடும் என்று கூறப்படுகின்றது.

"பிளவாள் பிடிக்" அமிலத்தால் ஆன இந்த மருந்து தாவரப் பொருளிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். இது பற்றிய விவரங்களை இத்தாலியப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

"இந்த மருந்து தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டது" என்று இம்மருந்தைக் கண்டுபிடித்தவரும் மிலான் சர்வகலாசாலையைச் சேர்ந்தவருமான டாக்டர் வியனர்டோ சான்டினி கூறினார்.

"மேற்கூறப்பட்ட பழக்கங்களை உடையவர்கள் இம்மருந்தை 15 முதல் 20 நாள் வரை சாப்பிட்டால் போதும். பிறகு 5 அல்லது 6 மாதங்களில் இப்பழக்கங்கள் அறவே ஒழிந்துவிடும். ஆனாலும் இந்த மருந்தைச் சாப்பிடுவதால் எதிர் விளைவுகள் எதுவும் ஏற்படாது" என்று இந்த மருந்து பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மிதமிஞ்சிய அளவுக்கு புகைப் பிடிப்பவர்கள், மதுபானம் அருந்துபவர்கள் ஆகியோருக்கு இந்த மருந்து நல்ல பலனை அளிக்கும். ஓரளவுக்கு இப்பழக்கங்களைக் கொண்டவர்களை இம்மருந்து பாதிக்காது" என்று டாக்டர் சான்டினி கூறினார்.

இந்த மருந்து சாப்பிட்டவர்களில் 10 சதவிகிதம் பேர் அறவே இப்பழக்கங்களிலிருந்து விடுபட்டனர். மற்றவர்கள் தங்களது பழக்கங்களை 20 சதவீதமாகக் குறைத்துக் கொண்டுவிட்டனர்.

எமது அன்பர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும் சோபகிருது வாழ்த்துக்கள்!

யாழ்-நகரில் சிறந்த

சைவ உணவுகளை சுகாதார முறைப்படி தயாரிப்பவர்கள்.

கிருஷ்ணபவான்

சைவ ஹோட்டல்

குறிப்பு: விசேஷவைபவங்களுக்குத் தேவையான உணவு சிற்றுண்டிகளுக்கு ஆடர்கள் எப்பொழுதும் கவனிக்கப்படும்.

35. கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்

புளு மருந்து

BAYER



T'GRAMS ROYAEL

பொலிடோல்

FOLIDOL

Agents

ROYAL DISPENSARY

PHONE 397 JAFFNA

தித்திப்பு

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

மூச்சாய் வெளிக் கிளம்புவதும் உண்டு. ஒரு சமையல்காரன் கூட கறுப்பையன் பக்கம் நின்று அவனது சாதுரியங்களை மெச்சவில்லை. எல்லாரும் ஓரணியில் நின்று சின்னத்தம்பியைத் தலைவனாக்கி கறுப்பையனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். முதலாளி முத்துவின் புன்சிரிப்பும், ஆதரவும் தான் அவனை ஆனந்தபவனில் நிலைக்க வைத்தன. நாளாந்தம் சின்னத்தம்பி விதம் விதமான பேச்சுக்களால் கறுப்பையனை அணு அணுவாக வருத்தத் தொடங்கினான். எப்படியும் ஆனந்த பவனை விட்டு கறுப்பையனை வெளியேற்ற வேண்டும் என்று சின்னத்தம்பி கங்கணம் கட்டிக் கொண்டான். சின்னத்தம்பியின் நெருப்புப் பார்வையும்—சூடான கிண்டலும் கறுப்பையனின் பொறுமையை எல்லைக்கு மீறிச் சோதித்தன. இனி இம்மியளவும் பொறுக்க முடியாது என்ற நிலை தலை காட்டியது. முதலாளியிடம் பல தடவைகள் முறையிட்டும் பலனைக் காணவில்லை. "பொறுமையாயிருந்து ஒரு மாதிரியாக் காலத்தை ஓட்டு. திறமைக்கு எங்கும் எதிர்பு இருந்து தான் தீரும்!" என்று சமாதானம் சொல்வதோடு முதலாளி தன் வேலையை முடித்துக்கொண்டார். கறுப்பையன் சின்னத்தம்பியை நோக்கி கையைக் காலை நீட்டி விட்டு—கம்பி நீட்டி விடலாமென்றால், அதுவும் முடிகிற காரியமில்லை. சின்னத்தம்பியைச் சுற்றி குறைந்தது நான்கு பேராவது நின்று கொண்டிருப்பர். அனுபவ முத்திரை அவனுக்கு 'ஹெட்குக்' பட்டத்தைக் கொடுத்திருந்ததால் அவனைக் கேட்டே சகவேலையாட்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. சுவீற் மேக்கருக்கு மட்டும் 'கெட்குக்'குக்குள் கட்டுப்பட வேண்டிய நிபந்தனை இல்லை. நிபந்தனையற்ற சுதந்திர வாழ்வும் சுவீற்மேக்கரான கறுபபையனுக்கு கசப்பை வாரி இறைத்தது. தன் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள எந்த வழியும் கிட்டாது விழித்த கறுப்பையனுக்கு ஒரு யோசனை பாதை காட்டி நின்றது. "சின்னத்தம்பியில்லாத சமயத்தில்... சமையல்காரர் இல்லாத வேளையில் ...இட்லி மாவுக்குள் கொஞ்சம்...

கறுப்பையனின் சிந்தனை அலைகள் ஓய்ந்தன! கனன்று காண்டிருந்த நெஞ்சமும் இலேசாகியது.

அன்று ஞாயிற்றுக் கிழமை- ஆனந்த பவனை விட்டு வெளியேறி ஐந்து நிமிடங்களில் திரும்பினான் கறுப்பையன். சின்னத்தம்பி மேல் மாடிக்கு ஏதோ அலுவலாய்ச் சென்று விட்டான். சில சமயற்காரர்கள் லீவில் போய்விட்டார்கள். மீதப்பேர் முத்துவிடம் பணம் வாங்கிக்கொண்டு முத்து மண்டபம் சென்று விட்டார்கள். 'கிளீனர்களும்' சப்ளை செய்பவர்களும் முன்பக்கத்தில் மும்முரமாக வேலையிலீடுபட்டிருந்தனர். 'குசினி' வெறிச்சோடிக் கிடந்தது. எரியும் நெருப்பும் -மேலெழும் புகையும் சின்னத்தம்பியின் கண்களையும்-பெருமூச்சையும் நினைவூட்டி அச்சுறுத்தியபோதும் கறுப்பையன் துணிச்சலுடன் தன் காரியத்தைத் திடுதிப்பென்று முடித்துவிட்டான்.

அப்பொழுது-

"டேய்!... அயோக்கிய ராஸ்கல்... இட்லி மாவுக்குள் என்னடா போட்டனீ..?" என்று கனல் கக்க கேட்டுக் கொண்டு மாடிப்படிகளால் இறங்கிவந்தான் சின்னத்தம்பி. கறுபபையனின் உள்ளம் படபடத்தது. உடல் வெடவெடத்தது. உணர்ச்சியற்று மரக்கட்டையாய் நின்றிருந்தான். வந்த வாக்கில் சின்னத்தம்பி தன் கரங்களைக் கறுப்பையனின் கன்னங்களில் விளையாடவிட்டான். திக்பிரமை கொண்ட கறுப்பையனால் எதுவும் செய்ய இயலவில்லை.

'குசினி' விவகாரம் எப்படியோ முத்துவுக்குச் சென்று விட்டது. "சின்னத்தம்பீ... பொறு" எனக் கத்தியபடி வந்த முத்து-இரும்புப்பிடியிலிருந்த கறுப்பையனை மீட்டுத் தனியே கூட்டிச்சென்றார்.

"ஐயா! ஆத்திரத்தால்..." என்று கறுப்பையன் ஏதோ சொல்ல வாயெடுத்தான். 'உஸ்ஸ்...உஸ்ஸ்..." என உதட்டைக் கூப்பிச் சுட்டுவிரலை வைத்து ஒலி யெழுப்பிவிட்டு லாச்சியைத் திறந்து; ஒரு கடதாசி உறையை பெற்ற கறுப்பையனை உருக்கத்தோடு ஒருகணம் நோக்கினான். வந்த பொழுது சாத்வீக அசைப்போடு அழைத்தது போல் வெளியில் போகும்படி தலையால் 'சைகை' செய்தான். தனக்கு மன்னிப்பே கிடையாதெனக் கருதிய கறுப்பையன் -இட்லி மாவுக்குள் உப்புச் சோடா போட்டதால் தனக்கு உப்பிட்டவரையும் பிரியவேண்டியிருக்கிறதேயென நினைத்து நெக்குருகியபடி ஆனந்த பவனை விட்டு வெளியேறினான்.

நடந்துசெல்லும் கறுப்பையனைப் பார்த்தபடி நின்ற முத்துவின் கண்களில் நீர் திரையிட்டு மணி திரட்டி உதிர்ந்தது. திறமையான 'சுவீற்மேக்கர்' செல்கிறானே என்ற ஏக்கமா? அல்லது பொறுமையாய்க் காலத்தை ஓட்டத்தெரிந்த ஒரு மனிதப் பூச்சியைப்பற்றிய இரக்கமா? எது?

(யாவும் கற்பனை)

எங்கள் சிறுகதைகள்

அனுபவக்கதை உருவாகும் பொழுது முற்றும் உருமாறுதல் அடைந்துவிடுகிறது. நான் கண்ட சம்பவத்திற்கும் புனைந்திருக்கும் கதைக்கும், காக்கை ஏறுவதற்கும் பனம்பழம் விழுவதற்கும் எவ்வளவு சம்பந்தம் உண்டோ அதற்குமேல் இருப்பதில்லை. எழுத்தின் மூலமாக வாழ்க்கையைப் போட்டோ பிடிப்பது முடியாத காரியம். எழுத்தாளனுடைய மனமென்னும் மஞ்சள் நீர் பட்டால் சம்பவத்தின் கோலம் புதுமையாக மாறிவிடும். சம்பவங்கள் நடக்கும்பொழுது அவைகளில் கருத்து இருந்தாலும் நமக்கு விளங்காது. சம்பவம் எழுத்தாளனுக்குள் நுழைந்து விட்டால் அதிலுள்ள கருத்தே கதையாகிவிடுகிறது

—ந. பிச்சமூர்த்தி

'எப்படிக் கருத்துக்கள் மனத்திலே எழுகின்றன?' என்று யாராலும் சொல்லமுடியாது. உன் மனத்தில் ஓடிக்கொண்டிருக்கிற உணர்ச்சிகளைச் சில சந்தர்ப்பங்கள் தூண்டிவிடுகின்றன. பாடி வருகிற மலை அருவி, அந்திப்பொழுதில் காணும் செக்கர் வானம், வெள்ளென்று வெளுக்கிற விடியற்கால வனப்பு, காற்றின் சலனம், வெண்ணிலவு, மழை யிருட்டின் குழப்பம் ஒரு கண் சிமிட்டல், ஒருகை அழைப்பு, ஒரு வனிதையின் வளையொலி, ஒரு மணியின் மதுரநாதம்—ஏதோ ஒன்று போதும், ஒரு கூர்மையான உள்ளத்திற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் இப்பொழுது நடக்கிறதுபோல [illegible] விரிந்துவிடும்.

—ரா. ஸ்ரீ. தேசிகன்

என் கதைகளில் எதையாவது ஒன்றைக் குறிப்பிட்டு அது பிறந்த விதத்தைச் சொல்லுவதென்றால், ரிஷிமூலம் நதிமூலம் காணுகிற மாதிரித்தான். சில ஆபாச வேட்கையில் பிறந்திருக்கலாம்; சில குரோதபுத்தியின் விளைவாகப் பிறந்திருக்கலாம்; வேறு சில அவை சமகும் பொருளுக்குச் சற்றும் சம்பந்தமே இல்லாத, ஒரு காரியம் கைகூடாதபோது எழுதப்பட்டிருக்கலாம். இதனால் சுயமாகக் கற்பனைபண்ணிக்கொண்டிருக்கிறவனுக்கு, இன்னது தான் இந்தக் கதையைத் தூண்டியது. என்று சொல்வது எளிதல்ல: கேட்டால், "என்னமோ தோணித்து எழுதினேன்" என்றுதான் சொல்லவேண்டியிருக்கும்.

—புதுமைப்பித்தன்

நிமிஷத்துக்கு நிமிஷம் நம் மேல வாழ்க்கையின் அனுபவங்கள் மோதிக்கொண்டே இருக்கின்றன. நாம் என்ன மண்ணா? மரமா? கேட்பதும் பார்ப்பதும் நம் வளர்ச்சியில் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ளாமல் வியர்த்தமாகப்போய் விட?

—ந. சிதம்பரசுப்ரமண்யன்

★ சித்திரை நிலவு ★

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

தமது பக்கலில் இருந்த 'சேபை திறந்து நூறுரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து நீட்டினார்.

மனோகரன் அதை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக் கொண்டு அவருக்குத் தனது நன்றியைக் கூறிவிட்டு, நேரே தானிருக்கும் அறைக்கு வந்தான். வரும்போதும் வழி நெடுக அவனுடைய மனசு தீவிரமாக வேலை செய்துகொண்டே இருந்தது. சில வேளை மனேச்சர் கூறியதைப் போன்று பெற்றோர் திருமணத்துக்கு ஒழுங்கு செய்துகொண்டு தனக்கு உடனே வருமாறு தந்தி அடித்து இருப்பார்களோ என்பதை எண்ண அவன் மனசு தேனைச் சுவைத்த கரடியின் மனசைப் போலக் குழைந்தது.

யாருக்குத்தான் திருமணம் என்றால் பிடிக்காது போகும். மனோகரன் என்ன சகலத்தையும் துறந்த ஞானியா? அல்லது பிரமச்சாரியத்தை அனுட்டிப்பவனா? அவனுக்கும் இரண்டொரு வயசு குறைந்ததர்கள் கூட ஊரில் கலியாணஞ் செய்துகொண்டு வந்து கொழும்பில் தனிக்குடித்தனம் நடத்துவதை அவன் காணவில்லையா? காணும்போதெல்லாம் அவன் மனசு ஏங்கித் தவிக்கவில்லையா என்ன!

மனோகரனுடைய முகத்தில் என்றைக்குமில்லாத விதத்தில் மகிழ்ச்சிக்குறி நடமாடுவதைக் கவனித்த அவன் நண்பர்கள் அவனைச் சுற்றி வளைந்துகொண்டார்கள்.

"என்ன அப்பா மனோகர், என்றைக்கும் இல்லாத விதத்தில் இன்றைக்கு உன்னுடைய முகத்தில் சந்தோஷக்குறி காணப்படுகிறதே? ஒளிக்காமல் எங்களிடம் உள்ளதைச் சொல். ஊரிலிருந்து உனக்கு ஏதாவது சந்தோஷச் செய்தி வந்ததா? சொல்!" என்று கூறிக் குமார் கிண்டல் செய்தான்.

மறுநாட் காலையில் மனோகரன் மனத்துடிப்போடு வீட்டிற்கு வந்து சேர்ந்தான். வீட்டிலே எல்லாரும் நல்ல சுகமாக இருந்தார்கள்.

அவன் தாயார் அவனைக் கண்டதும் "மனோகர்,என்னடா முளிக்கிறாய்! உன்னை கொப்பர் உன்னை உடனே வா எண்டு தந்தி அடிச்சுப்போட்டார் எண்டா?" என்று கேட்டாள்.

"ஏன் அம்மா, நீங்கள் எல்லாரும் நல்லாய் இருந்து கொண்டு என்னை இப்ப என்னத்துக்கு வீணாய் ஒருகிழமை லீவு எடுத்துக்கொண்டு வரச் சொல்லித் தந்தி அடித்தனீங்கள்" என்று வெறுப்போடு மனோகரன் கேட்டான்.

"எட விசரா, காரியம் இல்லாமல் உன்னை நாங்கள் சும்மா கூப்பிடுவோமா? எல்லாத்துக்கும் உன்னை கொப்பர் வரட்டுக்கும் சொல்லுகிறேன். நீ போய் உந்த உடுப்பை மாத்திக்கொண்டுவா" என்றாள் தாய் தங்கம்.

மத்தியானம் சுமார் பதினொரு மணி இருக்கும். மனோகரனின் தகப்பன் ஒரு வண்டி நிறைய அரிசி, காய்கறி வகைகள், வாழைக்குலைகள், வெற்றிலை, பாக்கு முதலான பொருட்களுடன் வீட்டிற்கு வந்துசேர்ந்தார்.

மனோகரனின் தங்கை விசாலாட்சி "அண்ணா, இவையெல்லாம் எதற்கெண்டு உனக்குத் தெரியுமா?" என்று கேட்டுக் கொண்டே அங்கு ஓடிவந்தாள்.

மனோகரன் "ஊகூம், எனக்குத் தெரியாது. இவை எல்லாம் எதற்காக இப்பொழுது இங்கு வாங்கி வந்து இருக்கிறார்" என்று வியப்போடு கேட்டான்.

"என்ன அண்ணை! நீ இவ்வளவு பெரிய ஆளாகியும் இன்னும் ஒன்டும் விளங்காமல் நிக்கிறியே. நாளைக்கு உனக்கும் எங்களின்ரை வல்லிபுர மாமாவினுடைய மகள் நாகேஸ்வரிக்கும் கலியாணம்" என்றாள் சூதுவாதறியாத சிறுமி விசாலாட்சி.

மனோகரனுடைய கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அவன் தனது தங்கையைப் பார்த்து "ஆரது வல்லிபுரம் மாமா மகளா? அவரை எனக்குத் தெரியாதே" என்றான்.

"வல்லிபுரம் மாமாவை உனக்குத் தெரியாது. அவர் சிங்கப்பூரிலிருந்து போனவரியந்தான் வந்தவர். நாகேஸ்வரி மச்சாள் நல்ல வடிவு. நல்லாய் வயலின் வாசிப்பா. தங்கமான குணம். அவமட்டும் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டா எண்டால் பிறகு வீடு ஒரே கலகலப்பாய் இருக்கும்" என்றாள் விசாலாட்சி.

அப்பொழுது அதைக் கேட்டுக்கொண்டு அங்கு வந்த மனோகரனின் தகப்பன் கதிர்காமர் "ஏ விசாலம்! உனக்கு அண்ணனோடை என்னடி கதை. இங்கே வா! இந்தப் பாயைக் கொண்டுபோய் வீட்டிலே ஒருபுறமாய் விரித்து அதில் கரய்கறிகளைப் பரப்பிவை. போ கெதியாய்" என்று கூறி அவளை அதட்டினார்.

விசாலம் ஓடிப்போய் அவர் சொன்ன வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். மனோகரன் வாசிகசாலைக்குப் பேப்பர் பார்க்கப் போய்விட்டான்.

மறுநாள் விடிந்தது தான் தாமதம். அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் கலியாணவீட்டிற்குப் பந்தல்போட அங்கு வந்துவிட்டனர். வண்ணான் வந்து வீடெல்லாம் வெள்ளை கட்டினான். அன்று கதிர்காமருடைய வீடு என்றுமில்லாத களையோடு விளங்கிற்று.

கதிர்காமர் பந்தல் சோடினை சோடித்துக்கொண்டு நின்றவர்களைப் பார்த்து "பொழுதுபட ஏழுமணிக்குத் தாலிகட்டு. நீங்கள் அதுக்குத் தக்கதாக வேலையைக் கொஞ்சம் சுறுக்குப்பண்ணி முடித்துப்போடப் பாருங்கோ" என்று கூறி எச்சரித்தார்.

மணி ஐந்தாயிற்று. மணப்பந்தலில் சனங்கள் வந்து கூடிவிட்டார்கள். மேளகாரர் தவிலில் தமது தாளவரிசையைக் கைவரிசையால் எடுத்துக் காட்டி வாசித்துக்கொண்டிருந்தார்கள்.

பெண்வீட்டார் மாப்பிளை மனோகரை உடுத்தி அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சீதன உறுதி எழுதவென்று நொத்தாரிசு வேலுப்பிள்ளையும் அங்கு வந்துசேர்ந்துவிட்டார். அவர் கதிர்காமரை அழைத்து "என்ன, ஆயத்தமா சீதன உறுதி எழுத?"என்று கேட்டார்.

அப்பொழுது வல்லிபுரம் "ஓ! சீதன உறுதி எழுதமுந்தி நான் உங்களோடை ஒரு கதை கதைக்கவேணும் தனிமையில்" என்று கூறிக் கதிர்காமரைக் கண்சாடை காட்டிக் கூப்பிட்டார். வல்லிபுரம் முன்னும் கதிர்காமர் பின்னுமாகத் தனிமையான இடத்துக்குப் போனார்கள்.

வல்லிபுரம் சற்றுத் தயக்கத்துடன் "தயவுசெய்து நான் எங்களுக்குத் தருவதாகக் கூறிய தொகையில் ஒரு ஆயிரத்தை விட்டுவிடுங்கோ! என்னிடம் இருந்ததை எல்லாம் பொறுக்கி நொறுக்கி எடுத்தும் ஆகப் பதினாலாயிரந்தான் சேர்ந்தது. குறை நினையாதேயுங்கோ!" என்று தாழ்ந்த குரலில் கேட்டார்.

கதிர்காமருடைய முகம் கோபத்தினால் செக்கச் சிவந்துவிட்டது. அவர் வல்லிபுரத்தைப் பார்த்து "நீங்கள் இருக்குமட்டும் இருந்துவிட்டுக் கடைசி நேரத்தில் அதுவும் நூறுபேர் முன்னிலையில் என்னை ஏமாற்றலாமென்டா பாக்கிறியள்? அது முடியாது. நீங்கள் என்னிடம் பேசினபடி காசு பதினையாயிரத்திலே ஒருசதங் குறைஞ்சாலும் நான் கலியாணஞ் செய்யவிடமாட்டேன்." என்று கடுகடுப்பாய்ப் பலத்த குரலில் தன்னையும் மறந்து கூறினார்.

அவர்கள் அப்படி வாக்குவாதப்படுவதைக் கண்டவர்கள் அத்தனை பேரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள்.

"வல்லிபுரம் இப்ப என்ன! நீங்கள் கேட்டதிலை ஆயிரம் ரூபாய் மட்டுந்தானே குறைகிறது. மனுஷர் பெரிசா? அந்த ஆயிரம் ரூபாய் பெரிசா? என்னிடம் உள்ளதே அவ்வளவுதான். எனக்கு வேறு பிள்ளைகளும் கிடையாது. அப்படி இருந்தால் ஒருவேளை நான் அவர்களுக்குக் குடுக்கிறதுக்காக வஞ்சித்துவைத்திருக்கிறேன் என்டு நீங்கள் நினைக்கலாம். அதுகூட இல்லையே?" என்று கெஞ்சலாய்க் கெஞ்சினார்.

"ஊகூம், அந்தப் புலுடா எல்லாம் இந்தக்கதிர்காமரிடம் செல்லாது. மனுஷர் பேசினால் ஒரு பேச்சுத்தான். இரு பேச்சுக்கு இங்கே இடமில்லை" என்று கூறிக்கதிர்காமர் ஒரே தாவாய்த் தாவினார்.

மாப்பிள்ளைக் கோலத்திலிருந்த மனோகரன் அங்கேவந்தான். "அப்பா, இப்பஎன்னத்துக்கு நீங்கள் கதைவழிப்படுகிறியள். அவரிடம்உள்ளதே அம்மட்டுந்தானாம். அவர் தாறதை மனம் ஒப்பிவேண்டிக்கொண்டு இரண்டாம் பேர்வழிக்கும் தெரியாமல் விஷயத்தை முடித்துவிட்டால் அப்போ நாலுபேரும் உங்களை நாளைக்கு மெச்சுவினம்" என்றான்.

கதிர்காமருக்கு அவன் பேச்சுகள் மனத்தில் ஆத்திரமான கோபத்தை உண்டுபண்ணிவிட்டது. அவர் அவனைச் சுட்டெரித்து விடுபவரைப் போலப் பார்த்து "உனக்கு இந்த இடத்தில் வேலை இல்லை. நீ போ வெளியே. எனக்குத் தெரியும் அது எல்லாம். மனிசர் பேசினால் பேசினபடி நடக்க வேணும். அது தவறினால் அவை மனிசரில்லை. அவை இரட்டை நாக்குப் படைச்ச உடும்புகள்" என்றார்.

மனோகரன் மௌனமாய்ப் போய்விட்டான்.

பந்தலில் கூடியிருந்த பலரும் கதிர்காமரை அந்த ஆயிரம் ரூபாவையும் விட்டுவிடும்படி எவ்வளவோ சொன்னார்கள். ஆனால் பண ஆசை பிடித்தகதிர்காமர் விட்டுக் கொடுக்க மறுத்துவிட்டார். அவர் அரிச்சந்திரனிடத்தில் கடன் அறவிட வந்த தரகனைப் போல நின்றார்.

கலியாண முகூர்த்த நாளுந் தவறி, அங்கு கூடி இருந்தவர்

(10ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்
வசந்த மல்லிகை
அ. செ. மு. எழுதிய
சிறுகதை
வெளியாகிறது.

ஞாயிறு சிறுகதை மலர்

குன்றின் மேலிட்ட தீபம்

"இளங்கோ"

"ஆதி, குணம், ஒன்று மிலான்! அந்தமிலான்! வரக் கடவாய்!" என மணிவாசகப் பெருமானார் திருவாசகத்திலே கூறிப்போந்தார். திருக்கோணமலை கோணஈஸ்வரன் மிகவும் பழமை வாய்ந்த புதுமை உடைய புனிதனார் எனக் கூறவாவேண்டும்! ஆண்டவன் அருளை முன்னதாக நாம் வைத்தே அவருடைய எந்த கைங்கரியங்களிலும் ஈடுபட வேண்டும். ஞானசம்பந்தப் பெருமானார் தமது திருமுறையிலே, திருகோணமாமலைப் பதிகத்திலே.

"நிரைகழல் அரவம்
சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர்
பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணிவிடையர்
கரைகெழு சங்குங்
காரைகின் பிழவும்
அளப்பருங் கனமணிவரனறிக்
குரைகடல் ஓதம்
நித்திலங் கொழிக்கும்
கோணமாமலையமர்ந்தாரே!
எனவும்,
"குற்றமிலாதார் குரை
கடல் சூழ்ந்த
கோணமாமலையமர்ந்தாரை,
கற்றுணர் கேள்விக்
காழியர் பெருமான,
கருத்துடை ஞானசம்பந்தன்,
உற்ற செந்தமிழார்
மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர்
உயர்ந்தோர்,
சுற்றமுமாகி தொல்
வினையடையார்,
தோன்றுவர்
வானிடைப்பொலிந்தே!"

என்று கூறி எமக்கு வலியுறுத்துகின்றார். இப்படி மிகப் பெரிய அருள் நிறைந்த பெரும் பதி திருமலை யெம்பதியெனலாம்.

தமிழ் மன்னர்களிலே பண்டைய நாட்களிலே மிகச் சிறந்த குளம்-கோஷ்டன் (கோஷ்டம்) இத்திருப்பணியைப் பெரும்பணியெனப்புரிந்தான். இதனால் இன்று அவன் எம்மிடையே வாழுகின்றான். தமிழகத்திலே சோழமாமன்னர் வம்சத்தில் தோன்றிய இந்த மன்னன், ஈழத்தமிழகத்திலே எத்தனையோ பெருந்தொண்டுகளைப் புரிந்தான். இவற்றுள்ளே தலையாயது திருக்கோணேஸ்வரன் திருப்பணியே ஆகும்.

"மன்னன் குளக்கோட்டன் முட்டுந்திருப்பணி" யெனக் கல்வெட்டுக் கூறி இருக்கின்றது. இந்தப் பெரும்பதியை இம்மன்னனுக்கு முன்னே வாழ்ந்த பல பௌத்தர்களும் ஆதரித்ததாகக் கதையுண்டு. ஈழநாட்டிலே பௌத்தம் தலைதூக்கிய நல்வேளையிலேயே, பத்தினிக் கோயில்கள் ஆங்காங்கே (ஈழநாட்டின் பல பகுதிகளில்) ஆக்கப் பெற்றன. இவற்றிலே வற்றாப்பளை, சண்டிருப்பாய், அங்கணம்மைக்கடவை கண்ணகை, வட்டுக்கோட்டை கண்ணனலிங்கேஸ்வரர், உடுவில் (மீனாட்சியம்மை) கண்ணகை, மட்டுவில் பன்றித்தலைச்சி(கண்ணகை) என எத்தனையோ தலங்களை இம்மன்னன் (கஜபாகு) தமிழகத்திலே கண்ணகிக்குக் கோயில் எடுத்த சேரன் செங்குட்டுவன், காலத்திலே ஈழத்தில் ஆக்கினான். இவன் கஜபாகுவேபாண்டி நாட்டைப் பரிபூரணமாக்கி சேரநாட்டிலேயே தான் தெய்வ உருவிலே மாறிய கண்ணகிக்கு இமயத்திலே கல் எடுத்து கங்கையிலே நீராட்டி கோவில் சமைத்த திருவிழாவிலே, ஈழநாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு திரும்பி கண்ணகிக்குக் கோவில்களை அமைப்பித்தான். இக்காலத்திலே கோணேசர் கோவில் கோணமாமலையிலே சிறந்து விளங்கியது. இதற்கு அம்மன்னன் திருப்பணி புரிந்தான். இவனது கண் மறைந்து பின்னர் வெளித்த இடம் (கண்தாராய்) கந்தளாய் என் இன்று வழங்கிவருகின்றது. கண்தாராய் என் இவன் இரந்தான் இறைவனை!



விக்கிரமசிங்கன் என்பவன் முன்னேச்சரன் கோவிலை (சிலாபம்) ஆக்கினான் என அக்கோவில்வரலாறு கூறுகின்றது. இதனை "மன்னன் விக்கிரமசிங்கன் வழிபட" என வரும் பதிகம் வலியுறுத்துகின்றது. இப்படியே, ஈழநாட்டின் எழில் நிறைதிருத்தலங்கள் மிகவும் புதுமை நிறைந்தவை. திருக்கோணமாமலைத் தெய்வம் (கோவில்) பின்னர் போர்த்துக்கேய (படடாளத்) தளபதியினாலே இடித்துத்தள்ளி அந்தக் கருங்கல்லினாலே "பிறடறிக்" கோட்டை ஆகியது லிங்கம், எழுந்தருளி, என்பன கடலுள்ளேயும், சில மண்ணுள்ளேயும் மறைந்தன.

இராவணனுடைய இராமாயணக் காலத்திலே இந்த ஆலயம் இருந்ததாகக்கதையுண்டு. கன்னியா நீரூற்றுக்கள், இராவணன் வெட்டு என்பன இவற்றை வலியுறுத்துகின்றன. இதனாலே திருமலை ஆலயம் முன்னேச்சரத்தை நெருங்கி இருக்கின்றது ஸ்ரீஇராமபிரான் இராமேச்சரத்தைப் பூசித்து இராவணசங்கார பிரமகத்தியைப் போக்கினார் என்பர். அவர் முன்னேச்சரரை வழிபாடு செய்தே இராவணனை அழித்ததாகக் கதையுண்டு ஆனால் திருமாமலைக்கோணேசரனை, தெட்சணகைலாய நாதனை, இராவணன் தான் பூசித்தான். ஒருதினம் தாய் இருந்த இடத்திற்கு (இப்போ களனி எனப்படும் இடம்) இந்த ஈஸ்வரனை மலையுடனே தூக்கிச் செல்ல தன் புயவலியினைக் காட்டினான்.

இதனை "எடுத்தவன் தருக்கை" எனவரும் தேவாரம் கூறுகின்றது. இப்படியே மயன் தருமபுத்திரி மண்டோதரியும் இக்கோவிலைப் போற்றினாள். இராமாயண காலத்திலே இருந்த கோவில்என்பதனாலும் இவன் வழிபாட்டினாலேயுமே இவனும் மனைவியும் தேவாரங்களிலே தனிஇடம் பெற்றனர். இலங்கைமன்னன் (இராவணன்) "ஈடேற" எனவும் தென்னிலங்கை அழகமர் மண்டோதரி எனவும் போற்றி உள்ளனர்.

இனி கிறீஸ்தவப் பெருமக்கள் இந்த ஆலயத்தினைப் போற்றியதும் பெருமைக்கு உரியதாகும். இந்த ஆலயத்தை ஆங்கிலேய ஆட்சியாரின் சிறிய கோவிலாக அமைத்து வழிபாடுசெய்ய தமிழ் மக்களுக்கு வசதி அளித்ததே அவர்களுடைய பெருந்தொண்டு எனலாம்.

"பூனைக்கண்ணன் போய் புகைக்கண்ணன் ஆண்டு பின்னே தமிழாய் விடும்"

என்பது இந்த ஆரியக் கல்வெட்டின் ஒருபகுதி. பறங்கி பிடிப்பான், பின்னர் போத்துக் கேயர், ஒல்லாந்தர், வெள்ளையர் ஆண்ட தமிழ் மக்களே ஆட்சி நடத்துவர் எனக் கூறுகின்றது. இன்று எம்மிடையே ஈழநாட்டிலே வாழ்ந்து வரும் பறங்கியர் (போத்து - ஒல்லாந்தர்) வம்சத்தினர் என்பது உண்மையே, சிலர் தமிழாய் விடும் என்பதை வடுகாய் (சிங்களவனாய்) எனவும் கூறுவர். எப்படியும் எம்பெருமான் மேல் ஆணையிட்டுக் கூறிய கல்வெட்டு உண்மையே! பொய்க்காது எனலாம்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன்னமே தம்பலகாமம் கோணேசராலயம் புதுப்பித்து கோபுரம் எழுப்பி புனருத்தாரணம் செய்யப்பெற்றது. இந்த வைபவத்திலே தமிழகப் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கலந்து சொற்பெருக்கு நிகழ்த்தினார். இந்த சரித்திர முக்கியம் வாய்ந்த சம்பவத்தை முன்னை நாள் பிரதமர் (அப்போ போக்குவரத்து மராமத்து அமைச்சராக இருந்த) சர்ஜான் கொத்தலாவலையும் பார்த்து மகிழ்ந்தார். இவருடனே இப்போ பொதுஜன சேவை கமிஷன் அங்கத்தவராக இருக்கும் ஏ. எம். ஏ. அசீஸ், (முன்னைநாள் செனட்டர்) கூடவந்திருந்தார்.

இப்போ பழமை நிறைந்த இந்த தலத்தின் வைபவம் தமிழ் மக்களுடைய சரித்திரத்திலே பொன் எழுத்தில் பொறிக்கவேண்டிய சம்பவம் எனலாம். பெரும் பிரயத்தனம் செய்தே இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்துள்ளனர் என்பது உண்மையே. இதனாலேதான் எம் மக்கள் எல்லோருக்கும் எம் பெருமான் நல்லருள் கொடுப்பான் என்பதில் ஐயமில்லை என்பர். திருமலை கடற்கரையோரமாகச்சென்று 'பிரடிறிக்' கோட்டை வாயிலை அடைந்து உள்ளே சில கஜதூரம் செல்ல ஆலயம் காட்சிகொடுக்கும். கடல், மலை நீர்ஊறு எல்லாம் மிகவும் பொருத்தமாக அமைந்து இருக்கின்றன "கோயிலுங், கடலும், சுனையுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே"

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் ஏழு சிறு கிணறுகளாக காணப்பெறுகின்றன. இவை திருமலை—அனுராதபுரம் ரஸ்தாவில் சில கல் தொலையிலே இருக்கின்றன. இராவணன் பிதிர் வர்க்கத்திற்குக் கடமை செய்ய (தர்ப்பணம் செய்ய) இவை தோன்றியதாகக் கதையுண்டு. யாத்திரிகர்கள் வசதியாகக் குளிக்க உணவுகொள்ள எல்லாம் அமைந்திருக்கின்றன. அரசாங்கவாடிவீடும் ஒன்று உண்டு. கோவில் பொதுவானதே. இதனை எந்த (இனம், மதம் வேற்றுமையில்லாது) மக்களும் வழிபாடு செய்வர்.

திருகோணமலையின் இயற்கை அமைப்பு மிக அழகைக் கொடுக்கின்றது. உலகிலேயே பிரசித்திபெற்ற இயற்கைத் துறைமுகம் இதனை எழில்படுத்துகின்றது. மேற்கு அந்நிய நாடுகளின் விருப்பைச் சம்பாதித்தது இந்த நல்ல நகரமே. இரண்டாம் உலகமகாயுத்தத்திலே திருகோணமலையிலேயே பெரும் தளத்தை ஆங்கிலேய சாம்ராச்சியம் அமைத்திருந்தது. இன்றும் கிழக்கு வல்லரசுகள் இதை கடற்படைத் தளமாக்க திட்டம்போடுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எம் பெருமானுடைய பெருங்கருணை எமக்கு வேண்டும் எனவே திருமலையின் எதிர்காலம் மிகவும் சிந்தனைக்குரியதே. நாம் குன்றின் மேலிட்ட தீபம் என்றைக்கும் அணையாத் தீபமாக நமக்கு ஒளியைத் தருமென நம்புவோம்.

திருக்கோணமாமலை மேவினரே!

தமிழ் மொழிக்கு அமிழ்தனைய தெய்வம் கண்டாய்
அமிழ்தமிசை ஆனந்தத் தேனைப் பாலை,
அருட்தீஞ்சுவை கரும்பின் நற்தெளிவை,
பாகை, உடன் அளவி உளங்களிப்ப,
மயில் அனைய தோகை மலைமாதைப் பெற்றான்!
மாமலை மேல் மேவிய முதல்வன் தானே!

மூவிருமுகனை மானைப்பெற்றான் பெற்றான் கண்டாய்!
மாமலை மாதின் முதல்வன் கண்டாய்!
மணியின் ஒளியான் மலைமேயான் கண்டாய்!
ஆவினம் உய்ய எழுந்தான் கண்டாய்!
அணிதரு திங்கள் சடை அப்பன்தானே!

அலையான்! மலையான்! மானிலத்தான்! கண்டாய்!
மணிவல்லான் மாணிக்க மாமலையான்! " "
நிலையா நல்வாழ்வெமக்கு நல்கான் " "
நால்வரின் நற்பாடல் பெற்றான் கண்டாய்!
உலையாத உடல்தனிலே உள்ளே குடி கொண்ட
தலையாய' நற்சிவனை திருமாமலை மேயான்தன்னை
நினையாதே நாளும் நினைப்பமே!

— 'இளங்கோ'

அன்பர்களுக்கும்ஆதரவாளர்களுக்கும்
புதுவருட வாழ்த்துக்கள்

சுந்தரம் பிறதர்ஸ்

ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள்
கோயில் அபிஷேக திரவியங்கள் விற்பனையாளர்.

(புதிய பஸ் நிலையத்திற்கு அருகில்)

73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

புளூ றிபன் ஹோட்டல்ஸ் கம்பெனி

போன்: 7178 25, கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு சித்திரை மீ 1உ (14-4-63)

புதுவருட பலன்

"சோப கிருதுதன்னில், தொல்லுலகெல்லாம் செழிக்கும்
கோபமகன்று குணம்பெருகும் — சோபனங்கள்
உண்டாம் மாரியொழியாமற் பெய்யுமெல்லா
முண்டாகு மென்றே யுரை"

இன்று பிறந்த "சோபகிருது" எனும் புத்தாண்டின் பலனைப் பற்றி புதுப்பஞ்சாங்கங்கள் இவ்விதம் நல்ல செய்திகளைக் கூறுகின்றன. இதன்படி உலகமெல்லாம் செழிக்குமாம். கோபங்கள் நீங்கும். நல்ல குணங்கள் பெருகும். சுப காரியங்கள் நடைபெறும். மழை தப்பாமல் பெய்து எல்லா நலன்களு முண்டாகுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வித நல்ல செய்தியுடனே புதுவருடம் பிறப்பது மகிழ்ச்சி அளிப்பதாகும். இந்தச் சோதிடம் பலிக்குமா, எவ்வளவு தூரம் பலிக்கும், நமக்கு என்ன பலன் ஏற்படும் என்பது வேறு விஷயம். இவை பலிக்குமாயின் பிறக்கும் புதுவருடத்தைவிட அதிக நல்ல வருடம் வேறு இருக்கமுடியாது.

இங்கு தமிழருக்கு மட்டுமல்ல, சிங்களவருக்கும் இன்றுதான் புதுவருடம் பிறக்கின்றது. இந்நாட்டிலுள்ள இரு முக்கிய சமூகங்களுக்கும் ஒரே நாளிலேயே புதுவருடம் பிறப்பது, விசேஷமாகும். தென்னாட்டிலேயே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இம்மொழிகள் பேசுபவர்கள் திராவிடர்களென்று கூறப்படினும், இவர்களுக்கெல்லாம் வெவ்வேறு நாட்களில்தான் புதுவருடம் பிறக்கிறது. ஆனால் இலங்கையிலே தமிழரையும் சிங்களவரையும் புதுவருடம் பிணைப்பது இவ்விரு சமூகங்களிடையேயும் தொன்று தொட்டுள்ள கலாசார ஒற்றுமைக்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

என்றாலும் இவ்விரு சமூகங்களுக்கும் இன்றுள்ள உறவுகள் மோசமாகவே உள்ளன. புதுவருடத்திலாவது இந்த உறவுகள் மேம்பட்டு, இரு சமூகத்தவரும் சரிநிகர் சமானமாக இந்நாட்டில் வாழ முடியுமா என்பது பலரது ஆர்வமும் கவலையும். 'கோபங்கள் நீங்கி குணம் பெருகும்' என்று புதுவருடப் பலன் கூறுவது நிறைவேறுமாயின் இப்பிரச்னை இவ்வாண்டிலேயே வெகுவாகத் தீர்ந்துவிடவும் கூடும்.

கோபங்கள் தாமாகத் தீருமா? இச் சமூகப் பிரச்னை தீருவதாயினும் நம் சொந்தப் பிரச்னைகள் தீர முடியுமா? இது தீர நாம் என்ன செய்ய வேண்டும்? என்பன முக்கிய கேள்விகள். நமக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவோ கோபதாபங்களெல்லாம் உள்ளன. இவற்றால்தான் நமது வாழ்க்கையில் பலபல சங்கடங்களும். நமக்கு நன்மையும் தீமையும் நாமேதான் செய்துகொள்ளுகிறோம். இவை பிறர் தரவாரா என்பது ஆன்றோர் அனுபவவாக்கு

சமூகமென்பது தனிப்பட்டவர்களைக் கொண்டதே. சமூகத்திலுள்ள நாம் ஒவ்வொருவரும், முதலில் நம்மிடமுள்ள குறைகுற்றங்களை உணர்ந்து கொண்டோமானால், அவற்றை நீக்கிக்கொள்ளுவதற்கு அது முதற்படியாகும். நமது குறைகளை நாம் நீக்கிக்கொள்ள முற்பட்டால், நம் வாழ்க்கை திருந்தி நன்மைபெருகும். நாம் முதலில் திருந்தினால் நாடும் தானாகத்திருந்தும். ஆகவே முதலில் நாம் திருந்த இன்றுமுதல் இப்புதுவருடத்தில் முற்படுவது நமது முக்கிய வேலையாகிறது.

எப்படி? இதற்குத்தான் நமக்கு இறை அருள் முக்கியமாகத் தேவைப்படுகிறது. நமது குற்றங்களை நீக்கி, குணங்களைப் பெருக்க இறை அருளால்தான் முடியும். நம் சொந்த முயற்சிகள் மட்டும் போதா. இன்று பிறந்துள்ள புத்தாண்டிலே நமது கோபதாபங்கள், ஆசாபாசங்கள் முதலியவற்றைக் குறைக்கவும், அன்பையும் நல்ல குணங்களையும் பெருக்கவும் எல்லாம் வல்ல திருவருள் துணையை கூடிப் பெற்றுவிட்டால் 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'.

'சோபகிருது' என்றால் சோபிக்கச்செய்வது என்றுபொருளாம். அவ்வித நல்ல பெயர்கொண்டு பிறந்துள்ள புத்தாண்டிலே, நம்கோபமகன்று குணம் பெருகுமென்றும், உலகமெல்லாம்செழிக்குமென்றும் கூறும் நல்வாக்கு மெய்யாகவும், அதற்கான முறையிலே நம்மை நடத்திச் செல்லவும், திருவருளை இப்பெருநாளில் நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம்.

இரத்தினக் கம்பளம்

'நீலாம்பரி'

ஆண்(மை) அழகே அழகு!

புதுவருடம் தைப்பொங்கல் ஆகிய தினங்களை வெகுகாலம் முதலாகவே தமிழ் மக்கள் கொண்டாடி வருகிறார்கள். இப்பண்டிகைகளின் போதெல்லாம் எருதுக் காளைகளுக்குப் பிரதான இடமுண்டு. கொல்லேறு தழுவுதல், மஞ்சுவிரட்டு, வண்டில்சவாரி என்று காலத்துக்குக்காலம் புதுமைபெற்று வந்திருக்கும் கிராமிய நிகழ்ச்சிகளைப் பார்த்தால் அங்கெல்லாம் காளை மாடுகளுக்கே முக்கிய இடம் தரப்படுகிறது. காளைப் பருவத்தினரான ஆண்கள் தமிழ் நாட்டுக் கன்னிப் பெண்கள் வளர்க்கும் போர்க் காளைகளுடன் மல்லாடி அவற்றை மடக்கி வெற்றிமாலை சூடுவார்கள். அப்பொழுது அப்பெண்கள் அவ்வீரனுக்கு மணமாலையும் சூட்டிவிடுவார்கள். அது ஒரு காலம். பிற்காலத்தில் இதே நிகழ்ச்சி 'மஞ்சுவிரட்டு' என்ற பெயர் பெற்று கிராமங்களின் எல்லைக்குள்ளேயே நின்றுவிட்டது. போர்க்காளையின் கழுத்தில் துணியில் பணம் முடிந்து காளையை ஒருமைதானமாகப்பார்த்து கட்டவிழ்த்து விடுவார்கள். துணிச்சலுள்ளவன் எவனாவது தன் உயிரைப்பணயம்வைத்துகாளையுடன் போராடி அதைப் பிடித்துக் கட்டிவிடவேண்டும். அப்பொழுது காளையின் கழுத்தில் கட்டியிருக்கும் பணமுடிச்சு அவனுக்காகிவிடும். தமிழ் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு ஜமீந்தார்கள் பண்ணைக்காரர் காலம்வரை கிராமங்களில் இது நடைபெற்றுவந்திருக்கிறது.

இதேமாதிரியாகப் புதுமை பெற்ற ஒரு பழைய நிகழ்ச்சிதான் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வண்டிற்சவாரி என்னும் காளைப்போட்டியும்ஆகும். பழக்கி எடுக்கப்பட்ட காளைகளை மொட்டை வண்டிகளில் சோடியாகப்பூட்டி வண்டிகளை முன்னும் பின்னுமாக நிறுத்தி 'சவாரி' கலைப்பார்கள். முந்தியதைப் பின்வண்டி தாண்டி முன்னே போய்விட்டால் இதற்குவெற்றி. இதுமாதிரி இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பாக ரோமநாட்டில் குதிரைபூட்டிய வண்டிகளைக் கொண்டு கடுமையான போட்டிச் சவாரி நடத்தியிருக்கிறார்கள்.

புதுவருடம் வந்துவிட்டால் கிராமங்களில் மேலும் சேவல் சண்டை ஆட்டுக்கடாக்''குஸ்தி" என்றெல்லாம் ஊருக்கு ஊர் தெருவுக்குத்தெரு நடைபெறும்.

சேவல் கோழிகளுக்கு நல்ல தீனிபோட்டு வளர்த்து அவற்றுக்கு போர் முறையும் கற்றுக் கொடுப்பார்கள். சித்திரைமாதம் புத்தாண்டுக் கொண்டாட்ட காலமாக ஒருநாள் பார்த்து சேவல்களின் காலில் கத்திகட்டி அவற்றை ஒன்றோடொன்று பொருதவிட்டு இந்த வீட்டுப் பறவைகள் சண்டையிலும்கூட வீரத்தையும் போட்டியையும் பார்த்து மகிழ்வார்கள்.

சேவல் சண்டை நடத்தக் கூடாது என்று அமெரிக்காவில் பலகாலமாக தடை இருந்துவருகிறது. எனினும் இத்தடையை மீறி பால்டிமோர் என்னுமிடத்தில் சமீபத்தில் சேவல்சண்டை நடத்தப்பட்டபோது அமெரிக்க பொலிசார் திடீரென இந்த இடத்துக்குச்சென்று இதில் ஈடுபட்ட ஆசாமிகளைக் கைது செய்து சேவல்களையும் கைப்பற்றினர்

பொலிசார் சென்றபோது அங்கு சுமார் 130 பேர் இந்த சேவல்சண்டையில் ஈடுபட்டிருந்தனர். பொலிசார் வந்தால் ஏற்பட்ட குழப்பத்தில் 50 பேர் தப்பி ஓடிவிட்டனர்.

சேவல்சண்டை நடைபெற்ற பண்ணையின் சொந்தக்காரர் கைதுசெய்யப்பட்டு பின் பிணையில் விடப்பட்டார். ஜெர்விஸ் மார்ஷல் என்ற அந்த ஆசாமியோ சேவல் சண்டை நடத்துவது சட்டவிரோதமல்ல என்று தீவிரமாக வாதாடினார்.

"சேவல்சண்டை நெடுங்காலமாக இருந்துவரும் கேளிக்கையாகும், பிலிப்பைன்ஸ்நாட்டில் இது தேசிய விளையாட்டாக இருந்து வருகிறது. இந்தியாவில் நூற்றாண்டுகளாக சேவல் சண்டை நடந்துவருவதாக சரித்திரபூர்வமான ஆதாரம் இருக்கிறது. பழைய விவிலிய நூலிலும்கூட இதுபற்றி கூறப்பட்டுள்ளது" என்று அவர் தீவிரமாக பொலிசாரிடம் வாதாடினார்.

சேவல்சண்டை நடந்த பண்ணையிலிருந்து பொலிசார் 11 செத்த சேவல்களையும், 20 உயிருள்ள சேவல்களையும்கைப்பற்றினர். சேவல் சண்டைக்கான சூதாட்ட சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்காவில் சேவல் சண்டை தடைசெய்யப்படடுள்ளதற்கு இரு காரணங்கள் உள்ளன. ஒன்று இந்தச் சண்டையில் சேவல்கள் சாகடிக்கப்படுவதால் இது கொடூரமானது. இரண்டாவதாக இது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத சூதாட்டமாகும். ஏனெனில் சேவல் சண்டையில் எந்த சேவல் ஜெயிக்கிறது என்பதில் பணத்தை பந்தயம் கட்டி சூதாடிய போதிலும் இதற்கு வரிவிதிக்க அரசாங்கத்தினால் சாத்தியமில்லாதபடி உள்ளது.

கியூபாவில் இருந்து அகதிகள் அமெரிக்காவில் குடியேற ஆரம்பித்ததிலிருந்துதான் சேவல் சண்டை இங்கு அதிகரித்துள்ளதாம் கியூபாவில் கிராமப்புறங்களில் சேவல் சண்டை சர்வ சாதாரணமாக நடைபெறும் பொழுதுபோக்காகும்.

* * *

எங்கள்தேசக் கிராமங்களில் புதுவருடம் பிறந்துவிட்டால் சிறுவர்களுக்கு ஒரே கொண்டாட்டம். பள்ளிக்கூட விடுமுறைக்காலம். போர்த்தேங்காய் அடித்தல், 'புள்' அடித்தல், தாச்சி, பந்தாட்டம், சைக்கிளிலே கீரிமலைக்கும் படமடுவத்துக்கும் சவாரி—ஆகிய இத்யாதி காரியங்களை தொடர்ந்து சில நாட்களுக்கு நீடிக்கலாம் அல்லவா?

தமிழ் மக்களின் வீரதீரக் கொண்டாட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ளும் எருதுக்காளை, ஆட்டுக்கடா, சேவல், என்பன ஆண் இனத்தைச் சேர்ந்தவை. மயில், மான், கோழி, மாடப்புறா ஆகிய பறவைகளில் ஆண் இனத்தையும் காட்டு விலங்குகளில் ஆண் சிங்கத்தையும் அழகுக்காகவும் வீரத்துக்காகவும் நாம் இன்னமும் கொண்டாடி வருகிறோம்...

அழகும் வீரமும் ஆண் இனத்துக்கே சொந்தமாகிவிட்டதா? அல்லது, அழகென்பது ஆண்மைதான் என்று ஆகிவிட்டதா, பொற்கொடியே!

புராண வரலாறு

தமிழர் கொண்டாடிவரும் 60 ஆண்டுகளைப்பற்றிய ஒரு புராண வரலாற்றை யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த அகில இலங்கைப் பொதுசன சேவைச்சங்கச் செயலாளர் திரு. த. இராசரத்தினம் தெரிவிக்கிறார்:

ஸ்ரீமந் நாராயணன் பூமிபாரம் தீர்க்கவேண்டி துவாரகாபுரியில் கிருஷ்ணவதாரம் செய்தபொழுது அவரது சக்தி உளான பதினாயிரம் கோபிகாஸ்திரீகளுக்கும் பதினாயிரம் இல்லங்கள் அமைத்து அனைவருடனும் களிப்புற்றிருந்தார் நாரத மகாமுனிவர் ஒருநாள்

(16ம் பக்கம் பார்க்க)

உலகமேடை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

கள், "டை"கள், இதர போகப் பொருட்கள் ஆகியன அவரிடம் இருந்தன. ருசிமிக்க உயர்ந்த உணவுகள் மன்னரின் வயிற்றில் சதா சென்றுகொண்டே இருந்தன. நன்றாகச்சாப்பிட்டு, அனுபவித்துக் கொழுத்துவந்தார் பாருக்.

வியாபார பேரத்திலும் மன்னர் கைதேர்ந்தவர். மேலும் மேலும் செல்வத்தை எப்படிச் சேர்ப்பதென்பதையும், அவர் கற்றிருந்தார். ஒரு ஐரோப்பிய நாட்டிலிருந்து, துருப்பிடித்த ஆயுதங்களைக் குறைந்த விலையில் வாங்கி, பன்மடங்குலாபத்துடன் எகிப்திய ராணுவத்துக்கு விற்றுவிட்டார். புரட்சிக்குப் பின் இந்தப்பிரச்னை ஒரு சமயம் கிளம்பியது.

கண்மூடித்தனமான இந்தப் போகமன்னரை வெளியேற்றும் பொருட்டே, எகிப்தியப் புரட்சி நடந்தது. ஜெனரல் நகீப், புரட்சிக்கொடியை உயர்த்தி, 24 மணி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறும்படி அவருக்கு உத்தரவிட்டார். இந்தச் சொற்ப அவகாசத்தில் தமக்குச் சொந்தமான லட்சக்கணக்கான பொருட்களை எப்படி எடுப்பது? எனவே முடிந்தவரை கொஞ்சம் பொருட்களை மட்டும்எடுத்துக்கொண்டு கப்பலேறிவிட்டார் பாருக்.

அவரை வழியனுப்ப நகீப் துறைமுகத்திற்குக் கூட வரவில்லை. ஆனால், கப்பல் இடையில் நிறுத்தப்பட்டு, சிலமைல் தூரத்துக்கு படகுமூலம் சென்று, கப்பலில் ஏறி நகீப் அவருக்கு விடை கொடுத்தார். படுகொலை செய்யாமல், கடைசியில் இவ்விதம் தனது பெருந்தன்மையைக் காட்டிக்கொண்டார் நகீப்.

அரண்மனைகளையும், அளவற்ற சுகபோகங்களையும், அழகுப் பொருட்களையும் விட்டுச் சென்றபோதிலும், புதியநிலைமைக்கேற்ப அவரால் நடந்து கொள்ளமுடியவில்லை. ராஜப் பிறவி அல்லவா? வெளிநாட்டுக் கம்பெனிகளில் அவர் முடக்கியிருந்த கோடிக்கணக்கான பணத்தைக் கொண்டு, குட்டி ராஜாவாக புதிய வாழ்வைத் தொடங்கினார் பாருக். சூதாட்டமும், காதல்விளையாட்டும் அவரைத் தொடர்ந்து ஆட்கொண்டன. இத்தாலிய இராக்கிளப்புகளில் மாஜி மன்னர் மீண்டும் காணப்பட்டார். அவரைச் சுற்றி பேரழகிகள் வட்டமிட்டனர்.

இதற்கிடையில் தமது பெயரால் ஒரு பொருளை உற்பத்தி செய்த ஐரோப்பிய கம்பெனி மீது வழக்குத் தொடர்ந்து, பெருந்தொகை நஷ்டஈட்டுப் பணத்தையும் அவர் சம்பாதித்தார். மன்னராய் இருக்கும் பொழுது பல கம்பெனிகளில் அவர் ஆர்டர் செய்த லட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களுக்கு, இன்னும்பணம்செலுத்தப்படவில்லை எனச் சொல்லப்படுகிறது.

மன்னர் பாருக்கின் இருபுதல்விகளும் அழகானவர்கள். இந்த மாஜி இளவரசிகளும், மாஜி இளவரசரான அவரது புதல்வர் புவாத்தும், இப்போது பாருக்குடன்தான் இருக்கின்றனர். மூத்தபுதல்வியின் விவாகம் பற்றி சென்ற வருடம் பேச்சுக்கள் அடிபட்டன. அஞ்ஞாதவாசம் செய்யும் பாருக்கின் கதைச் சுருக்கம் இதுதான். ஏதோ சிலலட்சம்பணம் இருந்தவுடன் நாம் பெரும் செல்வந்தர்கள் என நினைத்துக்கொள்கிறோம். ஆனால் பாருக்கையும்,அவரைப் போன்ற வேறு சிலரையும் பார்த்தபின்பும் அப்படிநினைக்க முடியுமா என்ன? உலகம் என்ற சமுத்திரத்தில் எத்தனையோ திமிங்கலங்களும் சுறாமீன்களும் இருக்கின்றன. ஆனால் கிணற்றுத் தவளைக்கு அது தெரியுமா?

உலகமேடை

டி. எம். எம்.

திரு. செஸ்டர் பவுல்ஸ்

திரு. செஸ்டர் பவுல்ஸ் இந்தியாவில் மீண்டும் அமெரிக்க ஸ்தானீகராக நியமிக்கப்பட்டிருப்பது, அமெரிக்க—இந்திய உறவை மேலும் நெருக்கமாக இணைப்பதில் ஜனாதிபதி கென்னடி எவ்வளவு ஆர்வத்துடன் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. திரு. பவுல்ஸின் சேவையை ஜனாதிபதி வெகுவாகப் பாராட்டி அவருக்குப் புகழ்மாலையும் சூட்டியிருக்கிறார். அவர் மீண்டும் இந்தியா வருவதை டில்லி அரசாங்கமும் வெகுவாக வரவேற்கும் என்பதில் சந்தேகமில்லை.

10 ஆண்டுகளுக்கு முன்பும் (1951—53) திரு. பவுல்ஸ் இந்தியாவில் ஸ்தானிகராகப் பதவி வகித்தார். தமது பதவிக் காலத்தில் அவர் டில்லி வட்டாரத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தார். இந்தோ—அமெரிக்க உறவிற்குப் பெரும் அபிவிருத்தியும், நெருக்கமும் ஏற்பட திரு. பவுல்ஸ் பெரிதும் காரணமாய் இருந்தார். இந்தியாவில் கடமையாற்றிய அமெரிக்கத் தூதர்களிலேயே திரு. பவுல்ஸ் தான் அதிகமாகச் செல்வாக்குப் பெற்றிருந்தார் என்றும் கூறலாம்.

இந்தியாவின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் திரு. பவுல்ஸுக்குப் பெரும் அக்கறை உண்டு. இந்தியாவுக்கு அதிக நிதி உதவியும், இதர உதவிகளும் அளிக்க வேண்டுமென தமது பதவிக் காலத்தில் அமெரிக்க அரசாங்கத்திற்கு அவர் பலமாகச் சிபார்சு செய்துவந்தார்.

திரு. பவுல்ஸ் அமெரிக்க வெளிநாட்டுச் சேவையின் முதல்தர ராஜதந்திரிகளுள் ஒருவர். கென்னடி அரசாங்கம் பதவிக்கு வந்த பின், அவர் ராஜாங்க இலாகாவின் துணை மந்திரியாக முக்கிய பதவியை வகித்தார். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் சம்பந்தமாக கென்னடியின் விசேஷ ஆலோசகராசவும், கனக்டிக் மாகாண கவர்னராகவும் பதவி வகித்தார். ஆழ்ந்தவிஷயஞானமும், பரந்த மனப்பான்மையும் கொண்ட பவுல்ஸ், இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருந்ததுபோலவே, அமெரிக்க ராஜாங்க இலாகாவிலும் நன்கு மதிக்கப்பட்ட ஒருவர். தூதர் பதவிக்கு அவரைவிடச் சிறந்த ஒருவரை அமெரிக்கா, இந்தியாவில் நியமிக்கமுடியாது. எனவே தான் இந்த நியமனத்துக்கு விசேஷ அர்த்தமுண்டு.

பொதுவாக, மாஸ்கோ, லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களைப்போலவேடில்லியிலும் சிரேஷ்ட ராஜதந்திரிகள் தூதர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஆயினும் இரு நாடுகளிலும் அதிகம் விரும்பப்படும் ஒருவரை, இரண்டாவது முறையாகவும் டில்லியில் தூதராக நியமித்து, திரு. கென்னடி அவருக்கு விசேஷ நற்சாட்சி முத்திரையையும் குத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நியமனத்தின் மூலம் சீனப் பயமுறுத்தலுக்கு இலக்காகியிருக்கும் இந்தியாவின் ராணுவத் தேவைகளும், பொருளாதார உதவிகளும் இன்னும் சிறந்த முறையில் பூர்த்திசெய்யப்படும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

திரு. பவுல்ஸைப் போல், அவரது குடும்பத்தினரும் இந்தியாமீது பற்றுக்கொண்டவர்கள். அவரது புதல்வி ஸிந்தியா பவுல்ஸ், இந்தியாவில் தான் கொண்டிருக்கும் அபிமானத்தை "இந்தியா என் வீடே" என்ற அழகான புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார். 10 ஆண்டுகளுக்கு முன் அவர் டில்லியில் 17 வயது மாணவியாக இருந்தபோது, எழுதிய இப்புத்தகம், பல மொழிகளில் ஆக்கப்பட்டிருக்கிறது. சொந்த நாட்டில் வாழ்வது போன்ற உணர்ச்சியை அவர் அதில் காட்டியுள்ளார்.

பவுல்ஸ் குடும்பத்தினர் முதல்முறை இந்தியாவுக்கு வருமுன் நேருவின் சுயசரித்திரத்தைப் படித்தார்கள். கடந்த 50 ஆண்டுகளில் நேருவின் வாழ்க்கையும், இந்தியாவின் சரித்திரமும் ஒன்றேயாதலால், அவரது வாழ்க்கையைப் படித்தே நவஇந்தியா பற்றி அறிந்ததாக ஸிந்தியா கூறுகிறார்.

புதுடில்லியில் அமெரிக்கத் தூதர் பதவி பெரியதும், இச்சமயத்தில் முக்கியமானதுமாகும். அங்கு சமீபத்தில் கட்டப்பட்ட அமெரிக்கத் தூதராலயத்துக்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவு பிடித்தது. டில்லியில், தூதராலயங்களிலேயே இதுதான் மிகவும் சிறந்த கட்டிடம் என்பது மட்டுமின்றி, வெளிநாடுகளிலுள்ள அமெரிக்கத் தூதராலயங்களின் சிறந்த கட்டிடங்களில் புதுடில்லிக் கட்டிடமும் ஒன்று எனவும் கருதப்படுகிறது. இந்திய சிற்பவேலைப்பாடுகள் இக்கட்டிடத்தை அலங்கரிக்கின்றன. கட்டிடத்தின் பெருமைக்கேற்ப ஒரு சிறந்த பிரதிநிதி டில்லி வருவது மிகவும் பொருத்தமே.

★

மாஜி மன்னர் பாருக்

மாஜி மன்னர் பாருக், இத்தாலிய அழகி ஒருத்தியை மணந்துகொள்ளப்போவதாய் சென்றவாரம் செய்தி வெளியாகியது.

பாருக்மன்னரைப் பற்றி அனைவரும் அறிந்திருக்கலாம். அவரது அந்தரங்க வாழ்க்கை பகிரங்க ரகஸ்யமானது. எகிப்திலிருந்து நாடுகடத்தப்பட்ட அவர், இப்போது இத்தாலிக் கருகில் வசித்துவருகிறார்.

உலகத்திலுள்ள சுகபோகங்கள் அனைத்தையும் அனுபவிக்கப் பிறந்தவர் பாருக். என்னென்ன சுகபோகங்கள் உண்டோ, அவ்வளவும் தனக்குக் கிட்டியாக வேண்டும். இன்றேல், அதை அழித்துவிட வேண்டும் என்பதே மன்னர் பாருக்கின் வாழ்க்கை லட்சியம் எனலாம்.

மன்னர் பாருக் இளம் வயதில் பட்டத்துக்கு வந்தார். எவரையும் கவரக்கூடிய அழகு அவருக்கு அப்போது இருந்தது. எகிப்திய மக்கள், அவரது அழகில் மயங்கியோ அல்லது வேறு காரணத்தினாலோ அவரை அவ்வளவுதூரம் நேசித்தனர்.

ஆனால், சில வருடங்களிலேயே அவர் மக்களை மறந்தார். எல்லாம் தனக்காகவே படைக்கப்பட்டது என்ற கொள்கையை அறநெறியாகக் கொண்டுவிட்டார்.

காதல் விளையாட்டுக்களில் மன்னர் பாருக் கைதேர்ந்தவர். 15 வயதிலேயே அவரது முதல் காதல் ஆரம்பமாகிவிட்டது. நைல்நதிக் கரையிலே, நீதிபதி ஒருவரின் புதல்வியை அடைவதற்காக அவர் வில்லகை மாறி, பல சாகஸங்களை நிகழ்த்தி அந்த அழகு மங்கையை மணந்தார். ஆனால் அந்த விவாகம் பின்பு ரத்தானது. ஈரான் மன்னர் ஷாவின் சகோதரியும், எழிலரசியுமான பௌஸியாவைப் பின் கைப்பிடித்தார். இரு புதல்விகளைப் பெற்றபின், ஈரானிய இளவரசியும் விவாகரத்துக்காளானார். ஒரே சமயத்தில், ஷாவின் சகோதரியை பாருக்கும், பாருக்கின் சகோதரியை ஷாவும் விவாகரத்துச் செய்தது மத்திய கிழக்கு ராஜகுடும்பச் சரித்திரத்திலேயே மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாகும். கடைசியாக அவர் மணந்தது நரிமன்சித்தீக் என்ற பேரழகியை. ஆனால், புவாத் என்ற ஒரு புதல்வனை ஈன்றபின், இந்த விவாகமும் ரத்தானது. பாருக் மன்னரின் வாழ்வில் இவையெல்லாம் சகஜமானவை.

பாருக்கின் இரண்டாவது மனைவி பௌஸியா, எகிப்தில் தனக்காகக் கட்டப்பட்ட மாளிகையில் இப்போது அமைதியாக வாழ்க்கை நடத்திவருகிறார். நரிமன் சித்தீக், வேறொருவரை மணந்துகொண்டதாகச் செய்தி வந்தது. ஆனால் அவரது இன்றையநிலை சரியாகத்தெரியவில்லை.

இம்மூன்று பெண்களையும் மன்னர் பதிவுத்திருமணம் செய்துகொண்டபோதிலும், பல நூற்றுக்கணக்கான பெண்கள் அவரது வாழ்க்கையில் இடம்பெற்றிருக்கின்றனர். இன்னும் இடம்பெற்றும் வருகின்றனர்.

பாருக் மன்னருக்கு இப்போது 43 வயதாகிறது. வேட்டையாடுதல், சூதாட்டம், பெண் வேட்டை ஆகியவற்றில் உலகத்திலுள்ள இணையற்ற ஒருசிலரில் அவரும் ஒருவர். பட்டத்துக்கு வந்தபோது பாருக் மன்னர் மெலிந்தும், உயர்ந்தும், அழகான தோற்றத்தைக்கொண்டும் எவரையும் வசீகரித்தார். இப்போது அவர் நன்கு பருத்துக் கொழுத்து, 300 ரூத்தலுக்கு மேற்பட்ட எடையுடன் காணப்படுகிறார். ஆயினும் அவரது வேகமும், விறுவிறுப்பும் இன்னும் குறையவில்லை.

வேட்டைகளுக்குச் சென்றால் ஏராளமான பறவைகளுடன் அல்லது மிருகங்களுடன் தான் திரும்புவார். இவ்ஷயத்தில் அவருடன் மற்றவர்கள் போட்டியிடுவது மகாகஷ்டம். அதேபோல் சூதாட்டத்திலும் அவர் இணையற்றவர்.

ஐரோப்பாவில் காஸினோக்களிலும், இராக் கிளப்புகளிலும் அடிக்கடி காணப்படும் மன்னரைச்சுற்றி,கோடீஸ்வரப் பிரபுக்கள் அமர்ந்திருப்பர். ஒவ்வொரு முறையும் லட்சக்கணக்கான பணத்தைக் கட்டிப் பந்தயத்தில் இறங்குவார். தோல்வியை விட வெற்றியே அவருக்கு அதிகம் கிடைக்கும். எந்நேரமும் அவரைச் சுற்றிப் பத்துப் பதினைந்து பேரழகிகள் வட்டமிட்டபடியே இருப்பர். அவரது அன்பைப் பெறுவதில் அவர்களுக்கிடையே போட்டா போட்டி! இவ்விஷயத்தில் இளவரசர் அலிகான் சிறந்தவரா அல்லது பாருக் சிறந்தவரா என்பதைச் சொல்வது கஷ்டம்.

பாருக் மன்னர், வாழ்வின் சகல போகங்களையும் குறைவின்றி அனுபவித்தார். மன்னராய் இருந்தபோது அவருக்குச் சொந்தமான உல்லாசக் கப்பல்களும், படகுகளும், ரயில் வண்டியும், கார்களும் தான் எத்தனை! எத்தனை!! சுமார் 200 கார்கள் அவர் வைத்திருந்தார். அவரது கார்கள் பெரும்பாலும் சிவப்பு நிறத்தைக் கொண்டதாகும் இந்நிறத்தில் அவருக்கு ஏதோ ஒரு தனிமோகம். மன்னர் பாருக்கின் கார்கள் கெய்ரோவுக்கும், அலெக்ஸாந்திரியாவுக்குமிடையே எந்நேரமும் பறந்துகொண்டிருக்கும். அவருக்கு வேண்டிய இளமங்கைகளையும், இதர சுகபோகப்பொருட்களையும் அவை சுமந்துவந்தன.

பாருக் மன்னர் தாம் விரும்பிய எதையும் அடைந்தே தீருவார். ஒருபோதும் விட்டுவிடமாட்டார். பலாத்காரத்தை உபயோகித்தும் சரி, தமது விருப்பத்தை அவர் நிறைவேற்றிய சம்பவங்கள் பலவுண்டு. மன்னர், மணமுடித்த மற்றோர் பெண்ணுடன் தகாத உறவு கொள்ள நினைத்து, இடையில் யாரும் குறுக்கிட்டால், அவரது மெய்ப்பாதுகாவலர்கள் குறுக்கீடுசெய்பவரைத் தாமதமின்றி சுட்டுக்கொல்வார்கள்! இவ்வித சம்பவங்கள் சில உண்மையிலேயே நடந்திருக்கின்றன.

மன்னரின் நண்பர்கள் கெய்ரோவிலும் அலெக்ஸாந்திரியாவிலுமுள்ள பெரியபிரபுக்களும், நகைவியாபாரிகளுமாவர். அவர்களில் சிலர், கௌரவதரகர்களாகவும் இருந்தனர். மன்னரின் விருப்பத்தை நிறைவேற்றுவதில். அவர்களுக்கு பெரும் ஆத்மதிருப்தி.

மன்னரின் கடைசி மனைவியான நரிமன் சித்தீக், விவாக மோதிரம் வாங்கும்பொருட்டு தமது காதலருடன் பிரபல நகைக்கடைக்கு வந்திருந்தார். ஆனால் நகைவியாபாரியின்கண்களில் அந்தஅழகுமங்கை பட்டுவிட்டார். உடனே, அரண்மனைக்கு டெலிபோன்பறந்தது. பாருக், உடனடியாக அங்கு வந்துவிட்டார். இதன் பலனாக காத்திருந்த காதலன், காதலியை இழந்தான். நரிமன், பாருக்கின் மனைவியாக-எகிப்தின் ராணியாக்கப்பட்டார். மன்னரின் இரக்கமற்ற சுகபோகத்திற்கு இது உதாரணம்.

மன்னரின் அரண்மனை ஒரு கலைக்களஞ்சியம். அரிய பொக்கிஷங்கள் இருந்தன. பல்லாயிரக்கணக்கான பட்டுச்சட்டைகள், ஆயிரக்கணக்கான உடை

(8ம் பக்கம் பார்க்க)

பூஜ்யம் தபால்

செனேட்டர் நடேசபிள்ளை அவர்கள், முன்னாள் அமைச்சர், (முகாம்) கொழும்பு.

ஐயா,

வணக்கம். தாங்கள் செனேட் சபை மெம்பராக நியமிக்கப்பட்டுள்ளதைக்கேட்டதும், ஒரு வித கலப்பு உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. தங்களைப்பாராட்டுவதற்காகப் பேனாவை எடுத்தேன். என்னமோ தயக்கம். உண்மையில் பாராட்டவேண்டியது பிரதமர் ஸ்ரீமாவோவைத்தான் என்று தோன்றியது.

செனேட்டராக நியமனம் பெறுவதற்குத் தங்களைவிடத் தகுதியான ஒருவர் இங்கு வேறுயாரும் இருப்பார்களா என்பது தெரியவில்லை. தமிழுக்கும் சைவத்துக்கும் தாங்கள் செய்துள்ள பணிகள் கொஞ்சமன்று. அறிவாற்றல்களிலே தாங்கள் முதலிடம் பெற்றிருக்கின்றீர்கள். ஆனால் எந்த மொழிக் கொள்கைக்காக யு. என். பி. கட்சியிலிருந்து தாங்கள் விலகினீர்களோ, அதே கொள்கையைத்தான் இந்த அரசாங்கமும் கடைப்பிடிக்கின்றது. ஒருசிறிய வேற்றுமை. யு. என். பி. யின் களனி மகாநாட்டுத் தீர்மானத்தில் நியாயமான தமிழ் உபயோகத்துக்கு இடமளிக்கவில்லை. சுதந்திரக் கட்சி அதற்கு இடமளிப்பதாகக் கூறியதென்றாலும் காரியத்தில் கைவிரிக்கிறது. அப்படி இருக்க இதே அரசாங்கம் அளித்த செனேட்டர் பதவியை தாங்கள் இச்சமயம் ஏற்றது பிரதமருக்கு மிக மகிழ்ச்சி அளித்திருக்கவேண்டும். அது அவருக்கு ஒருவெற்றி தானே!

பழைய கதையெல்லாம் எனக்கு ஞாபகம் வருகிறது. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன் சிங்களத்தையும் தமிழையும் அரசாங்கமொழிகளாக்குவது பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஒருகமிட்டியில் தாங்களும் அங்கம் வகித்தீர்கள். தமிழை அகற்றிவிட வேண்டுமென்ற யோசனைக்கு அதே கமிட்டியிலிருந்த ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்கள் ஒருசமயம் இடம் கொடுத்தபோது தாங்கள் அதைப் பலமாக ஆட்சேபித்து அக்கமிட்டி கூட்டத்திலிருந்தும் வெளிநடப்புச் செய்ததாகஞாபகம். தாங்கள் உறுதியாகஇருந்ததால்தான் தமிழும் ஓர் அரசாங்கமொழியாக இருக்க வேண்டுமென்ற யோசனை அப்பொழுது அங்கீகரிக்கப்பட்டது.

பின்னர் களனி மகாநாட்டிலே சிங்களத்தை மட்டும் அரசாங்கமொழிய க்கவேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தாங்கள் யு என் பி. கட்சியிலிருந்து வெளியேறி, பார்லிமெண்டசபையிலே தமிழ் மொழிக்காகச் செய்த ஆணித்தரமான பிரசங்கம் சரித்திரப்பிரசித்தி அடைந்துவிட்டது. அச்சமயம் யு. என். பி.யிலிருந்து விலகி இருந்த டட்லி அவர்கள், அதைப் படித்துவிட்டு, கண்ணீர் விட்டதாகவும் கேள்விப்பட்டேன். இப்போது தாங்கள் இந்த அரசாங்கத்தால் செனேட்டராக்கப்பட்டதைக் குறித்து, அவர் என்ன கருதுகிறாரோ?

இது எப்படியாயினும் சரி, செனேட்டர் பதவி ஏற்றதால் இந்த அரசாங்கத்தின் கூடாத சில நடவடிக்கைகளை ஆதரிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லைதான். இச்சபையிலிருந்து தமிழ்மொழி உரிமைக்காகவும் நியாயத்துக்காகவும் வாதாடலாம். இன்று நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் அதைக் காதில்வாங்க ஆளில்லை. ஆனால் தாங்கள் இனிக கூறுவதை அரசாங்கமும் அலட்சியப்படுத்தி ஒதுக்க முடியாது.

தமிழர் பிரச்னையைச் சமாதானமாகத் தீர்க்கத் தாங்கள் முயற்சி எடுக்கப்போவதாக அறிய மகிழ்ச்சி. இது மிகக் கஷ்டமான பிரச்னை. அவ்வளவு சுலபமாகத் தீரமுடியாது. ஆனால் தெய்வம் நினைப்பின் எதுவும் கைகூடலாம். தங்களாலும் தெய்வாதீனமாக இப்பிரச்னை தீரமுடியுமாயின் அதைவிடச் சந்தோஷமான விஷயம் வேறு இருக்க முடியாது. தங்கள் முயற்சி வெற்றிபெறவேண்டுமென்பதே என் மனப்பூர்வமான பிரார்த்தனை.

இப்படிக்கு,
பூஜ்யம்.

குறிப்பு:

மிகப் பெரிய பளுவுகளைத் தாங்கள் ஏற்றிருக்கின்றீர்கள். பல முக்கிய காரியங்கள் நடக்க வேண்டியுள்ளன. தங்கள் உடல் நலத்தை விசேஷமாகக் கவனித்துக்கொள்ளவேண்டும்.

"பூ"

சித்திரை நிலவு

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களும் ஏமாற்றத்துடன் கலைந்து போய்விட்டார்கள்.

நல்ல முகூர்த்தத்தில் நடக்க வேண்டி இருந்த நல்லகாரியம் ஒன்று ஆயிரம் ரூபாய் சீதனத்தால் நிறுத்தப்பட்டு விட்டதை ஊரவர்கள் கதையாய்க் கதைத்தார்கள்.

மனம் உடைந்த மனோகரன் அன்றே வீட்டைவிட்டுப்புறப்பட்டுவிட்டான். அவன் தாய் எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்டானில்லை. அவன் "அம்மா, ஒரு குமர் காரியத்திலே நீங்கள் செய்துகொண்டதைப் போலே வேறே அவமானம் கிடையாது. நாளைக்கு அந்தப் பொடிச்சி அவமானந் தாங்காது மனசு உடைந்து எங்கையாவது கிணற்றிலே குளத்திலே போய் விழுந்து செத்துப்போனால் எண்டால் அதைப்போல பாவம் வேறே என்ன இருக்கிறது. என்னையும் அந்தப் பொடிச்சியையும் இவ்வளவு அவமானத்துக்கு ஆளாக்கிய உங்களுக்கு நான் இனிப்பிள்ளை அல்ல" என்று கூறிவிட்டு விறுக்கென வெளியேறி விட்டான்.

அவமானமுற்ற பெண்வீட்டார் அழுவாரைப்போன்று ஆழ்ந்த துயரத்தில் மூழ்கிக் கிடந்தார்கள். பாவம்! ஒரு சூதுமறியாத நாகேஸ்வரி தனக்கு நிகழ்ந்த அந்த அவமானத்தை நினைத்துநினைத்துக் கண்ணீர் வடித்து அழுது கொண்டே ஒரு மூலையில் இருந்தாள்.

என்ன ஆச்சரியம். எவரும் நினைக்க முடியாத வகையில் மனோகரன் வல்லிபுரத்தினுடைய வீட்டுப்படலையைத் திறந்துகொண்டு முற்றத்துக்கு வந்தான். முற்றத்துக்கு வந்த மனோகரனைக்கண்டதும் வல்லிபுரம் அப்படியே மலைத்துப் போய் நட்டமரம் போலப் பேச்சுமூச்சின்றி பார்த்துக் கொண்டு நின்றார்.

மனோகரன் வல்லிபுரத்தைப் பார்த்து "மாமா, நீங்கள் உங்கள் மகளை எனக்கு மணம்முடித்து வைக்கவே முழு மனத்தோடு எங்கள் வீட்டிற்கு வந்தீர்கள். அதை அப்பா குழப்பிப்போட்டார். ஆனால் உங்கள் மகளைக் கட்டப்போகிறவன் நான். அப்பா அல்ல. ஆகையாலே நீங்கள் இப்பவே எனக்கு உங்களின்ரை மகளைக் கட்டிவைக்கச் சம்மதமானால், உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள் நான் உங்கள் மகளை ஏற்றுக் கொள்கிறேன்" என்றான்.

வல்லிபுரம் பரக்கப் பரக்க விழித்தான். அவன் மனோகரனுக்கு என்ன பதிலைச்சொல்லுவது என்பது தோன்றாது திக்குமுக்காடினான்.

ஏன் யோசிக்கிறியள்? உங்கள் மகளுக்கும் உங்களுக்கும் என்னைப் பிடித்துக்கொண்டால் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டியதுதானே? நான் அல்லவா உங்கள் மகளை ஏற்றுக்கொள்ளுபவன்?" என்றான் மீண்டும் மனோகரன்.

வல்லிபுரம் சிரித்தார். அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தது. அவர் மனோகரனைப் பார்த்து "நட்டாற்றில் தவித்த எங்களைக் கரைசேர்த்துவிடத் துணிந்து இறங்கிய உங்களின் தியாக குணத்தை நாங்கள் மெச்சுகின்றோம். இனி நாகேஸ்வரி உங்களுக்கே உரியவள்" என்றுகூறி அவனைக் கட்டித்தழுவிக்கண்ணீர் விட்டழுதான்.

அன்று இரவே அவர்கள் இருவருக்கும் கோயிலில் திருமணம் நடந்தேறியது. மறுநாள் மனோகரன் நாகேஸ்வரியையும் அழைத்துக்கொண்டு கொழும்புக்குப் போய்விட்டான்.

சித்திரை மாதத்துப் பால் நிலவு அன்றைய இரவைப் பகலாக்கி கொண்டிருக்கிறது.

கொழும்பு நோக்கிப் போய்க் கொண்டிருந்த யாழ்ப்பாணம் மெயில் புதுமணத்தம்பதி இருவரைச் சுமந்து செல்லும் களிப்பில் வாயுவேகம் மனோவேகமாகப் பறக்கிறது.

அன்றிரவு காய்ந்த அற்புத மான நிலவு வீண்போகவில்லை.

(யாவும் கற்பனை)

சுபம் கொழிக்கும் சோபகிருது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் இருக்கமாட்டா. இதனால் பலவிதமான செல்வாக்குகளும் மாறிக்கொண்டேவரும். பண்டைய எங்களது மகரிஷிகள் திரிகாலஞானிகளாக விளங்கினர். அவர்கள் சோதிடம், வானசாஸ்திரம் ஆதியனவற்றில் மட்டுமன்றி திரிகாலமு முணர்ந்தவர்களாக

வியா.	சூரி. புதன்	5	6
வெள்.	நவக்கிரக நிலை		செவ். ராகு
இலக். சனி கேது			8
12	சந்.	10	9

விளங்கியமையால் இக்கிரகங்களது மாற்றங்களை வெகுவாக நுணுகியாராய்ந்து சட்டதிட்டங்கள் பலவற்றையும் தயாரித்து எமக்காகப்பாதுகாத்துத் தந்துள்ளனர். இந்த விபரங்களைக்கொண்டு ஆண்டுதோறும் அறிஞர் பஞ்சாங்கங்களைத் தயாரித்து வெளியிடுகின்றனர். இவ்வாறு வெளியிடப்படும் பஞ்சாங்கங்களில்முற்கூட்டியே நடக்கவிருக்கும் கிரகமாற்ற விபரங்களும் மக்களது வாழ்க்கையோடொட்டிய வற்றுக்கு எவ்வெக்கிரகங்கள் பொறுப்பென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் புத்தாண்டு தினத்திலே மக்கள் படித்தறிந்து தமது வாழ்க்கையைச் சீராக அமைத்துக் கொள்ளவேண்டியே இப்பலன்களை ஈண்டு எழுதப்புகுந்தோம்.

சோபகிருது ஆண்டு

"சோப கிருதுதன்னிற் றொல்
லுலகெல் லாஞ்செழிக்கும்
கோப மகன்று குணம்
பெருகுஞ் — சோபனங்கள்
உண்டாகு மாரியொழி
யாமற் பெய்யுமெல்லாம்
உண்டாகு மென்றே யுரை."

என்று பண்டைய நூல்களில் சோபகிருது ஆண்டைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அழிவை தருதற்கான "பிலவ" ஆண்டு கடந்து, அட்டகிரக சேர்க்கையைத் தந்த சுபகிருது நீங்க வருகின்றது இச்சோபகிருது ஆண்டு உலகமெல்லாம்செழித்தோங்குவதுடன் சுபகருமங்களெல்லாம் உண்டாகி, கோபக்குரோதங்கள் நீங்கி, ஒழியாது பெய்யும் மாரியால் பல நலங்களும் பெற்று இவ்வாண்டிலே மக்கள் இன்பமாக வாழ்வர் என்று இப்பாடல் நமக்குத் தெருட்டுகின்றது.

சுபத்தைத்தருகின்ற இச் சோபகிருது ஆண்டானது கலியுகாதி சுத்த தினமாக 1849667, நாடி 48, விநாடி 38, சற்பரை 45ற்குச் சரியான சுப கிருது ஆண்டுபங்குனித்திங்கள் 31-ம் நாள் பின்னிரவு நாடி 48, விநாடி 39-ல்(இரவு1மணி 34நிமிடம்) அபரபட்ச பஞ்சமித்திதியில், கேட்டை நட்சத்திர 3-ம் பாதத்தில், வரியான் நாமயோகமும் கௌலவகரணமும்புதன் காலவோரையும் வெள்ளி குக்கும வோரையும் தாமதகுணவேளையும் நட்சத்திரபஞ்சபட்சி சாவுத்தொழில் செய்யும்போதிலும் மகர இலக்கினத்திலும் இடபநவாம்சத்திலும் புதிய ஆண்டான சோபகிருது பிறகின்றது சூரிய பகவான் மீன இராசியிலிருந்து மேட இராசிக்கு இந்நாளேவேளையில் பிரவேசிக்கின்றார். இத் தினத்தில் இரவு 9மணி 34 நிமிடம் முதல் (நாடி 38, விநாடி 39) இரவு 5மணி 34 நிமிடம்வரை (நாடி 58, விநாடி 39) விஷுபுண்ணிய காலமாகும்.

இந்த சோபகிருது ஆண்டானது மகர இலக்கினத்திலே பிறக்கின்றது. இலக்கினாதிபன் சனி தனது சொந்த வீட்டிலேயே (இலக்கினத்தில்) நிற்கின்றார். இவருடன் சேது கூடிநிற்கின்றார். பத்தாதிபதியான வெள்ளி இரண்டாமிடத்திலே இருக்கின்றார். நான்குபதினொராம் இடத்திற்கதிபதியான செவ்வாய் சப்தமகேந்திரத்தில் இராகுவுடன் கூடி இருக்கின்றார். மூன்று - பன்னிரண்டாமதிபதியான வியாழபகவான் மூன்றாமிடத்திலேயே இருக்கின்றார். அட்டமாதிபதியான சூரியபகவான் நான்காமிடமான சுகத்தானத்திலே ஆறு - ஒன்பதாதிபதியான புதனுடன் கூடியிருக்கின்றார். சப்தமகேந்திராபதியான சந்திரன் பதினொராமிடத்திலே இருக்கின்றார். உதயலக்கினத்தை செவ்வாயும், இராகுவும் நோக்குகின்றார்கள். செவ்வாயை சனி நோக்குகின்றார். செவ்வாய்க்கிரகமானது சந்திரனுடன் பரிவர்த்தனமாகி யோகமடைந்துள்ளார். இத்தகைய முறையிலே கிரகாதிபத்தியங்களையடைந்து அகிலவுலகிலுமுள்ள சீவராசிகளையும் தமது கருணைக்குள் கட்டுப்படச்செய்யும் மகாசக்தி வாய்ந்த இந்நவக்கிரகங்கள் இச் சோபகிருது ஆண்டிலே கீழே தரப்படுமாறு அதிகாரத்துறைகளை வகிக்கின்றனர்.

இராசா—செவ்வாய் இவரது ஆதிபத்தியததில் ஆட்சியாளராலும், சோரராலும், சத்துருக்களாலும் அக்கினி-நோய்-கலகம்-பஞ்சம் ஆதியவற்றினாலும் மக்களிடையே குழப்பங்களுண்டாகி, நாட்டிலே அமைதி குன்றி, அந்தரநிலைமை ஏற்படும். மழை குறைவாக இருப்பினும் சிறுதானிய விழைவுண்டு. யுத்த காரகனான செவ்வாயே அரசனாக இருப்பது கடுங்கோப நிலைமையைக் குறிக்கின்றது.

மந்திரி—சூரியன் இவரது ஆதிபத்தியத்தினால் ஆட்சியிலுள்ளோருடைய அக்கிரமங்கள் அதிகரிக்கும். மக்களுக்கு ஆட்சியாளரால் அளப்பரிய இன்னல்களுண்டாகும். அவர்களுக்கு நிம்மதி இருக்காது. பூங்காக்களும், மரச்சோலைகளும் . பெருகுவதுடன் சுழி மழைக்கும் இடமுண்டு.

ஸஸ்யாபதிபதி—செவ்வாய் அபாயகரமானவனாய செவ்வாயே உணவாதாரத்துக்குப் பொறுப்பாகவிருக்கின்றார். சனங்களிடையே ஆயுத பயம் பெருகுதல் காணப்படும். நீர் நிலைகளிலே உட்டண மிகுதியால் சலம் வற்றி, அதுகாரணமாக செழித்தோங்கி வளர்ந்த பயிர்கள் தீய்ந்து போகும். சிறுதானியப் பயிர்கள் நல்விளைதலைத் தரும்.

சேனாதிபதி—சனி அரசியற் கோளான சனிபகவானே சேனாதிபதியாவதால் நாட்டிலே அரசியலில் குளறுபடியும், இராச கலகமும், ஆட்சியாளரது அக்கிரமங்களதிகரித்தலும், தருமங்குன்றி அதர்மம் ஓங்குதலும், பொருள்களது விலைவாசிகள் விஷசுரம் போல் அதிகரித்தலும், சோரருக்கு நற்காலமும், திருடுக்கள் அதிகரித்தலும் உண்டாம்.

தானியாதிபதி—சந்திரன் தானியங்களுக்கு அதிபதியாக சந்திரன் வருகின்றார். இதனால் பசுக்கள் விருத்தி, பால் முதலிய பாற்பொருட் பெருக்கம், நன்மழை காரணமாக பயிர்ப்பலிதம், கமத்தொழிற் சிறப்பு, மக்களுக்குச் சுபம், தானிய விருத்தி ஆதியனவுண்டாம்.

அர்க்காதிபதி—சனி பொருள்வளத்துக்கதிபதியாக சனிபகவான் வருகின்றார். இதனால் அரசியல் சூதாட்டக்காரருக்கு அதிட்டமடிக்கின்றது. மக்களது பொதுச் செல்வத்தை அரசியல் சூதாடிகள் கொள்ளை கொள்வர். நாட்டிலே மழை குறையும் பொருள்கள் விலையேறும். மக்களிடையே நோய் தோன்றி அவர்களை வாட்டும்.

மேகாதிபதி—சனி மழை, சலவாதாரம் போன்றவற்றுக்கு அதிபதியாக சனிபகவான வருகின்றார். மக்களுக்கு கமத்தொழிலுக்குப் போதிய நீர் வசதி கிடைக்காது. மழை குறையும். சுழிமழைதான் பெய்யும். பொருள்கள் அருந்தலாகும். கருமையான தானிய வகைகள் மலிவாக வரும். திருடர்களது கொடுங்கோன்மை மக்களிடையே நடக்கும்.

இராஸாதிபதி—வியாழன் சுபத்தைத் தரும். வியாழபகவான் இரஸாதிபதியாக வருவதால் காடுகள் விருத்தியாகும். சகல நாடுகளிலும் நன்மழை பொழியும். பாற்பசு விருத்தியாவதுடன் பாற்பொருள்களும் பெருகுதற்கிடமுண்டு.

11	சூரி.	இலக். வெள்.	2
சந்.	நவாம்ச நிலை		சனி ராகு
கேது			4
8	செவ்.	6	புதன் வியா.

சுகந்த பரிமளவஸ்துக்கள் விருத்தியாகும்.

நீராஸாதிபதி—செவ்வாய் கனிப்பொருள்களுக்கு அதிபதியாக செவ்வாய் வருகின்றார். இவரது ஆதிபத்தியத்தில் சந்தனம், குங்குமம், பவளம் போன்ற பொருள்கள் மலிந்து மக்களுக்கு நலன் புரியும்.

இந்தச் சோபகிருது ஆண்டிலே சூரியன், சந்திரன், செவ்வாய், வியாழன், சனி ஆதிய கிரகங்களுக்கே ஆதிபத்தியங்கள் வந்துள்ளன. புதன், வெள்ளி, இராகு, கேது ஆதியவற்றுக்கு எவ்வித ஆதிபத்தியங்களும் கிடைக்கவில்லை. சுபக்கிரகங்களிலும் பார்க்கக் கொடிய கிரகங்களுக்கே அதிகார ஆதிபத்தியங்கள் கூடுதலாகக் கிடைத்துள்ளன. சூரியன் நான்காவது தானத்திலே உச்சமடைந்திருக்கவும், சந்திரன் பதினொராவது தானத்திலே நீசமடைந்து அத்தானாதிபனுடன் பரிவர்த்தன யோகம் பெற்று நீசபங்கமடைந்திருக்க

(12ம் பக்கம் பார்க்க)

சோபகிருது
திருக்கணித பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணிய ஐயர் எப். ஆர். ஏ. எஸ். அவர்களால் கணிக்கப்பெற்ற 76-ம் வருடப்பிரசுரம் பக்கம்: 85. விலை: ரூபா 1-50.

இவ்வருடம் அரசியல் வட்டாரங்களில் எதிர்பாராத திடீர் மாறுதல்களும், வெளிநாட்டு வல்லரசுகளுடன் அதிக தொடர்பும், தேசியவருமானத்தில் பலவித நஷ்டங்களும் ஏற்படுமென இப் பஞ்சாங்கத்தில் சோபகிருது வருஷப்பலன் கூறப்பட்டுள்ளது.

மேலும், 'நவராத்திரி, தீபாவளி நாள் வேறுபாடு' என்று தலைப்பிட்டு வெளியாகியுள்ள ஓர் அறிவித்தல் தெரிவிப்பதாவது:

நவராத்திரி, தீபாவளி ஆகிய விசேட தினங்கள் எத் தேசத்திலிருப்பவர்களாலும் ஒரே தினத்தில் கொண்டாடப்பட வேண்டும்.

அவ்வாறின்றி இந்திய மக்கள் இத் தினங்களைப் புரட்டாதியிலும் இலங்கைமக்களுள் ஒருசாரார் ஒருமாதங் கடந்து ஐப்பசியிலும் கொள்வார்களாயின் அது அர்த்தமற்ற செயலாவதோடு அவச் செலவுக்கும் பிற மதத்தவரின் பரிகசிப்புக்கும் இடமளிப்பதாகும். ஆகவே புரட்டாதி 2-ந் திகதிநவராத்திரியையும் 30-ம் திகதி தீபாவளியையும் கொண்டாடுவதே அறிவுடையோர் கடனாகும். இலங்கையிலிருந்து வெளிவரும் நமது சகோதர பஞ்சாங்கம் ஒன்று இவ்வாண்டு ஐப்பசிமாதம் 1ம்திகதி வெள்ளிக்கிழமை நவராத்திராரம்பம் எனவும் ஐப்பசிமாதம் 29-ந் திகதி தீபாவளி எனவும் குறிப்பிடுகின்றது.

உயர்ந்த ரகம்! நிதான விலை!

விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்

பெனறிஸ், மைசூர், பெங்களூர், ஜோஜெட், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளும், மற்றும் கைத்தறி ஜவுளிகளும், பட்டு வேட்டி சால்வைகளும் சகாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

22, பெரியகடை. — யாழ்ப்பாணம்.

விஜயஞ்செய்யுங்கள்!

கண்ணைக் கவரும் நவீன

வீட்டுத் தளபாடங்களை

தெரிவுசெய்வதற்குத்

தகுதியான ஸ்தாபனம்

ஹோம் நீட்ஸ்

(சிவன் கோவிலடி)

278, 280, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

Town Smithy

Co-operative Society Ltd.,

(Regd. No. J/1316)

48, Manipay Road, JAFFNA.

1. மோட்டார் யந்திர உறுப்புகள்;
2. தண்ணீர் இறைக்கும் யந்திர உறுப்புகள்;
3. மோட்டார் மீன்பிடியந்திர உறுப்புகள்;
4. கேற், ஊசிக்கால், கடைச்சல், உழவு யந்திர வேலைகள்;
5. அச்சுக்கூட யந்திர உறுப்புகள்;
6. தெளிமை பூச்சு வேலைகள்;
7. கோவில் தேர், சகடை, திருப்பணி வேலை

இவைகளெல்லாம் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

இலங்கைத் தமிழரின் வாழ்வும் வளமும்

ஒருவன் உயிர்வாழ்வதற்காக தன் ஜீவனத்தின் அத்தியாவசியத் தேவைக்காக ஏதாவதொரு வேலை தேடும் போது அவனுக்கு ஒரு வேலை கிடைக்காவிடில் அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுகிறதென்பதை நாம் அப்பொழுது உணர்ந்து கொள்ளமுடியும்.

ஆனால் தமிழர் வாழும் பகுதியில் உள்ள வேலையில்லாப் பிரச்னை இவ்வகையானதல்ல. அவர்களில் பலர் தாம் விரும்பிய வேலை ஒன்றையே எதிர் நோக்குகின்றனர் . . . . .

இவ்வாறு தமிழ் மக்களின் இன்றைய வாழ்க்கை நிலையை ஆராயும் இக் கட்டுரையாளர் ஒரு கல்லூரி உபாத்தியாயர், பட்டதாரி. கிராமச் சங்கத் தலைவராயிருந்தவர். இந்தியா சென்று அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

திரு. சு. ஸ்ரீபாஸ்கரன்

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வாளொடு தோன்றி மூத்த குடி என்ற தமிழ் வாக்கு தமிழன் தோன்றியகாலத்தையும் அவன் வீரத்தையும் குறிப்பிடுகின்றது. ஆகவே, தமிழன் உலகில் தோன்றிய காலம் முதல் இன்று வரை வாழ்ந்த வாழ்வை இலக்கியங்கள் கண்ணாடி போல நமக்கு காட்டுகின்றன. நான் இலக்கிய ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை. எனினும் சிலவற்றைக் குறிப்பிடுவது அவசியமாகிறது.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்தவன் தமிழன். இந்தப் பண்பாடு எமது வாழ்க்கையில் பிரதிபலிக்குமேயானால் இன்னல்கள் இன்றி வாழலாம். "ஈதல் இசைபடவாழ்தல்" என்று குறள் காட்டிய வழிப்படி வாழ்ந்தார்கள் நம்முன்னோர். ஈகையிலும் கட்டுப்பாடு இருந்தது. தனது சொந்த முயற்சியில் உழைப்பதிலிருந்து கொடுப்பதைத் தர்மம் என்றும் நமது முதியோரும் மூதாதையரும் திரட்டிய சொத்திலிருந்து கொடுப்பதை அதர்மம் என்றும் விதித்தவன் தமிழன். தமிழ் மகன் தானாக உழைத்து உண்ண வேண்டியவன் என்ற காரணம் பற்றியே பெண்ணுக்கு சிறீதனம் வழங்கும் முறை தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டது என்று நான் எண்ணுவதுண்டு.

தமிழன் தியாகம்

சாம்பிராணி, சந்தனம்போன்றவற்றின் தனிச்சிறப்பு அவை நல்கும் நறுமணமாகும். சாம்பிராணி எரியும்போதும் சந்தனம் உரைத்துத் தேயும்போதும் தான் அவற்றின் விசேஷ தன்மை வெளிப்படுகின்றது. அது போல தமிழனின் பாரம்பரியச் சொத்துக்களை மற்றவர் அனுபவிக்கும் வகையில் வாழ்ந்தால் தான் —பிறர்க்கென வாழ்ந்தால்தான் தமிழன் வளம் பெற்று வாழலாம். இதன் படி நாம் தியாகம் செய்ய வேண்டியநேரத்தில் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். தமிழ் மக்கள் தியாகம் செய்யத் தயங்காதவர்கள். அதனால் தான் தம் கடவுளுக்கும் 'தியாகராஜா' என நாமம் சூட்டினர்.

தியாகம் சுதந்திரம் முன்னேற்றம்

உலகில் பலர் தோன்றி மடிந்தனர். பலர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இவர்களுள் எத்தனை மனிதரை நாம் அறிந்திருக்கின்றோம்? மிகச் சிலரை --தியாகம் செய்த சிலரைத்தான் நாம் அறிந்துள்ளோம். தேவைகளைக் குறைப்பதுகூட ஒருவகைத் தியாகம் தான். தேவைகளைக் கூட்டினால் வளம்பெற வாழமுடியாது. தேவைகளைக் குறைத்து வாழ்ந்தவர் காந்தியடிகள். வளம்பெற்ற வாழ்வு வாழ்ந்தார்; வானளாவப் புகழ்பெற்றார். நாம் தேவையைக் கூட்டுவோமேயானால் "நாம் ஆர்க்கும் குடியல்லோம்" என்று திருநாவுக்கரசர் கூறியதற்கமைய வாழமுடியாது. அதிக தேவைகள் நமக்கு என்றைக்கும் விலங்கு. மண்ணின் இன்பங்களை விரும்பி சுதந்திரத்தின் மாண்பினை இழப்பரோ?, கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டி நகையாரோ? என்றார் பாரதியார். இந்த இரு வாக்கியங்களிலும் அடிப்படையாக இருப்பது சுதந்திரம். அதை அரசியற் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் என இரு பிரிவுகளாக்கலாம். ஆனால் பொருளாதார சுதந்திர மற்ற அரசியற் சுதந்திரம் பயனளிக்காது. இவ்வுண்மையை நன்குணர்ந்தவர் காந்தியடிகள். அதனாலேதான் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. இதற்கமைய அன்று இந்தியர் திட்டம் தீட்டினர். அதனால் இன்று அவர்கள் பெற்ற சுதந்திரத்தை நிலைநிறுத்தியுள்ளனர்.

அத்தியாவசிய தேவைகள்

உலகில் சாதாரண மனிதன் ஒருவன் உயிர்வாழ்வதற்குரிய அத்தியாவசியமான பொருட்கள் உண்டி, உறையுள், உடை ஆகிய மூன்றுமேயாம். இம் மூன்றையும் தமக்குத் தானே தேடுவதும், மற்றவர் தேடுவதற்கு உதவுவதும் தமிழனின் உயர்ந்த பண்பாடு. இரந்து, பிச்சையெடுத்து வாழ்பவன் தமிழனல்ல என்பதை "தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறுகதைகள் பேசி, மாயும் வேடிக்கை மாந்தர் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல" என்னும் பாரதிபாடல் தெளிவாக்குகின்றது.

எனவே, உண்டி, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் பெறுவதற்கு — மற்றவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு -முயற்சி, அறிவாற்றல், ஆரோக்கியம் ஆகிய மூன்றும் அவசியமாகும். இவற்றிற்கு மேற்பட்ட தேவைகள் டாம்பிக வாழ்விற்கு வேண்டியன. ஆதலால் அவற்றைப்பற்றிய கவலை நமக்கு வேண்டாம். இன்றுள்ள தமிழ் மக்களுக்கு முயற்சி, அறிவாற்றல், ஆரோக்கியம் ஆகிய துறைகளில் உள்ள குறைகளை நிவர்த்திசெய்யக் கூடிய ஒரு திட்டம் தீட்டுவதே எமது கடமையாகும்.

இதுகாறும் பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்தாமல் இருந்தோம் அல்லவா? அதற்குக் காரணம் என்ன? பொருளாதாரத்துறையில் பின்தங்கியதற்கு யார் பொறுப்பு எமது குறைகள் யாவற்றிற்கும் எம்மிடத்தில் விழிப்புணர்ச்சி யில்லாததே காரணம். "நன்றும் தீதும் பிறர்தரவாரா" என்று புறநாநூறு கூறுகின்றது. ஆதலால் எங்களால் ஏற்பட்ட குறைகளை நாங்களாகவே தீர்த்துவைத்தல் சுலபமல்லவா?

இதுவரை அத்தியாவசிய தேவைகள் கிடைத்ததெப்படி?

எங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பெருக்கிப் பெறுவதற்கு வழிவகைகளை ஆராய முன், நமது முன்னோர் இவற்றைப் பெற்ற வழிகளையும் அக்காலத்திருந்த வாழ்க்கை வசதிகளையும் ஆராயவேண்டியது அவசியமாகும். ஆதி மக்கள் நாடோடிகளாக மந்தை மேய்த்து வாழ்ந்தனர். பின் வேளாண்மை செய்து வாழ்ந்தனர். இக்கால வாழ்க்கை வரலாறு ஆராய்ச்சி எங்களுக்கு அதிக பயன் கொடுக்காது. ஆதலால் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்ட காலத்தை குறிப்பாக ஆங்கிலேய ஆட்சிக் காலத்து வாழ்க்கையை—ஆராய்வோம். அக் காலத்தில் எங்களுக்கு மிஷனரிமாரினால் கல்வி வசதிகள் கிடைத்தன. சுகாதாரச் சீர்கேடுகள் குறைக்கப்பட்டன. இதன்பயனாக தமிழ் மக்கள் அறிவாற்றலுள்ளவர்களாக, முயற்சியுடையாராகத் திகழ்ந்தனர். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களில் பலருக்கு வேலை வசதிகள அல்லது உத்தியோகங்கள் கிடைத்தன. "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற தற்கமைய தமிழ் மக்கள் பலர் மலாயா போன்ற பிற நாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதித்தனர். வியாபாரத்தில் ஈடுபட்டனர் சிலர். விவசாயிகளாயிருந்த தமிழருக்கு உத்தியோகத்தரை உருவாக்குவதற்கு மத்திரம் ஏற்றதாயிருந்தது. எனினும் எம்மில் பலர் "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை" என்பதற்கிணங்க உழவர்களாய் சுதந்திரம் பெற்றவர்களாய்வாழ்ந்தனர். எனவே உழுதொழில், உத்தியோகம், பிறதேசச் சம்பாத்தியம், வியாபாரம் ஆகியனமூலம் எங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பெற்றோம்.

ஆங்கிலேய ஆட்சியின் இறுதிக்காலத்திலும் அதன் பின்னரும் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பலவும் நமக்குத் தெரிந்தவை. அரசியல்நிலை மாறியபோழ்திலும் கல்வி முறை மாற்றப்படாதது ஒரு பெருங்குறை. உத்தியோகத்திற்கான கல்வியைக் கற்றோம். ஆனால் உத்தியோகத்துறையில் எங்களுக்கு இடம் குறைந்தது. பிற நாடு சென்று சம்பாதிக்கும் சந்தர்ப்பமும் துண்டிக்கப்பட்டது. எனவே எம்மில் பலர் தவிக்க நேர்ந்தது. என்றாலும் பெரும்பான்மையான தமிழர் உழுதுண்டு வாழ்கின்றனர் என்பது நம்பிக்கை தருவதாகவுள்ளது.

அரசாங்க உத்தியோகமும் உதவியும்

ஆசிரியர் உட்பட இலங்கை முழுவதிலுமுள்ள தமிழர் சம்பளமாகவும் பென்ஷனாகவும் அரசாங்கத்திடமிருந்து ஒரு வருடத்தில் 1200 இலட்சம் ரூபாய் வரையில்தான் பெறுகின்றனர். இலங்கையின் குடிசனத்தில் மூன்று விகிதத்தினர் தான் அரசாங்கத்தின்கீழ் உத்தியோகம் வகிக்கின்றனர். இவர்களில் ஏறக்குறைய 40 வீதத்தினர் தமிழர். எனவே இலங்கைத் தமிழர் தொகையில் 10 வீதத்தினரே தம் வாழ்விற்கு அரசாங்கத்தை நம்பியிருக்கின்றனர் என்று கூறலாம். இதைவிட நம்மவர் தனியார் துறைகளிலும் வேலை செய்கின்றனர். எங்களில் இன்னும் சிலர் பிற தேசம் சென்றுசம்பாதிக்கின்றனராயினும் அத் தொகை குறைந்துவருகின்றது. தென்னிலங்கையில் சேர்ந்து முதலீடு செய்து தொழில் புரிந்துபிழைக்கின்றனர் சில தமிழர். ஆனால் இவ்வரிசையில் வருவோரின் எண்ணிக்கை இலங்கைத் தமிழரின் முழுத்தொகையில் கால பங்குதானும் இராது என்பது நிச்சயம். எமது பொருளாதாரத்தை எப்படிக் கூட்டலாம் என்று நான் விளக்கம் தரும் போது எங்களுக்கு அரசாங்க உத்தியோகம் அடியோடில்லாது போனபோதிலும் கூட எமது பொருளாதார நிலை பாதிக்கப்படாது என்பது தெளிவு.

அதுமாத்திரமல்ல அரசாங்க உத்தியோகத்தை ஏற்காமலும் அரசாங்க உதவி இல்லாமலும் நாம் வாழலாமென அபிப்பிராயப்படுகின்றேன். ஏனெனில் 1960-ம் ஆண்டில், கடன் திருப்பிக் கொடுத்ததுபோன்ற செலவுகளை விட சகலதுறைகளிலும் இலங்கை முழுவதற்கும் அரசாங்கம் செலவிட்ட தொகை 15247 இலட்சம் ரூபாய். இதில் 20 சத வீதம் தமிழ்ப் பகுதிகளில் செலவிடப்பட்டதென்று கருதினாலும் கூட எங்களுக்குச் செலவிட்ட தொகை ஏறக்குறைய 3000 இலட்சம்ரூபா ஆகிறது. இத் தொகையில் நம்மவர் அரசாங்கத்திடமிருந்து சம்பளமாகவும் பென்ஷனாகவும் பெறும் தொகையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தொகையிலும் மும்மடங்கு பெறக்கூடியதற்கான வழிகள் உள்ளன. இதுபற்றிப் பின்னர் குறிப்பிடுகிறேன்.

இன்றைய நிலை

எனவே இலங்கைத் தமிழரின் பொருளாதாரம் விவசாயத்தில் பெரிதும் தங்கியுள்ளது. விவசாயம் விருத்திசெய்யப்பட்டு தொழில்களும் பெருகினால் எமது குறைகள் நீக்கப்பட்டு வளம்பெற வாழலாம் என்பது திண்ணம்.

விவசாயத்தையும் தொழில்களையும் எப்படி விருத்தி செய்ய வேண்டுமென்பதை ஆராயமுன் எமது பிரச்னைகளை இன்றைய கண்கொண்டு நோக்கவேண்டும்.

உணவு

முதலாவதாக எங்கள் உணவு நிலை என்ன? நாம் உண்ணும் பிரதான உணவு சோறு. இதற்கு நெல்லு வேண்டும். இலங்கை முழுவதிலும் நெல் விளைவிக்கப்படும் நிலத்தில் 31 வீத நிலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளது. 1960-ம் ஆண்டில் உத்தரவாத விலைத் திட்டத்தின்படி (G. P. S.) இலங்கை முழுவதிலும் அரசாங்கம் வாங்கிய நெல்லில் 40 வீதம் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் விளைவிக்கப்பட்ட நெல்லாகும். வடக்கு மாகாணத்திலும் பார்க்க கிழக்கு மாகாணத்தில் நாலு மடங்கு நெல் விளைவிக்கப்பட்டது. வட மாகாணத்தில் பயிரிடக்கூடிய நிலம் அதிகம் உண்டு. இப்போது இவ்விரு மாகாணங்களிலும் விளையும் நெல் ஏறக்குறைய 110 இலட்சம் புசல். ஒருவனுக்கு மூன்றுநேரச் சாப்பாட்டிற்கும் 4 கொத்து நெல் 5 நாட்களுக்குப் போதுமென்பதை சராசரியாக வைத்துக்கொண்டால் இவ்விரு மாகாணங்களிலும் விளையும் நெல் அவ்விரு மாகாணங்களிலும் வாழ்பவர்களுக்குப் போதுமானது. நெல்லை விட வேறு தானியங்களும் இப் பகுதிகளில் பயிரிடப்பட்டு எமக்கு உபயோகமாகி வருகிறது. தமிழ்ப் பகுதிகளில் விளைவிக்கப்படும் காய்கறி; பழவகைகளும் தமிழ்மக்களுக்குப் போதுமானது. எனவே எமக்கு வேண்டிய உணவு எம்மிடமுண்டு.

உடை

உடையைப் பொறுத்தவரையில் எமக்குக் கஷ்டம் ஏற்படக்கூடும். ஆனால் உடை உற்பத்திக்கு யாழ்ப்பாணத்தில் வல்லை வெளியில் ஆரம்பமாகும் நெசவு ஆலை (Spinning and weaving mill) ஒன்றே நமது உடைத் தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்கக் கூடும். பருத்தியையும் கூடவே விளைவிப்போமாயின் உடைக் கஷ்டம் அறவே நீங்கிவிடும்.

உறையுள்

வசிப்பதற்கு வீட்டைப் பொறுத்தவரையில் எங்களுக்கு அதிக கஷ்டமிருப்பதாக நான அறியவில்லை. கொட்டிலில், குடிசையில், கோபுரத்தில் வாழக் கூடியவர்கள் தமிழர். ஆனால் எம்மிடம் ஒரு குறையுண்டு. சிலர் புது வீடு கட்டுவதானால் ஒரு மாளிகை போன்ற வீடு கட்டுவதற்குப் பணம் சேரும் வரை வீடு கட்ட ஆரம்பிப்பதில்லை. இது "இடம்படவீடெடேல்" என்று ஔவை கூறியதற்கும் மாறுபாடாயுள்ளது. தமிழ்ப் பண்பாடுடையராக வாழ ஆரம்பித்தால் வீட்டுக் கஷ்டம் எமக்கிராது.

அறிவாற்றல்

அறிவும் ஆற்றலும் நிறையப் பெற்றுள்ளோம். ஆனால் எதிர்காலத்தை மனதிற் கொண்டு எமது கல்விமுறையை மாற்றியமைக்கவேண்டும்.

ஆரோக்கியம்

தமிழன் சோம்பேறியாக வாழ்வதில்லை. கடும் உழைப்பால் முன்னேறியவன். சரீர வேலை செய்பவன் இதனாலும் எமக்குக் கிடைத்த சுகாதார வசதிகளாலும் ஆரோக்கியமுடையவராய் விளங்குகிறோம்.

முயற்சி—வேலையின்மை

நம்மை எதிர்நோக்கியுள்ள அதிமுக்கிய பிரச்னை வேலைப் பிரச்னையாகும். இதை இரு வகைப்படுத்தி ஆராயவேண்டும்; ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம். மற்றது வேலைக் குறைவு.

எமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தவறான ஒரு கருத்தைக் கொடுத்திருக்கின்றனர். உண்மையில் வேலையில்லாத் திண்டாட்டம் என்றால் என்ன? எஸ். எஸ். ஸி., எச். எஸ். ஸி. அல்லது பி. ஏ., பி. எஸ். ஸி. படித்தவர்கள் தாம் விரும்பும் வேலை கிடைக்கும்வரை வீட்டில் உண்டு உடுத்து இருந்தால் அவர்கள் வேலையற்றுத் திரிகிறார்கள் என்று கூறலாமா? அது வேலையில்லாத் திண்டாட்டம் ஆகுமா? இல்லை. ஒருவன் உயிர்வாழ்வதற்கு, தனது அத்தியாவசிய தேவைகளைப் பெறுவதற்கு ஏதாவது ஒரு வேலை, (தான் விரும்பிய வேலையல்ல) தேடுவதால் அவனுக்கு வேலை கிடைக்காவிடில் அப்பொழுது அவன் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டவன் என்று கூறுவது பொருளாதார ரீதியாக வேலையில்லாத் திண்டாட்டமாகும். இதன்படி எமது பிரச்னையை நோக்கினால் தமிழ்ப்பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் கிடையாது. ஏனென்றால் உணவுக்கு, உடைக்கு உறையுளுக்குக் கஷ்டப்படும் தமிழரை நான் இதுவரை காணவில்லை. அதுமாத்திரமா? தமிழ்ப் பகுதிகளில் கூலிவேலைக்கு வேதனம் அதிகரித்தபோதிலும் கூலி ஆட்கள் தொகை மிகக்குறைவு. அதோடு சில தொழில் துறைகளில், உதாரணமாக மரவேலை, இரும்புவேலை, சீமெந்து வேலை ஆகிய துறைகளில் தொழிலாளர் பற்றாக் குறையைக் காண்கிறோம். இத் தொழில்கள் மூலம் பலர் வாழ்க்கை நடத்தலாம். ஏற்ற கல்வி முறை இல்லாததால் எம்மவர் தமது சரீரத்தை உபயோகித்து உழைக்கத் தயங்குகின்றனர். எத் தொழில் செய்தலும் இழிவல்ல என்று நாம் கருதுகிற பொழுதுதான் எமக்கு விமோசனம் கிடைக்கும்.

(14-ம் பக்கம் பார்க்க)

சுபம் கொழிக்கும் சோபகிருது

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வும், மேகாதிபத்தியம் வந்திருப்பதாலும் ஸஸ்யாதிபதியாக செவ்வாய் அமைந்திருப்பதாலும் அதிகமான காற்றும், சுழிமழையும், பயிர்விளைவு குறைவாகவும், உட்டணமதிகமாகவும் இருக்கும். கமத்தொழிலிலீடுபட்டோருக்கும், இயந்திராதிகளில் தொழில்புரிவோருக்கும் கஷ்டமான பலன்களே நடக்கும். ஒதுக்கப்பட்ட ஊழிய வகுப்பினருக்கும், கடலிலே தொழில்புரிந்து சீவனம் நடாத்துவோருக்கும், அன்றாடம் கூலிவேலை செய்து வாழ்வோருக்கும், அந்நிய சனங்களுக்கும் இவ்வாண்டு நன்மைப் பேறுகளை அதிகமாக வழங்குகின்றது. இவர்களுக்கு அதிகாரப்பேறுகளையும், சொத்துக்களையும், பொருள்வளத்தையும், வண்டிவாகனப் போக்குவரத்து வசதிகளையும் உதவுகின்றது. கல்வி சம்பந்தப்பட்ட அளவிலே இவ்வாண்டு ஒடுக்கப்பட்டவர்களுக்கு விசேடமாகவும், மற்றோருக்கு குறைந்த பலன்களையும் குறிக்கின்றது. அரசியலைப் பொறுத்த அளவிலே தேசத்தில் ஆட்சியிலிருப்போர் அதிக அடக்குமுறைகளைப் புகுத்தி மக்களது சுதந்திரவேட்கையைநசுக்கியும் பிரபுத்துவ ஆட்சிமுறையைப் புகுத்தி குறிப்பிட்ட ஒருசிலரது கைக்குள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு எதிரிகளை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்தலும் நடக்கக் காணலாம்.

பொருள்வளத்தைப் பொறுத்தளவிலே நாட்டிலே கஷ்டமதிகரிக்கும். அரசாங்கம் அதிக வரிகளை விதித்து மக்களுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தும் வேளையில் புதிய தொழில்களொன்றும் ஆரம்பிக்கப்படமாட்டாது. இதேவேளையில் இருக்கும் தொழில்களும் கைகடக்க விடப்பட்டு அதனால் தொழிலாளர் தகராறும் அதிகரிக்கும். எரிகிற வீட்டிலே பிடுங்கியது ஆதாயமெனக் கொள்ளும் அரசியற்கட்சிகள் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனையும். இராசாவாகசெவ்வாயும், பிரதம அமைச்சராக சூரியனும் இருப்பதால் தலைமைப்பீடமானது மந்திரியின் உத்தரவுக்கு அமைந்தே பாரபட்சமாக நடக்கவேண்டி நேரும். பொருளாதாரத்துக்கு அரசியற்கிரகமான சனியே ஆதிபத்தியம் பெறுவதால் அவரும் மந்திரியின் சொற்படி அமையவேண்டியவராக இருக்கின்றார். தேசத்திலே அராஜகம் தான் தாண்டவமாடும்.

உயிர் பெற்றெழுந்த அற்புதம்...

(15-ம் பக்கத்தொடர்ச்சி)

பின்னர் யேசுநாதரிடம் வந்தபோது, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய கால் எலும்புகளை முறியாது விட்டார்கள். ஆயினும் போர்ச்சேவகர்களில் ஒருவன் அவருடைய விலாவில் ஈட்டியாற் குத்த உடனே, அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டன. இதைக் கண்ட ஒருவனே இப்போது சாட்சி கொடுக்கிறான். இந்தச்சாட்சியும் மெய்யான சாட்சியே"

(அகு: xix 30–35)

கிறிஸ்துநாதரோடு கூட அறையுண்டிருந்தவர்களில் இருவரும் சிலுவையில் உயிரோடிருந்தமையால், அவர்களுடைய கால்கள் முறிக்கப்பட்டன. கைகளில் ஆணிகள் தைத்து இரத்தம் பிரவாகமாக ஓடிய பின்னும் குற்றவாளிகள் சிலுவையில் பலமணிநேரம் மட்டுமன்று, இரண்டொரு நாட்களாயும் சீவனோடிருப்பது கண்கூடாகக் கண்ட விடயம். இருகள்வர்களிலும் உயிர் பிரியாமல் இருந்தமையினால் கால்களை அடித்து அவர்களைக் கொன்றார்கள். அற்பமேனும் குற்றமற்றவரான கிறிஸ்துநாதர் பாதகனைப் போல் சிலுவையிலறையப் பட்டிருக்கிற நேரத்திலே அவருடைய உயிர் பிரியாதிருந்திருக்க மேயானால் போர்ச்சேவகர்கள் அவருடைய கால்களையும் முறித்திருப்பார்களன்றோ! உண்மையாகவே கிறிஸ்துநாதர் மரித்திருந்தார் என்பதற்கு அவருடைய கால்களை முறியாது விட்ட போர்ச்சேவகர்களே தீர்ப்பான சாட்சிகளாவர்.

மேலும், இச்சாடிசியம் அவருடைய திரு விலாவைக் குத்தியபோது அதிலிருந்து இரத்தமும் தண்ணீரும் சொரிந்த சம்சவத்தால் அதிக உறுதிப்பாடடைகின்றது. தவிரவும் கண்கண்ட சாட்சியாகிய புனித அருளப்பர் என்னும் சுவிசேஷகருடைய உண்மையான வாக்கும் இதனை மேலும் மேலும் வலுப்பெறச் செய்கின்றது. அஃதெங்ஙனமாயின் உயிர் போன பின்னே சரீரத்திலுள்ள இரத்தம் நிண நீராக("Serrum") மாறும் என்பது தற்கால வைத்திய சாத்திரிகளின் சித்தாந்தம். கிறிஸ்துநாதர் உண்மையிலேயே மரித்திராவிடின் அவ்வேளை அவர் இருதயத்தின் இரத்தம் நிண நீராக மாறியிருக்கத் தொடங்கியிராது.

மேலும் கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையுண்டு மரித்த பின் அவருடைய திருச் சரீரம் கல்லறை யொன்றிலே சேமித்துவைக்கப்பட்டது. அந்நேரத்தில் பரிசேயர் யேசுநாதர் முன்பு கூறிய வார்த்தைகளை நினைவுபடுத்தி அச்சங்கொண்டு அதன் முன் ஆயுதபாணிகளான காவலர்களையும் கண் விழித்துக் காத்திருக்கச்செய்தனர். இதனைப் புனித மத்தேயு சுவிசேஷம் நமக்கு நன்கு புலப்படுத்துமின்றது.

பிரதான ஆசாரியரும் பரிசேயரும்பிலாத்துவினிடம் விரைந்து சென்று "அந்த வஞ்சகன் உயிரோடிருக்கையிலேயே மரித்த மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தருளுவேன் என்று சொன்னது இன்னமும் எங்கள்காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஆகையால், அவனுடைய சீடர்கள் அந்தச் சடலத்தைக் களவாய் எடுத்துச்சென்று வேறிடத்தில் புதைத்துவிட்டு மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்தருளினார் என்று சனங்களுக்குச் சொல்லாதபடிக்கு, நாங்கள் மூன்றுநாள் வரையும் கல்லறையைக் காவல்பண்ணக் கட்டளையிடும். இல்லாவிடில் பிந்தின மோசம் முந்தின மோசத்திலும் அதிக கெடுதியாயிருக்கும்" என்றார்கள்.

தண்டிலிலிருந்து மலர் புறப்படுவது போலவும், கிறிஸ்துவின் ஊற்றிலிருந்து ஆறு பாய்வது போலவும் கிறிஸ்துவின் உத்தானத்திலிருக்கும் விசுவாசத்திலிருந்து திருச்சபையும் கிறிஸ்துவ சமயம் முழுமையுமே உற்பத்தியாகின்றது. எனவே, இவ்விசுவாசம் மனிதருடைய தனி அபிப்பிராயமாய்-எண்ணமாயல்லாமல் உலகிலேயே மிகப் பெரியதும் மிக விஸ்தாரமுள்ளதுமாகிய ஒரு சபையை உண்டாக்கக்கூடிய அவ்வளவு பலம் பொருந்திய நிச்சயஉணர்வுள்ளதாகியிருக்கிறது ஆதலால் ஒரு விசுவாசம் பரவுகின்ற அளவையும், நிலைக்கின்ற காலத்தையும், பெருக்குகின்ற தன்மையையும்கொண்டு அதன் பலத்தை நாம் நன்றாய் அறியலாமெனில், ஆகாயத்தைப்போல விசாலித்ததும், உலகத்தில் தனக்கு இணையில்லாததுமாகிய இவ்விசுவாசமானது ஈடிணையில்லா நிச்சயமும் பிரசித்தியும் பெற்றதோர் சாட்சியத்தை உறுதிப்படுத்தி நிற்பதால் யேசுநாதசுவாமியின் உயிர்த்தெழுதலாகிய இணையில்லா ஆச்சரியமான சம்பவம் நிச்சயம் உடையது ஆகவேண்டியது. ஆகவே, இத்தினத்திலே யேசுநாதருடைய ஏகபத்தினியாகிய திருச்சபையோடு ஒன்று சேர்ந்து "மூவுலக ராசேஸ்பரன் முடிபில்லா ஆதிநாதன் சாவில் நின்று உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா! அல்லேலூயா!! அல்லேலூயா!!!என்று பாடுவோம்

கட்டுரையாளர்:
வண. பிதா
பெனற் கொன்ஸ்ரன்ரைன் அடிகள்

தானியாதிபயாக சந்திரன் ஆதிபத்தியம் பெற்றிருந்தபோதிலும் செவ்வாய் ஸஸ்யாதிபதியாக ஆதிபத்தியம் பெறுவதாலும், அவரே இராசாவாகவும் வருவதாலும், உணவுப்பொருள் உற்பத்தியில் நாடு துரிதமாகச் செயலாற்றி வந்தாலும் இடையிலே கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போனது போல எல்லாம் பயனற்றுப் போய்விடும். பயிரினங்கள் செழிப்பாக வளர்ந்து நம்பிக்கையை ஊட்டிவிட்டு இடைநடுவிலே அவை வெப்பத்தினாலும் அதிக உட்டணம் காரணமாக நீர்நிலைகள் வற்றி வரட்சியடைவதினாலும், வாடித் தீய்ந்துபோய்விடும். பொருள்களது விலைவாசிகள் குறைவதற்குப் பதிலாக மேலும் அதிகரிக்கும். "சோபகிருது" ஆண்டின் செல்வச் செழிப்பை பொதுமக்கள் அனுபவிப்பது குறைவாகவே காணப்படும்.

பொருளாதார நிலைமையும், அதிகார வெறியும், தேசத்தின் தொழிலில்லாக் கஷ்டமும், ஏற்றுமதி பாதிக்கப்பட்டும், இறக்குமதிக்கு அந்நிய நாடுகளது உதவி கிடைக்காது ஏற்படும் திண்டாட்ட நிலைமையும், உள்நாட்டிலே குழப்பங்களைக் கொண்டுவந்து அமைதியற்ற நிலைமையை ஏற்படுத்தும். இந்த வேளையில் அந்நியர், உள்நாட்டு அரசியலாதிக்க வெறியர் ஒத்துழைப்புடன் நாட்டிலே இடம்பெற முனைவர். அவர் முயற்சி கைகூடின் 1967 வரையில் அரிதிலே பெற்ற சுதந்திரத்துக்கும் பங்கம் நேரலாம்.

நாட்டு மக்களிடையே ஒழுக்கவீனங்கள் அதிகரித்தலும், தானதருமச் செய்கைகள் போலிவேடங்கொண்டோருடையனவாக அமைதலும், தெய்வபக்திகூட ஆஷாடபூதிகளுக்குள்ளாக அமைதலும், தெய்வவழிபாட்டுத் தலங்களே ஒழுங்கற்ற நடத்தைகளுக்கு உறைவிடங்களாக மாறுதலும் காணப்படும். அட்டகிரக சேர்க்கையோடு ஆரம்பமான சமய வழிபாட்டுணர்ச்சிகளெல்லாம் உலகொப்பாசாரமாக மாறி, உண்மையான தெய்வநம்பிக்கையுடையோருக்குமே இன்னல்களை விளைவிக்கும். ஆயினும் இந்த நிலைமை ஈற்றில் தருந்த இடமுண்டு. மதமாற்சரியங்களுக்கும், மதத்தையும், இனபேதத்தையும் ஒட்டிய குழப்பங்கள் ஏற்படுதற்கும் இடமுண்டு. ஆசாரவனுட்டான, சாதி, மத, பேத குழப்பங்களுக்கு இவ்வாண்டிலேயும் இடமுண்டு. இவ்வாண்டிலே நடக்கும் நற்பலன்கள் குறைவாகவும் தீப்பலன்கள் மிகுத்தும் காணப்படும்.

நவீன உயர்தர எண்கணிதம்

திருத்திய பதிப்பு

6ம்-வகுப்புத் தொடக்கம் S. S. C. வகுப்பு வரைக்கும் பாவிப்பதற்குரிய ஒரே புத்தகம்

கல்விப் பகுதியினரால் பாடசாலைகளில் எண்கணிதப் பாடப்புத்தகமாகப் பாவிப்பதற்கு அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

பக்கம்: 640 விலை: ரூபா 6-00

இலகுமுறை அட்சர கேத்திர கணிதம்

கணிதம் படிப்பதற்கேற்ற சிறந்த புத்தகம்

6ம் வகுப்பு	பக்கம் 164	விலை 1-75
7ம் ,,	,, 148	,, 2-00
8ம் ,,	,, 200	,, 3-00

புதுமுறைப் பொதுவிஞ்ஞானம்

அரசினரின் புதிய யுனெஸ்கோ பாடத் திட்டத்திற்கமைய எழுதப்பட்டுள்ளது.

6ம் வகுப்பு	பக்கம் 272	விலை 3-00
7ம் ,,	,, 264	,, 3-00
8ம் ,,	அச்சில்,	

விபரங்கட்கு:

கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம் கண்டி

போன்: 221 போன்: 7196

தந்தி: "கலைவாணி" தந்தி: "கலைவாணி"

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்)(மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணா விஜிதா ஜெமினி
(திருமலை) (ஹட்டன் (ராகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.....
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்
★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி.எஸ்.துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை–வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.
இசை டி.ஆர். பாப்பா
டைரக்ஷன் ஜி. கே. ராமு
நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்
பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா
(யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் — சாவித்திரி
நடித்த
வணங்காமுடி

தமிழ் வளர்த்த சான்றோர்கள்: 12

எத்திசையும் இசை பரப்பும் முத்தமிழ்ப் பெரும் புலவர்
அருட்திரு

விபுலாநந்த அடிகளார்

(27-3-1892 — 19-7-1947)

— வித்துவான் க. வேந்தனார் —

எச். எஸ். ஸி. வகுப்பில் பயிலும் மாணவர்களுக்குப் பயன் தரத்தக்க முறையில் 'தமிழ் வளர்த்த சான்றோர்கள்' என்ற வரிசையில் தமிழ்ப் பேரறிஞர்கள் சிலரைப்பற்றிய கட்டுரைகள் இங்கு தொடர்ந்து வெளிவரும்.

அருட்திரு விபுலானந்த அடிகளார், தமிழே உருவமான தவப்பெருஞ்சான்றோர். உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் உவகை அளிக்கும் தெள்ளு தமிழ்ச் சிலப்பதிகாரமென்னும் திருப்பாற் கடலைத்தம் உள்ளொளி மத்தினால் கடைந்து, அள்ளுசுவை யாழ்நூல் என்னும் அமிழ்தத்தை, அருந்தமிழ் அன்னைக்கு, விருந்தாக அளித்தருளும் அருள் வள்ளல் விபுலாநந்த அடிகளாரேயாவர்.

இவர் எட்டுத்திக்கும் இசை போக்கும் ஈழத் திருநாட்டின் கிழக்குமாவட்டமாய் விளங்கும் வண் தமிழ்பண்ணையாகிய மட்டக்களப்பைச்சார்ந்த காரேறு மூதூரில் தோன்றியவர். தந்தையார் சான்றோர் பரவும் பழம்பெருங்குடித் தோன்றல் சாமித்தம்பியார். தாயார் எண்ணருந்தவச்செல்விகண்ணம்மையார். அடிகளாரின் பிள்ளைப் பெயர் மயில்வாகனன். அவர் பள்ளிப் பருவந்தொட்டே கல்வியில் வல்லவராய் விளங்கினார். அவர் படிப்படியாய்ப் படிப்பில் உயர்ந்து 1916-ம் ஆண்டு மதுரைப் பண்டிதத் தேர்வில் வெற்றிபெற்றார். 1919-ம் ஆண்டளவில் பி. எஸ். ஸி. தேர்விலும் வெற்றிபெற்று, இருமொழிப்பட்டதாரியாய் இலங்கினார்.

இங்ஙனம் இருமொழிப் புலமையாளராய் விளங்கிய அடிகளார் (1920) மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராய் வீற்றிருந்து தமது கலையொளியைப் பரப்பிப்பணி செய்யும் பெருவாழ்வைப் பெற்றார். அடிகளாரின் புலமை யாழ்ப்பாணத்தில் மலர்ந்தது. அடிகள் மிக ஆர்வத்துடன் தமிழ் தொண்டு புரிய முனைந்தார். யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைப் பல அறிஞர்களின் துணை கொண்டு நிறுவினார். தமிழ் மொழிக்குப் பணிஆற்றவேண்டும் என்றஆர்வம் அடிகளாரை ஆட்கொண்டது. தம் உள்ளத்தில் ஊற்றெழுந்த கலையாக்கப் பணியை நிறைவு செய்யத் துணிந்த அடிகளார் (1922) துறவுபூணும் எண்ணத்துடன் சென்னையில் உள்ள இராமகிருஷ்ண மடாலயத்தினுக்குச் சென்றார். தொண்டு செய்யும் வாய்ப்பைத் துறவுவாழ்வினால் பெற்றுத்தூய்மையடைந்த அடிகளார் (1924) விபுலானந்தர் என்னும் துறவறப்பெயரைத் தாங்கித் தவநெறிப்படர்ந்து தண்ணார் தமிழ்வாழ்வே தம் வாழ்வாகக்கொண்டார்.

அடிகளாரின் தமிழ்ப்புலமையும் ஆராய்ச்சித்திறனும் தவத்திருநிரம்பிய தூயவாழ்வும் தென்னாட்டுத் தமிழ்அறிஞர்களின் உள்ளத்தை அள்ளியது. ஆண்டுநிறைவுவிழாப் பேரவைகளிலும், ஆராய்ச்சிமன்றங்களிலும், ஆயிரம் ஆயிரமாகக் கூடி அடிகளாரின் ஆரமுதம்போன்ற ஆய்வுரைகளை தென்னாட்டறிஞர்கள் பன்னாட்கள் கேட்டுக் கேட்டுப் பாராட்டினார்கள். அந்நாட்களில்தான் அடிகளின் இலக்கிய நுகர்வும், ஆராய்வுத் திறனும் புதுப்புது வழிகளில் நுழைந்து புதிய நூல்களைப் புனைந்துதவும் இனிய பேற்றை ஈந்தன. ஆங்கிலவாணி என்னும் அரிய மொழிபெயர்ப்பு இலக்கியமும் பூஞ்சோலைக் காவலன் என்னும் புதிய இலக்கியப் புதையலும் அடிகளால் அருளப்பட்டன.

அடிகளாரின் ஆராய்ச்சி உள்ளம் சிலப்பதிகாரத்தில் சென்றது. முத்தமிழ்க் காப்பியத்தை ஆக்கியருளிய இளங்கோவடிகளின் துறவுள்ளத்தில் ஊற்றெழுந்த இசைத்தமிழ் புலமையில், இணைந்து குழைந்து நுழைந்து, நுணுகிஒன்றுபட்ட விபுலானந்தஅடிகளாரின் துறவுள்ளம் வியத்தகு யாழின் அமைப்பு முறைகளைக்கண்டு, செழித்தது. செழித்தஉள்ளொளியால் சிறந்த அடிகளார் தாம் ஆய்ந்து கண்ட யாழின் அமைப்பு நுட்பங்களைஎல்லாம் சென்னைப் பல்கலைக்கழக ஆதரவில் நிகழ்ந்த ஆராய்ச்சிப் பேரவையில், (1936) எடுத்து விளக்கினார். தமிழரின் இசை ஓவியம் தலைப்பில் அடிகளார் நிகழ்த்திய அவ்வாராய்ச்சிப் பேருரை கேட்ட தமிழ்ப்பேரறிஞர்கள் பலரும் எல்லையில்லா ஆர்வமுடன் அடிகளாரை நோக்கி, இன்று நீங்கள்சொல்லிய நுட்பங்களை எல்லாம் கிரட்டி ஓர், நூலாகத் தரல் வேண்டும் எனவேண்டினார்கள்.

இவ்வண்ணம் அடிகளாரை அறிஞர்கள் ஊக்கிய காலத்திலேதான் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசிரியராக வீற்றிருந்து தமிழ்ப் புலமை நடாத்தினார். பின்தொடர்ந்து பத்தாண்டுகளாகத் தாம் ஆராய்ந்து கண்ட முடிவுகளையெல்லாம் நிரல்பட அமைத்து அடிகள் ஆக்கியருளிய யாழ்நூலை 1947-ம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆராக்காதலுடன் வெளியிட்டு அறிஞர் உலகின் வாழ்த்தையும் மதிப்பையும் பெற்றுக்கொண்டது. யாழ்நூல் வெளியிட்டபோது அடிகள் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக வீற்றிருந்தார்கள் என்பதை எண்ணி நாம் இன்பமடையவேண்டும்.

அடிகளாரின் பேச்சைப் போலவே அவரின் பாட்டும் இனியது. தேன் சொட்டும் இழுமென் மொழிகளால் அடிகள் எழுதிய உரைநடையில் அமைந்துகிடக்கும் இன்னோசையும் பொருட்செறிவும், அடிகளாரின் உளத்திலே நிலவும் இறவாத இன்ப அன்பை எடுத்துக் காட்டுவனவாகும்.

"கூதிர் காலங் கழிந்தது.
இளவேனிற் காலம் வந்தது
செடிகொடிகள் தளிரீன்று
முகையரும்பிப் பூவலர்ந்தன"

என்பது அடிகளாரின் உரை நடைக்கோர் எடுத்துக்காட்டாகும்.

அடிகளாரின் செய்யுள் இன்பம் இளங்கோவடிகளின் செய்யுள் இன்பம் போலவே மிக மிக இனியது.

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு
வாய்த்தமல ரெதுவோ?
வெள்ளைநிறப்பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

* * *

வேலை முகட்டில் கதிர்
எழுமுன்
விரைந்து பறித்த புது
மலரால்
கோலமுறவே புனைமாலை
யார்க்கோ எங்கள்
குலக்கொழுந்தே.

எனவரும் இக்கவிதைகளை நோக்குக. அடிகளாரின் அருளுள்ளம், கவிதைத் தொடர்களில் உயிர்பெற்று நின்று உலாவுவதைக் காண்கின்றோம்.

அடிகளார் ஆக்கியருளிய மதங்கசூளாமணி விலைமதிக்க முடியாத முழு மாணிக்கம் போலநின்று நாடகத் தமிழை வாழ்விக்கின்றது. ஆங்கிலவாணி அமிழ்த ஊற்றுப்போல புலவர் போற்றி நுகரும் புலமை விருந்தாக்கப் பொலிகின்றது. விவேகானந்த ஞான தீபம், வீறுகொண்ட ஞான நிதியாக விளங்குகின்றது. நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, முன்னெவரும் கண்டிராத உயர்ந்த வாழ்க்கை உண்மைகளை வடித்து வழங்குகின்றது.

இங்ஙனம் தமிழ் மொழியை வளம்படுத்தற்காக தமமால் ஒல்லும் வகையால் எல்லாம் உழைத்துழைத்து உள்ளஞ் செழித்து அருள்வள்ளலராகிய விபுலானந்த அடிகளாரை எம் பொன்னாடாகியஈழமும்அன்னை நாடாகிய தென்னகமும் வாழும் வண்ணம் வழங்கியருளிய மட்டக்களப்புத் தமிழகத் தரசை வாழ்த்துவோமாக.

பெரிய வெள்ளி கரிய வெள்ளி ஆனது

—வி. என். பி.—

வடக்கு, தெற்கு பிணக்குகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மட்டும் புதியனவல்ல. சுமார் 100 வருடங்களுக்கு முன்பு அவை அமெரிக்காவிலும் அட்டகாசம் புரிந்து ஒரு பெரும் உள் நாட்டு யுத்தத்தையே கிளப்பிவிட்டன. அமெரிக்காவின் மிகப் பிரபலமான ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் உயிரையும் அவை பலி கொண்டன.

1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் திகதி. அன்று தான் பெரியவெள்ளிக் கிழமையும், ஜனாதிபதி லிங்கனும் திருமதி லிங்கனும் வாஷிங்டன் நகரிலுள்ள ஒரு பெரிய நாடக மண்டபத்தில், 'எமது அமெரிக்க மைத்துனன்' என்ற நாடகத்தில் லயித்துப்போயிருந்தனர். ஒருகையில் துப்பாக்கியும் மற்றக்கையில் பிச்சுவாகத்தியுமாக எவருக்கும் தெரியாமல் மண்டபத்துக்குள் நுழைந்தான் ஜோன் வில்க்ஸ் பூத் என்பவன். மெல்ல மெல்ல லிங்கன் இருந்தஆசனத்துக்குப் பின்னால் வந்தான். நாடகத்திலேயே முழுகிப் போயிருந்த சபையில் எவரும் அவனைக் கவனிக்கவில்லை. திடீரென்று வெடிச்சத்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். லிங்கன் முகம் குப்புற விழுந்துகிடந்தார். பெரியவெள்ளிக்கிழமை கரிய வெள்ளிக் கிழமையாகிற்று.

இக்காலத்தில் 'மிஸ்டர் அமெரிக்கா' 'மிஸ்டர் இங்கிலாந்து' என்று போட்டிகள் நடக்கின்றனவல்லவா? லிங்கன்வாழ்ந்த காலத்தில் 'மிஸ்டர் அவலட்சணம்' என்று ஒரு போட்டி நடந்திருந்தால் கட்டாயம் லிங்கனே அதில் வெற்றிபெற்றிருப்பார். அவருடைய 6 1/2 அடி உயரமும், குச்சிபோல கூம்பி ஒடுங்கியதேகமும், குழிவிழுந்த கன்னங்களும், பறட்டைத் தலைமயிரும் அவரை அப்பதவிக்கு மிகச்சுலபமாக ஏற்றியிருக்கும்.

சிறுவயதில் மிகவும் கஷ்டப்பட்ட லிங்கன் தமது சொந்த பிரயாசையால் 28 வயதில் நியாயவாதியாகத் தேறினார். ஆனால் அவருக்குக் கிடைத்த வழக்குகள் மிகச் சொற்பம். அவர் அமர்த்தப்பட்ட ஒரு வழக்கில் எட்வேட் ஸ்டான்டன் என்ற பிரபல நியாயவாதி சிரேஷ்ட நியாயவாதியாக அமர்த்தப்பட்டார். ஸ்டான்டனிடம் வழக்கு விஷயமாகச் சென்ற லிங்கனை அவர் அவமதித்து, கேலிசெய்து அனுப்பிவிட்டார். இந்த அவமானத்தைத் தாங்க முடியாத லிங்கன் வழக்கிலிருந்து விலகிக்கொண்டார். பிற்காலத்தில் லிங்கன் அரசியலில் புகுந்தபோதும் ஸ்டான்டன் அவருடைய பிரதம வைரியாக விளங்கினார். இப்பேர்ப்பட்ட ஸ்டான்டனை, லிங்கன் ஜனாதிபதியானதும், தமது யுத்த மந்திரியாக்கிக்கொண்டார்.

மனித வாழ்க்கையையும், அதன் இன்ப துன்பங்களையும் நன்றாக உணர்ந்த லிங்கன் சாந்தமே உருவெடுத்தவராக விளங்கினார். ஒரு சிறு உயிரானது துன்புறுத்தப்படுவதைக்கண்டு சகிக்கமாட்டார். ஒருமுறை அவருடைய 15-வது வயதில் உயிர்க்கொலையைப்பற்றி அவர் செய்த பிரசங்கம் கூடியிருந்த எல்லோரையும் கண்ணீர் உகுக்கும்படி செய்துவிட்டதாம்.

லிங்கனைப்பற்றிய கதைகள் அநேகம். அதைவிட அநேகம் லிங்கன் சொல்லிய கதைகள். நிறைய ஹாஸ்ய உணர்ச்சி படைத்தவராதலால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு கதையைச்சொல்லி எத்தகைய இக்கட்டான நிலைமையையும் சமாளித்துக் கொள்ளுவார்.

அமெரிக்க காங்கிரசுக்கு தேர்தல் நடந்தது. லிங்கனுடன் போட்டியிட்ட ஒரு பாதிரியார் பிரசாரக்கூட்டம் வைத்தார். லிங்கனும் அதற்குப் போயிருந்தார்.

'சீரான வாழ்க்கை நடத்தி, ஒரு நல்ல மனிதனைக் காங்கிரசுக்கு அனுப்பி, அதன் மூலம் மோட்சத்துக்குப்போக விரும்புகிறவர்கள் எல்லாரும் தயவு செய்து எழுந்து நில்லுங்கள்' என்றார் பாதிரியார்.

லிங்கனைத் தவிர மற்ற எல்லோரும் எழுந்துநின்றார்கள். பாதிரியார் சொன்னார்: 'சரி, ஒழுக்கமில்லாத ஒரு பாபியை காங்கிரசுக்கு அனுப்பி நரகம் செல்ல விரும்புகிறவர்கள் எழுந்து நில்லுங்கள்!'

லிங்கன் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

பாதிரியாருக்குக் கோபம் வந்துவிட்டது. லிங்கனை நோக்கி, 'ஓய், நீர் மோட்சத்துக்குப்போகவும் விரும்பவில்லை, நரகத்துக்குப் போகவும் விரும்பவில்லை. பின் எங்கேதான் போகப்போகிறீர்?' என்றார்.

லிங்கன் சாவதானமாக எழுந்துநின்று, தமது தொப்பியைக் கையில் எடுத்தவாறே, 'நான் காங்கிரசுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டு நடந்தார்.

110 மைல் வேகம் செல்லும் சொகுசுக் கார்

மணிக்கு 110 மைல் வேகம் செல்லக்கூடிய பயணத்துக்கான சொகுசான "டோல்" காரை பிரிட்டனிலுள்ள மூன்று நிறுவனங்கள் செய்துள்ளன.

பிரிட்டனிலும் வெளிநாடுகளிலும் பெயர்பெற்ற "டிரையம்ப் டிஆர் 4 பந்தயக்காரின் பாணியில் இது கட்டப்பட்டுள்ளது. "டோல்" கார் வெளி அமைப்பில் கிட்டத்தட்ட டிஆர் 4 காரைப்போலவே இருக்கிறது.

"டோல்" காருக்கு மைலுக்கு 25கலன் பெட்ரோல் செலவாகும்.

யாழ் நகர மக்களுக்கு ஓர் நற்செய்தி!

* வில்லியம்ஸ் பிஸ்கட்ஸ்
* தங்கானா தேயிலை
* ரோஸ் பிரூன்ட் இனிப்பு, ரொபி ஆதியன
* சால் பார் சோப்
* குமாரி சந்தன சோப்
* பிருங்கோ சொக்லட்ஸ்
* கொலிபிறி ஒடிக்கோலோன்
* எஸ். ஜே. ஜாம், சோஸ்

ஆகியவற்றிற்கு நாங்கள் ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறோம்.

உங்கள் ஆதரவை வேண்டும்:- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நீலமும் பயிரும் நீர்ப்பாசன வசதிகளும்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் விளைவிக்கப்படும் வெங்காயத்தில் 94 விகிதமும், மிளகாயில் 40விகிதமும் விளைவிக்கும் தமிழர் இவ்வுற்பத்தியை மேலும் கூட்டமுடியாதா? அரிசி, சீனி, மிளகாய், புளி, கோப்பி என்பனவற்றுக்காக இன்னமும் 40கோடிரூபா மட்டில் இலங்கையிலிருந்து நாம் வெளியே அனுப்பிக்கொண்டுதானிருக்கிறோம். இவையெல்லாம் நாம் பயிரிட்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களாயிருப்பதை எண்ணிப்பார்க்கும்போதுதான் இன்றைய உலகப் போக்கில் நாம் எங்கே நிற்கிறோம் என்பது புலப்படுகிறது.....

வேலைக் குறைவு

அடுத்து, வேலைக்குறைவை எடுத்துக்கொண்டால் மாதச் சம்பளம் பெறுவோரைத்தவிர ஏனையோரை வியாபாரம், விவசாயம், தொழில்செய்வோர் எனப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வியாபாரம் செய்வோருக்குப் போதியவேலை உண்டு. ஆனால் காலநேரத்தைக் கொண்டு விவசாயம் அல்லது தொழில் செய்வோருக்குப் போதிய வேலை இல்லை என்று எண்ணுகின்றேன். உதாரணமாக கமம் செய்வோர் ஒரு வருடத்தில் வேலை செய்யும் நேரத்தைக் கணக்கிட்டால் சராசரியாக நாள் ஒன்றுக்கு 4 மணித்தியாலம் தான் வேலை செய்கின்றனர். கடல் தொழிலில் ஈடுபடுபவர்கள் வருடத்தில் 3 மாதம் கடல் தொழிலுக்குச் செல்வதில்லை. இப்படிப்பட்டவர்கள் உற்பத்தியைப் பெருக்க உதவுவர்; ஆனால் நேரத்தை வீணாக்குகின்றனர். ஆதலால் வேலை குறைவாயுள்ளவர்கள் தமது தொழிலைப் பெருக்க வேண்டும். தொழில் செய்யாத நேரத்தில் குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடவேண்டும். இது செய்ய முன்வந்தாலே ஒவ்வொரு குடும்பத்தின் வருமானமும் உயரும்; அதனால் சமுதாய வருமானம் உயர்ந்து வாழ்க்கைத்தரமும் உயரும்.

சனப்பெருக்கமும் வேலையின்மையும்

எனவே எங்களுக்குள் இருக்கும் இரு பெரும் பிரச்னைகளில் வேலைக் குறைவைச் சுலபமாகத் தவிர்க்கலாம். ஆனால் வேலையில்லாத் திண்டாட்டம் இப்போது தலைவிரித்தாடாவிடினும் காலகதியில் இப்பிரச்னை நெடிது வளர்ந்து எமது பகுதியில் பசி, பட்டினி, வறுமை போன்றவற்றிற்கு வித்திடக்கூடும். ஒவ்வொரு வருஷமும் 50000 தமிழ்க் குழந்தைகள் பிறக்கின்றனர்.; ஆனால் 15000 தமிழரே இறக்கின்றனர். எனவே வருடா வருடம் எமது சனத்தொகை 35000 ஆக அதிகரித்து வருகின்றது. சனத்தொகை பெருகிவரும் அளவுக்கு உணவு உற்பத்தி கூடவில்லை. ஆதலால் வருங்கால சந்ததியினரின் நன்மை கருதி யாவது அதனைப் பெருக்க வேண்டியது கடமை.

வேலை கிடைக்கக்கூடிய வழிகள்

தமிழ் மக்களுக்கு எவ்வகையில் வேலைகளைத் தேடிக் கொடுக்கலாம் என்ற கேள்விக்கு விடைகாணவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்ப்பதற்கு எமது அறிவாற்றலுடன் இயற்கை வளத்தைத் திரட்டி உபயோகிப்பதுதான் ஒரே ஒருவழி. இயற்கை வளம் என்னும் போது நிலத்தையும் நீரையுமே சுட்டிப்பாகக் குறிப்பிடுகின்றேன். விவசாயத்தை விருத்திசெய்து தொழில்களைப் பெருக்கினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாம். ஆனால் நாம் மனதிற்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமும் ஒன்றுண்டு. அதாவது எங்கள் நோக்கம தமிழ் மக்களைப் பொருளாதாரச் சுதந்திரமுள்ளவர்களாக்குவதேயன்றி வேலையில்லாத் திண்டாட்டத்தை மாத்திரம் தவிர்ப்பது அல்ல.

உணவு உற்பத்தி

எமக்கு உடனடியாக வேண்டியது உணவு. எனவே உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உணவு உற்பத்திக்கு உழுதொழில் பெருகவேண்டும். அதனாற்றான் பாரதியும் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று கூறினாரேயொழிய தொழிலுக்கும் உழவுக்கும் வந்தனை செய்வோம் என்று கூறவில்லை. இந்த உண்மையை உணர்ந்துதான் இந்திய அரசாங்கம் அதன் முதலிரு ஐத்தாண்டுத் திட்டங்களிலும் பெரும்பகுதிப் பணத்தை விவசாய விருத்திக்குச் செலவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய 40 வீதம் விவசாயத்திற்கும் 60 வீதம் ஏனைய தொழில்களுக்கும் செலவிடப்படுமென எதிர்பார்க்கின்றனர். இது மாதிரித் துறைகளில் நாம் இந்தியாவைப் பின்பற்றுவது விவேகமானதாயிருக்கும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர் இலங்யின் குடிசனத்தொகையில் 17 வீதமாவர். இவ்விரு மாகாணங்களினதும் நிலப்பரப்பு இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 29 வீதமாகும். ஆதலினால் 17 வீதக் குடிசனம் 29 வீத நிலப்பரப்பில் வாழ்வதானால் அம்மக்களின் பொருளாதார முன்னேற்றம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

விவசாயத்தை விருத்திசெய்தாலும், தொழில்களைப் பெருக்கினாலும் தமிழராகிய நாம் செய்யவேண்டிய இரு கருமங்கள் உள்ளன. ஒன்று, கூடிய மட்டில் தமிழ் மக்களால் உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களையே தமிழ் மக்கள் உபயோகிக்க விரதம்பூணவேண்டும். இல்லையேல் உற்பத்திக்கு ஊக்கமிராது; ஊக்கமளிக்கப்படாவிடில் உற்பத்தி குன்றும். மற்றது, பொருட்கள் உற்பத்தியாக்கப்படும்போது முதலில் தமிழர் தேவைக்கு வேண்டியவற்றை உற்பத்தியாக்கவேண்டும். அதன்பின் ஏனைய இலங்கை மக்கள் தேவைக்கும் பிறநாடுகள் ஏற்றுமதி செய்வதற்குமான பொருட்களை உற்பத்திசெய்யவேண்டும்.

இறக்குமதியும் ஏற்றுமதியும்

தமிழ் மக்களுக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் தமிழ் மக்கள் உற்பத்திசெய்ய முடியாமலிருக்கும். அப்படியாயின் சில பொருட்கள் இறக்குமதி செய்யப்படவேண்டும். இறக்குமதிசெய்யும் பொருட்களுக்குரிய பணத்தை நாம் ஏற்றுமதிசெய்யும் பொருட்களின் பணத்திலிருந்துகொடுக்க வேண்டும் சுருங்கக் கூறினால், இறக்குமதியிலும்பார்க்க ஏற்றுமதி கூடியதாயிருக்கவேண்டும். இந்நிலை வரும்பொழுதுதான் எமது பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்படும்.

விவசாய விருத்தி

எமக்குப் போதிய நிலம் இருப்பினும் அதில் பெரும்பாகம் காடாக இருக்கின்றது. காடு முழுவதையும் அழித்துப் பயிரிட்டால் அமெரிக்காவில் நடந்ததுபோல் காடுகளாக இருந்த நிலம் வனாந்திரமாக மாறவும்கூடும். எனவே ஒரு புறம் பயிரிடி, மற்றப்புறம் காடு வளர்க்கவும் வேண்டும். ஆனால் நாம் குடியிருக்கும் பகுதிகளிலுள்ள நிலம் முழுவதும் பயன்படுத்தப்படவேண்டும். ஒரு அங்குல நிலம்தானும் வீணாக்கப்படாது. நிலத்தை வீணாக்காது பயன்படுத்த மக்களைத் தூண்டும் நோக்கத்துடன் பிரயோசனம் தராத நிலங்களுக்குக் கூடியவரி விதிக்க வேண்டும் என்று எண்ணினேன். இப்படி வரிவிதித்தால் நிலச் சொந்தக்காரர் ஒன்றில் நிலத்தைப் பிரயோசனம் தரக்கூடியதாக்குவர் அல்லது நிலமற்றோருக்கு அவற்றை மலிந்த விலையில் விற்பர். இத்திட்டத்தை மயிலிட்டிக் கிராம சபையில் அமுலுக்குக்கொண்டுவர நான் எண்ணியபோதிலும் இதை நடைமுறையில் கொண்டுவரமுன் அக்கிராம சபையின் தலைவர் பதவியிலிருந்து விலக நேர்ந்தது. எனினும் இப்படி நடவடிக்கை எடுக்குமாறு எங்கள் உள்ளூராட்சி மன்றங்களை நாம் தூண்டவேண்டும். இச்செயலால் மேய்ச்சல் தரைகள் குறைந்தவிட நேரிடும் என்று பயப்படவேண்டியதில்லை. ஏனெனில் ஊர் பொதுமேய்ச்சல் தரைகளை உண்டாக்கி மேய்ச்சல் தரைக்கான குறையைத் தீர்க்கலாம்.

இயந்திரங்களும் நவீன முறைகளும்

விவசாயத்திற்குத் தற்காலத்திற்கேற்ற இயந்திரங்களை உபயோகிக்கவேண்டும். இயந்திரங்கள் உபயோகிப்பதற்குத் தோட்டங்களைப் பெரிதாக அமைத்தல் அவசியமாகிறது. எனவே தமிழ் மக்கள் கூட்டுறவு முறையில் கமம் செய்தால் இருவகை நன்மைகளைப் பெறலாம். ஒன்று நமக்குள் ஒற்றுமை ஏற்படும். மற்றது உற்பத்திச்செலவு குறைந்து உற்பத்தி பெருகும். இயந்திரங்களை இயக்குவதற்கும் பழுது பார்ப்பதற்கும் சிலருக்கு வேலை கிடைக்கும்.

விவசாயத்தில் நவீன முறைகள் கையாளப்படவேண்டும்; இல்லையேல் உற்பத்தி குன்றி விலை அதிகரிக்கும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் நெல் விளைவிக்கப்படும் நிலம் இலங்கை முழுவதிலும் நெல் விளையும் நிலத்தில் மூன்றிலொன்றாயிருந்தும் இப்பகுதிகளில் நெல்விளைவு ஏக்கருக்குச் சராசரி 38 புசல்தான். இத்தொகை மிகக் குறைவானது. பர்மா, யப்பான் முதலிய தேசங்களில் ஏக்கருக்கு 120, 140 புசல் நெல் விளைவிக்கப்பட்டால் எமது நாட்டில் அப்படி ஏன் விளைவிக்க முடியாது? நவீன முறைகளை மாத்திரம் கையாளுவது போதாது. எம்மில் சிலர் நெல்விதைக்கும் காலத்திலும் அரிவுவெட்டும் காலத்திலும்தான் வயல்களுக்குச் செல்கிறோம். இது தவறு. நாம் பரந்துகிடக்கும் காடுகளை நாடாக்கி அங்கு வாழாவிட்டால் எமது நிலங்கள் பறிமுதலாகிவிடக்கூடும்.

நீர் வசதிகள்

நிலமுண்டு நீரில்லையே என்று கேட்கலாம். உண்மையாக மழைநீர் குறைகிறது; கிணற்று நீரும் குறைகிறதே என்றும் வினவலாம். நீர்குறைவதற்குக் காரணம் என்ன? கடந்த நூறு ஆண்டுகளாகத் தமிழ்ப்பகுதிகளில் பெய்த மழைக்கு வரைபடம் கீறினால், 1954, 1957, 1959ஆம் ஆண்டுகளைத் தவிர ஏனைய ஆண்டுகளில் மழை படிப்படியாகக் குறைந்து வருவதைக் காணலாம். பூமியில் தங்கி நிற்கும் நீரில் ஒருபகுதி ஆவியாகச்சென்று பின் மழையாக வருகிறது என்பதை மறந்துவிட்டோம். பூமிக்குள் ஊறிச்செல்லும் நீரைத்தான் மீண்டும் கிணறுகளிலிருந்து அள்ளுகின்றோம். ஆனால் எங்கள் கிணறுகளுக்கும் கடலுக்கும் இணைப்பு எதுவும் இல்லை. ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் வெள்ளம் என்றதும் அருவருக்கப் பழகினோம். வெள்ளத்தை வாய்க்கால்கள் வெட்டுவித்துக் கடலுக்குச் செலுத்தினோம். இன்று கடலில் அதிகம்மழை பெய்கிறது; நிலத்தில் மழை குறைவு. ஆதலினால் பெய்யும் மழையை கடலுக்குச் செல்லவிடாது தடுக்கவேண்டும். ஆதிகால மன்னர்கள் குளங்களை வெட்டுவித்தனர். குளங்கள் வெட்டுவித்ததனால் நீர்ப்பாய்ச்சவும் நீரைத்தேக்கிவைக்கவும் அவை பயன்பட்டன. மழை நீரைத் தேக்கி வைப்பதற்கு நிலத்தின் அமைப்பாராய்ச்சி (Topographical survey) செய்யவேண்டும். இரண்டு மூன்று உள்ளூராட்சி மன்றங்கள் ஒருங்கு சேர்ந்து நிலத்தின் அமைப்பை ஆராய்ச்சி மூலம் அறிதல் நன்று.

மழையும் கிணறும் ஒருபுறமிருக்க, தமிழ்ப்பகுதிகளிலுள்ள குளங்களையும் சிறியஆறுகளையும் நாம் மறந்து விடலாகாது. தமிழ் மன்னர்களை நீர்ப்பாசன வசதிகள் செய்துகொடுக்கவில்லை என்று அவர்களில் குறைகூறமுடியாது. சங்கிலிக் கோர்வைபோல் குளங்கள் வெட்டுவித்து அவற்றுள் ஒன்று நிரம்பி எஞ்சுகின்ற நீர் மற்றக் குளத்திற்குச் செல்லும் வகையில் குளங்களை அமைத்த பெருமை அம்மன்னர்களைச் சார்ந்ததே! பல குளங்கள் அழிந்தொழிந்து கிடக்கின்றன. இவற்றைத் திருத்தியமைக்க வேண்டும். தமிழ்ப்பெரியார் கௌரவ பாலசிங்கம் அவர்கள் முப்பது ஆண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணக் கடலையும், தொண்டைமான் ஆற்றையும் நல்லநீர் வாவிகளாக்கவேண்டுமென்று கூறினார். இவ்விரு வேலைகளும் இப்போ நடைபெறுகின்றன. இவற்றைவிட இதுபோல கிழக்குமாகாணத்திலும் செய்யவேண்டிய வேலைகள் உள்ளன. இவற்றைவிட எமது பகுதிகளிலுள்ள சிற்றாறுகளையும் உபயோகிக்கவேண்டும். மன்னார் பகுதியிலுள்ள பறங்கி ஆற்றில் அணைகட்டினால் ஆயிரக்கணக்கான ஏக்கர்நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சலாம். மகாவலி கங்கையை வடமாகாணத்திற்கூடாகச் செல்லுமாறு கால்வாய் வெட்டித் திருப்பினால் இன்னும் எவ்வளவோ நிலத்திற்கு நீர் கிடைக்கும். எனவே நீர்வசதிக்குறைவு நமக்குண்டு என்று கூறுவது சரியல்ல.

(இக்கட்டுரை அடுத்த இதழில் முற்றுப் பெறும்.)

இப்பொழுது தட்டுப்பாடு இல்லை!

அசல்
கொலிபிறி
ஓடிக்கோலான்

இலங்கை அடங்கிலும் எல்லா வியாபாரிகளிடமும் உடனடியாகக் கிடைக்கும்.

முக்கிய குறிப்பு:—அசல் உற்பத்திதானா என்பதாக திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடியிலுள்ள சிவப்பு, வெள்ளை முத்திரை உடைபடாமல் இருக்கிறதா என்பதைக் கவனியுங்கள்.

சிறந்த ஜேர்மன் ஓடிக்கோலானையே பாவியுங்கள்.

— கொலிபிறி வேண்டுமென்று கேளுங்கள்

வர்த்தக விசாரணைகளுக்கு
ஒவ்வொரு நகரிலும், இந்தப் பொருளை ஸ்ரொக்செய்ய விரும்பும் விற்பனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

ஏஜெண்ட்ஸ்

ஆவ்ரா அன் கம்பெனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு. போன்: 7211 & 7212

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

உயிர் பெற்றெழுந்த அற்புதம் கூறும் கதை

கிறிஸ்துவின் விசுவாசத்திலிருந்தே கிறிஸ்துமதம் உற்பத்தியாகின்றது. அது, சில தனிமனிதருடைய எண்ணமாய் அபிப்பிராயமாய் இல்லாமல் உலகிலேயே மிகப் பெரியதும் விஸ்தாரமுள்ளதுமாகிய ஒரு சபையை தோற்றுவிக்கக்கூடிய பலம் பொருந்திய நிச்சய உணர்வாகியிருக்கிறது. யேசுநாதசுவாமிகள் மரித்து உயிர்பெற்று எழுந்த அற்புத சம்பவத்தின் ரகசியங்கூட இந்த அன்பின் சக்தியேயாம். 'அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு' என்பது வள்ளுவர் வாக்கு. யேசுநாதரின் ஒவ்வோர் என்பும், சிந்திய ஒவ்வொரு துளி இரத்தமுமே உயிர்துடிக்கப் பேசியிருக்குமே! தின்ன வரும் புலியையும் அன்புடன் நேசித்த ஒரு மூவுலராஜேஸ்வரனின் சோகக்கதை தான் —கிறிஸ்து மதம்

"கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததில்லை என்றால் எங்கள் பிரசங்கமும் விருதா? உங்கள் விசுவாசமும் விருதா?" (கொரி: XV. 14) என்று புற்சாதிகளின் அப்போஸ்தவரான அர்ச்: சின்னப்பர் கொஞ்சமும் பயமின்றி வாதித்தார். எனவே, கிறிஸ்துவின் உத்தானம் எமது விசுவாசத்தைப் பூர்த்தியாக்கும் ஒரு சத்தியமல்ல. அல்லது எமது விசுவாசத்தை அங்கீகரிக்கும் ஒரு சரித்திர சம்பவமும் மாத்திரமல்ல. இதுவே கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தில் அடையாளமும், எமது இரட்சணியத்தின் ஆதிகாரணமும், எமது மதத்தின் அடிப்படை அத்திவாரமுமாயிருக்கிறது. கிறிஸ்துநாதருடைய புதுமைகள் எல்லாவற்றிலும் தலைசிறந்ததும், அதிக பிரபல்யம் பெற்றதுமாயுள்ளது அவர் மரித்த மூன்றும் நாள் தாம் வாக்குப்பண்ணியபடியே உயிர்த்தெழுந்த மகா அற்புதமேயாம். அவருடைய சத்துராதிகளாகிய யூதர் ஒருமுறை அவரை அணுகி நீர்தாம் உலகம் காத்திருக்கும் மெசியாவெனில் அதற்கு ஓர் அடையாளம் காட்டவேண்டுமென்று கேட்டபோது, அவர் தாம் மரித்த மூன்றும் நாள் உயிர்த்தெழுந்திருப்பதையே பிரபல்யமான அடையாளமாக எடுத்துக்கூறுவதை நாம் காண்கின்றோம். அம்போது வேதபாரகர்களிலும், பரிசேயரிலும் சிலர் அவரை நோக்கி, "போதகரே! உம்மிடமிருந்து ஓர் அடையாளத்தைக் காண விரும்புகின்றோம்" என்றார்கள். அதற்கு அவர் பிரதியுபகாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது, "இந்தக் கெட்ட விபசார சந்ததி ஒரு அடையாளத்தைத் தேடுகிறது. ஆயினும், யோனஸ் தீர்க்கதரிசியின் அடையாளமல்லாது வேறு அடையாளம் இதற்குக் கொடுக்கப்பட மாட்டாது. எவ்வாறெனில் மோனஸ் என்பவர் மூன்று பகலும், மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றினுள் இருந்ததுபோல, மனுமகனும் மூன்று இரவும், மூன்று பகலும் பூமியின் உள்ளத்துள் இருப்பார் (Mt: XII 39-40) தம்முயிரை மன்னுயிருக்காகக் கைவிட்டு மீண்டும் அதனைக் கைப்பற்றிக்கொள்வதைத் தம் சீடர்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தி வந்தார். "என் சீவனை மறுபடியும் கைக்கொள்ளும்படிக்கு நான் அதைக் கொடுக்கிறபடியால் என் பிதா என்னை நேசிக்கிறார். என்னிடத்திலிருந்து அதைப் பறிக்கிறவன் ஒருவனுமில்லை. ஆனால், நானாக அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு; மறுபடியும் அதைக் கைக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு" என்று யேசுநாதர் திருவுளம் செய்திருந்தார். எனவே, யேசுநாத சுவாமியின் உத்தானமே கிறிஸ்தவ சபையின் அத்திவாரம். இதுவே சரித்திர சம்பந்தமான ஆணிவேர். இதன் உற்பத்தித்தானமும் ஆரம்ப சத்தியமாம். யேசுக்கிறிஸ்துவின் உத்தானமென்னும் இம்மகா அத்திவார சம்பவத்தைப் பற்றிய விசுவாசம் இல்லாதிருக்குமாகில் திருச்சபையானது காணமில்லாக் காரியமாய்ப் போய்விடும்.

கிறிஸ்துநாதரின் உத்தான உண்மை அக்காலத்தில் இருந்த நல்மனமுள்ளவர் யாவராலும் சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பது மலை இலக்கு. ஏற்றுக்கொள்ளப்படாவிடின் கிறுஸ்து சமயம் அத்துணை விரைவாயும், விசாலமாயும் பரவியிருத்தல் கூடுமானதல்லவே. அந்நாளில் மட்டுமன்று, இந்நாளிலும் ஏன் எக்காலத்திலுமே, இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்ட சத்திய மறையானது உலகின் எல்லாத் திசைகளிலும், எல்லாச் சாதி சனங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இகபர நன்மைகளுக்குச் சிறந்த சாதனமாக நிலைபெற்று வருகின்றது.

ஆட்சேபனை

திருச்சபையின் விரோதிகள் கிறிஸ்துவின் சீவிய சரித்திரத்தில் நின்று, கிறிஸ்துவின் உத்தானத்தைத் தவிர்த்துவைப்பதற்கு எடுத்தாளும் தந்திரோபாயங்களும் அனந்தம். தங்கள் எதிர்வாதத்தை அத்தாட்சிப்படுத்தப் போலி நியாயங்கள் பலவற்றைப் புனைந்துரைக்கின்றனர். அவைகளில் ஒன்றையேனும் உற்று நோக்குவோமேயானால் உண்மை நன்கு புலனாகும். கிறிஸ்துநாதர் உண்மையாக மரித்தவராகமல் தாம்பட்ட வேதனைகளின் மிகுதியால் மெய்மறந்தவராய்க் குற்றுயிரோடு அடக்கம் பண்ணப்பட்டு மூன்றும் நாள் உணர்வு வரப்பெற்று எழுந்ததையே திருமறை உத்தானமென அழைக்கின்றனர். என்று ஒரு போலி நியாயத்தைக் கூறுகின்றனர்.

கிறிஸ்துநாதர் மெய்யாகவே மரித்தார்

கிறிஸ்துநாதர் உண்மையாகவே மரித்தார் என்பதும், அவருடைய சீடர்கள் அடக்கஞ் செய்தது கிறிஸ்துவின் உயிரற்ற சடலத்தையேயன்றிக் குற்றுயிரான கிறிஸ்துவை அல்ல என்பதும் சுவிசேஷத்தை உற்றுப் படிக்கும்போது தெட்டத் தெளிவாக விளங்கும். கிறிஸ்துநாதருக்கு ஆபத்து வந்தபோது, எல்லோரும் அவரைத் தன்னந் தனிமையிலே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். ஆனால் அவருடைய சீடர்களில் வாலிபனாக இருந்த ஒருவர் மட்டும் கிறிஸ்துநாதருடன் கல்வாரி மலை வரையும் தொடர்ந்து சென்றார். அவர் கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றித் தாம் நேரில் கண்டவற்றை எழுதி வைத்துள்ளதைப் பாருங்கள்.

"யேசுநாதர் காடியை வாங்கியபின் எல்லாம் முடிந்தது என்று வசனித்துத் தலை சாய்த்துப் பிராணனை ஒப்புக் கொடுத்தார். அன்று ஒய்வுநாளின் ஆயத்த தினமாக இருந்தபடியால் ஒய்வுநாளிலே சிலுவை மரங்களில் மனித உருவங்கள் தொங்காதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடம் சென்று அறையுண்டோர்களின் கால் எலும்புகளை எடுத்துப் போட உத்தற்வு கேட்டுக் கொண்டார்கள். அப்படியே போய்ச் சேவகர் வந்து அவருடனே கூடச் சிலுவையில் அறையப் பட்டிருந்த இருவருடைய கால் எலும்புகளை முறித்த

(12ம் பக்கம் பார்க்க)

புத்தாண்டுக் கவி மலர்கள்

புத்தம் புதிய புதுஆண்டே—மனப்
பொய்கையிலே – தமிழ்
பெய்கையிலே – எங்கள்
செய்கையினில்—ஒரு
புத்தொளி பூத்திட வாஆண்டே!

—திமிகீத் துமிலன்

✶

மாதமும் மாரிமுழு மண்டலமெங் கும்பொழிய
மாதரின் கற்புநெறி மல்கவே—வேதனைசெய்
பாப மிரியவுயர் பல்லுயிரும் வாழ்வுகொளச்
சோப கிருதாண்டே, தோன்று.

—கவிஞர் மு. க. சூரியன்

✶

கூவு மின்னொலிக கோகிலம் மாந்தளிர்
கோதி நின்று குரல்கொடு வாழ்த்திடக்
காவ னங்கள் மலர்பல தாங்கியே
காத லித்துறு கண்மழை சிந்திட
மேவு மாமனை வீதி யிடந்தொறும்
மின்னும் பூரண கும்பம் மிளிர்ந்திடத்
தேவ ரூரெனத் தேசம் பொலிந்திடச்
சேர்ந் தொரின்ப நல்லாண்டு புகுந்ததே.

—கதிரேசன்

✶

நித்தம் அடைந்த இன்னல்களை
நீக்கி வரும் புத்தாண்டில்
புத்தம் புதிய ஆடைகளை
புனைந்து, சித்திரை அன்றுடனே
அத்தனை தீய கொள்கைகளும்
அடியோ டழித்து, பூமாதின்
புத்திரராக வழி வகுக்க
புத்தாண்டே துணை புரிவாயே

—சரவணையூர் மணிசேகரன்

✶

ஆண்டு பிறந்தது! அல்லல் தொலைந்தது!
மீண்டு மகிழ்ந்திடும் மாண்பு தெரிந்தது!
சோகம் பறந்தது! சோலைமலர்ந்தது!
தாகம் நிறைந்திடும் தண்மை பொலிந்தது!

—சபா. ஜெயராசா

✶

புத்தாண்டு பொலிவுடனே பிறக்கவேண்டும்.
பூமியிலே பயிரினங்கள் செழிக்கவேண்டும்.
எத்திக்கும் தமிழோசை ஒலிக்கவேண்டும் (அதன்)
எதிரிகளைப் பூண்டோடு அழிக்கவேண்டும்
தித்திக்கும் இனிய மொழி பேசவேண்டும்
திருமகளின் கலைமகளின் நேசம் வேண்டும்
முத்திக்கும் முதலுக்கும் வித்தனான
முருகனடி வேண்டி நிதம் தொழுதல்வேண்டும்

வாழுகின்ற மனிதரை நாம் மதிக்க வேண்டும்.
வருநாளைச் செல்வமவர் அணைப்பு வேண்டும்
ஆளுகின்ற கட்சிகளை அகற்ற வேண்டும் [(அடக்கி)
அரசாங்கம் மக்களுக்காய் அமையவேண்டும்
சூழுகின்ற குடிப்பழக்கம் மறக்கவேண்டும்
சுறுசுறுப்பாய் உழைத்துயரப் பழகவேண்டும்.
நீளுகின்ற துயரமெலாம் நீக்க நாங்கள்
நிலமுழுது ஏர் பிடித்துப் பயிலவேண்டும்.

—ஜீவா. நாவுக்கரசன்

புற்று நோய்க்கு ஓர் அதிசய மருந்து!

இக்கொடிய புற்று நோய்க்கு ஆயுர் வேத முறைப்படி ஆயிரக்கணக்கான நோயாளர்களின் பிணியைத் தீர்த்த

கைகண்ட மருந்து

"யோகீஸ்வர ரசம்"

புற்றுநோயால் அவஸ்தைப்படும்நோயாளர்கள் தாமதமின்றி

சுதேசவைத்தியர்

பொ. செல்லையா

அவர்களிடம் சிகிச்சை பெற ஆலோசனை செய்யுங்கள்.

கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்.

மில்க் வைற் சோப்

பாவிப்பாளருக்கும், ஆதரவாளர்களுக்கும் எமது உள்ளங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார்

527, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

தந்தி: "மில்க்வைற்"

S. R. S. ஜவுளி மாளிகை

ஆதரவாளர்களுக்கும், வாடிக்கைக்காரர்களுக்கும், நண்பர்களுக்கும் எமதுளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக!

எஸ். ஆர். செல்லத்துரை

நிர். 216, கே. கே. எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

போன்: 296 தந்தி: 'ரோகிணி'

போன்

ஞானம்ஸ் ஸ்ருடியோ படப்பிடிப்பாளர்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டுவாழ்த்துக்கள்.

17, ஸ்ரான்லி வீதி, —— யாழ்ப்பாணம்.

7067

ஆண் (மை) . . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரை அணுகி "சுவாமி, தாங்கள் ஆயிரமபேரைச் சுகித்திருக்கிறீர்களே, அவர்களில் ஒருத்தியை அடியேனுக்கு ஈந்தருளவேண்டும்" என வேண்டியபோது "பதினாயிரம் கோபிகைப் பெண்களின் இல்லங்களுக்கும் சென்று எவள் ஒருத்யின் இல்லத்தில் என்னைக் காணவில்லையோ அந்த வீட்டுப் பெண்ணை நீர் அழைத்துச் செல்லும்'' என்றார். அவ்வாறே நாரதமுனிவரும் பதினாயிரம் கோபிகைப் பெண்கள் இல்லங்களுக்கும்சென்று நுழைந்து பார்த்ததபோது ஸ்ரீமந் நாராயணன் எல்லாப் பெண்களோடும் இருந்ததைப் பார்த்து ஏமாற்றமடைந்து கண்ணபிரானிடமே திரும்பி "சுவாமி, தங்கள் ரூபலாவண்யத்தில் மனமிழந்துபோனேன் ஆதலால் அடியேனை பெண்ணுருவாக்கி ஏற்றருள வேண்டும்" என வேண்டினார். ஸ்ரீமந் நாராயணன் அவர் வேண்டுதலுக்குப் பரிந்து முனிவரை யமுனையில் நீராட்டி ஓர் அழகிய பெண்ணுருவினளாக்கி ஆட்கொண்டார். அறுபது ஆண்டு காலமாக கிருஷ்ண பரமாத்மாத்மா இவ்வாறு அப்பெண்ணை ஆட்கொண்ட காலத்தில் பிறந்த 60 புத்திரர்களுக்கும் முறையே பிரபவ, விபவ, சுக்கில எனப் பெயரிட்டனர். இதனால் தான் தமிழர்கள், ஒவ்வோராண்டும் சித்திரை மாதத்தில் அப்புத்திரர்கள் பிறந்த தினத்தை அவர்கள் நாமத்தையுடைய வருடப்பிறப்பன்று மருத்துநீர் இட்டு நீராடி புதுவஸ்திரமணிந்து குலதெய்வத்தை வணங்கிக் கொண்டாடுகின்றனர்.

ரூ. 2 லட்சம்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

பதனையும் காணக்கூடியதாக உள்ளது. தீவுப்பகுதியில் ஓரிடத்திற்கு பருத்தித்தீவு என்ற பெயர் இருப்பதும் பருத்திச் செய்கை இங்கு முன்னர் இருந்துள்ளது என்பதனைக் காட்டுகிறது. எனவே பருத்திச்செய்கையிலும், மீன்பிடித் துறையிலும் அதிக கவனம் செலுத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவிருக்கிறது. தீவுப்பகுதிகளில் அனைவரும் இத்துறையில் வேலைசெய்தால் இலங்கைத்தீவு முழுவதற்குமே எம்மால் உதவக்கூடிய நிலை வரும்.' தாம் இவ்விஷயம் சம்பந்தமாக தீவுப் பகுதிகளில் பிரசாரம்செய்து வருவதாகவும், பெருமளவில் ஆதரவு கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்ட திரு. வி. ஏ. கந்தையா புது வருடத்தில் இத்திட்டம் வெற்றியளிக்குமென எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

மரண அறிவித்தல்

இளைப்பாறிய "பிளான்டரும்" (Planter) குகராசா (கச்சேரி, யாழ்ப்பாணம்), இராசசுந்தரம், கனகம்மா, இராசமணி, சிவபாக்கியம், இராசலட்சுமி, செல்வலட்சுமி, தனலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் தந்தையும், நடராசா, பொன்னுத்துரை, சிற்றம்பலம், கந்தசாமி, நடராசா, சிவசுப்பிரமணியம், கனகசபாபதி ஆகியோரின் மாமனாருமாகிய சி. நாகலிங்கம் என்பவர் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் இன்று (14-4-63) சாயந்திரம் இரண்டு மணிக்கு அராலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

"காரணமின்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றும்படியும் அவர்கூறினர்.

பதில் மேலும் அடிகள்தான்

இன்ஸ்பெக்டர் ஒப்பத்தாவும், சில கான்ஸ்டபிள்களும் என்னை அடித்தனர். ஒப்பத்தா பலமுறை கழுத்திலும், முதுகிலும் அடித்தார். நான் "ஏன் அடிக்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்குப் பதில் மேலும் அடிகள் தான் கிடைத்தன.

'ஒரு காரணமுமின்றி என்னை அடித்ததற்கு உங்களுக்குத் தகுந்த பாடம் கற்பிப்பேன்' எனக் கூறி அவ்விடத்தை விட்டுச்சென்றேன். சப்இன்ஸ்பெக்டர் திரு. ஜோகரான் தன்னைத் தாக்கியதாக வழக்குத் தொடர்ந்த திரு. வி. ஏ. கந்தையா தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:

"தை மாதம் 5-ந் திகதி நானும் சிலரும் ஒரே வரிசையில் காங்கேசன்துறை வீதியில் வீரகத்திப் பிள்ளை அன் சன்ஸ் கட்டிடத்தின் தாழ்வாரத்தின் கீழ் மந்திரியாரின் வரவுக்கு எதிர்ப்புக் காட்டும்முகமாக நின்றோம். மந்திரியாரவர்கள் நம்மைக் கடந்து சி. டபிள்யு. ஈ. கட்டிடத்தில் நுழைந்தபின் ஒரு பேச்சாளர் பேசத்தொடங்கினர். அப்போது நாம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட ஆயத்தமானோம். அந்த நேரம் அமைதியாக இருந்தது. ஒரு குழப்பமும் இல்லை. அந்த நேரம் எதிரி எனக்கு அருகில் வந்து எனது இடது கன்னத்தில் அடித்தார். அதன் பின் என்னைத் தள்ளி நெஞ்சில் பலமாக அடித்தார். எனது கண்ணாடி விழுந்தது. அதனை எடுக்க விடவில்லை. உடனடியாக அவரது பெயரைக் கேட்டேன். அவர் தனது பெயர் ஜோகரான் எனவும், நீங்கள் என்ன செய்யமுடியும் என்றும் கூறினர். இந்த அடியின் காரணமாக என்னுடைய கன்னம் வீங்கியது. இரு பற்கள் ஆடின. பல் நொந்தது. எனது இடதுபக்கத்தில் ஒருவிதமான உணர்ச்சியுமிருந்தது. எனது நெஞ்சில் கடுமையான நோவுமிருந்தது. ஆகையால் நான் ஆஸ்பத்திரியில் சேரவேண்டியிருந்தது. என்னுடன் எம். பி. நவரத்தினமும், எம். பி. தர்மலிங்கமும் வந்தனர். காயக்காரர் வார்ட்டில் என்னை அனுமதித்தார்கள். அங்கு சத்தமும், குழப்பமுமாக இருந்தது. நான் பணம் கொடுத்து இருக்கக்கூடிய வார்ட் உண்டாவென்று கேட்க இல்லையென்று சொன்னார்கள். நான் அங்கிருப்பது கஷ்டமாக இருந்ததனால் ஆஸ்பத்திரியைவிட்டுச் சிலமணி நேரத்தில் வெளியேறினேன்.

என்னை அடிப்பதற்கு ஒருவிதமான காரணமும், நியாயமுமில்லை."

மட்டக்களப்பில் தமிழியக்கம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இராசமாணிக்கம் செய்தி

பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கவர்னர் ஜெனரலுக்கு தமிழில் அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்ப்பேசும் மக்கள் ஒத்துக்கொள்ளாத சட்டங்களையும் நிர்வாகப் பிரமாணங்களையும் அவர்கள்மேல் திணித்து அவர்களை ஆட்சி செலுத்தமுடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள் எனவே தமிழ் பேசும் மக்களுடைய மொழி, குடி, பிரதேசம் அரசியல் உரிமைகளை அவர்களுக்கு இந்நாட்டில் வாழும் சகலமக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று அரசுபுரிந்தார். உண்மையானதொரு ஐக்கிய இலங்கையை உருவாக்கலாம். பொருளாதார அபிவிருத்தியைப் பெருக்க வழிசெய்து இந்த நாட்டு மக்கள் சகோதரர்களாக வாழலாம் என்ற உண்மையை பிரதமருக்கும் அவரது கட்சி அங்கத்தவர்களுக்கும் தெரிவித்து உண்மையான சுதந்திர ஜனநாயகத்தை நிலைநாட்ட முயலும்படி வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணத்தில்

எல்லாம் தமிழியக்கம் யாழ்ப்பாணத்தில் ஐந்தாவது தினமாகத் தொடர்ந்து நடைபெற்றது. தமிழரசு மாதர் முன்னணியைச் சேர்ந்த திருமதி இராசபூபதி அருணாசலம் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், அட்வக்கேட் எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் தபால் நிலையத்திற்கு வந்திருந்து நிலைமையைப் பார்வையிட்டனர்.

வடபகுதியில் பல்வேறிடங்களிலும் தமிழ்இயக்கம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தீவுப்பகுதிகளிலும் தமிழியக்கம் நடத்தப்படுகிறது.

ஊர்காவற்றுறையில் தமிழியக்கத்தை மேற்றுக்காலை ஊர்காவற்றுறை எம் பி. திரு. வி. ஏ. கந்தையா தொடக்கிவைத்தார். திரு. வி. ஏ. கந்தையா சுகாதார அதிபருக்கு தந்தி ஒன்றினைத் தமிழில் அனுப்பி வைத்தார். தீவுப்பகுதியில் தமிழரசு வாலிப முன்னணிக் கிளைகள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

சந்திராவின்

புதுவருட வாழ்த்துக்கள்

தமிழ் நாட்டின் தனிப்பெருமை:

சந்திரா பனியன் பாக்டரியின் உன்னத படைப்புகள்

தமிழ் திரு நாட்டின் உணர்ச்சி வேகத்திலே ஒன்றிக்கும் நம் தமிழினம்

விரும்புவதும், விரும்ப வேண்டியதும்,
போற்றுவதும், போற்றப் படவேண்டியதும்,
காப்பாற்றுவதும், காப்பாற்றவேண்டியதும்,

'சந்திரா பனியன்'

எங்களின் உன்னத படைப்புக்கள்

இன்டர். அயலட். பினன். குவாலிடிகளில் தயாராகும்

டீ சேட் ஸ்போர்ட்ஸ், போலோ கலர் சேட்ஸ், R. N. B. பனியன்,
R. N. பனியன், பேபி வெஸ்ற் சன்சூட், சுவெட்டர்ஸ்

பாவிப்பிற்கும் உழைப்பிற்கும் சிறந்தவை. கேட்டுவாங்குங்கள்.

சந்திரா பனியன் தொழிற்சாலை

உரிமையாளர்: M. T. செல்லையா

பிரவுன் ரோட், :: யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.